திருக்கோயில்

"என் கடன் பணி செய்து கிடப்பதே"

ஸ்ரீ கல்யாண சுந்தரர், திருவிடைமருதூர்

மாலை 13] சாதாரண - சித்திரை - ஏப்ரல் - 1971 [மணி 7

தமிழ் நாடு அரசின் அறநிலைய
ஆட்சித்துறை வெளியீடு.

நமது தமிழக முதல்வர். மாண்புமிகு.
கலைஞர் திரு. மு. கருணாநிதி அவர்கள்

தமிழக அரசின் அறநிலைய அமைச்சர். மாண்புமிகு.
திரு. எம். கண்ணப்பன் அவர்கள்

பொருளடக்கம்

1. பசவேசுவரர்
2. திருமுறைக் கருத்தரங்கத் துவக்கவுரை
3. திருமுறைக் கருத்தரங்கச் சிறப்புரை
4. மாசிக் கடலாட்டு விழா
5. நெய் தீபத்தின் நன்மையும் கற்பூர தீபத்தின் தீமையும்
6. ஆழ்வாரும் சேதனனும்
7. எழுத்தாளரும் கடவுளரும்
8. செய்திச் சுருக்கம்
9. அறநிலையத் துறையின் பணிகள்
10. பங்குனி உத்திரத் திருவிழா
11. வழிபாட்டின் அவசியம்
12. மகாபாரதம்

சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

ஆண்டுச் சந்தாரூ. பத்து மட்டும் — தனிப்பிரதி விலை ரூ. ஒன்று மட்டும்

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புபவர்கள் "திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34" என்னும் முகவரிக்கு ரூபாய் பத்து அனுப்பி எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்களாகச் சேர்ந்து கொள்ளலாம்.

அல்லது, அவ்வவ் வட்டார அறநிலைய உதவி ஆணையாளர்களின் அலுவலகங்களிலும் மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்துதவுதல், இதழ்கள் தவறுமற் சேர்வதற்கு மிகவும் இன்றியமையாதது.

—ஆசிரியர்

மாலை 13 | சாதாரண — சித்திரை — ஏப்ரல், 1971 | மணி 7

பசவேசுவரர்

ந. ரா. முருகவேள், M. A., M. O. L.,

முன்னுரை

நமது இந்திய நாடு, தொன்றுதொட்டுச் சான்றோர்கள் பலர் தோன்றிவரும் சிறப்புடையது. அச்சான்றோர்களின் வரிசையில் பசவேசுவரர் மாட்சிமிக்க ஒரு பெரும் சிறப்பிடம் பெறுபவராவர். அவர் மிகச் சிறந்த ஓர் அருளாளர், ஞானச் செல்வர், பெருங்கவிஞர், தத்துவவித்தகர், சமயத் தலைவர், சமுதாயச் சீர்திருத்தக்காரர், ஒப்பற்ற பெரும் அமைப்பாளர், எனப் பலவகைகளில் சிறந்து விளங்கினர். அவர் உலக மக்களிடையில் சமத்துவத்தையும், சகோதரத்துவத்தையும் பரப்பினர். சாதி வேறுபாடுகளைக் கடிந்தார். ஏழை எளிய மக்களின் நலம் குறித்துப் பணியாற்றினர். ''சமவாய்ப்புச் சமுதாயக்கொள்கை'' என இந்நாளில் கூறப்படும் கருத்துக்களை, மிகப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே பரப்பியருளிய பெருமை பசவேசுவரருக்கு உண்டு எனலாம். அவர் தாம் கூறியதையே கடைப்பிடித்தார். கடைப்பிடித்து ஒழுகியதையே எவர்க்கும் கூறி அறிவுறுத்தியருளினர்.

பசவேசர் பணிகள்:

பசவேசுவரர் வருணாச்சிரம முறையின் தீமைகளைக் கடிந்தார். தீண்டாமையை ஒழிக்க முனைந்தார். ஆண் பெண் என்னும் பால்வேறுபாட்டைப் போக்க முயன்றார். பெண்களின் விடுதலைக்குப் பாடுபட்டார். சமுதாயப் பொருளாதார சமத்துவம் குறித்துப் பெரிதும் வற்புறுத்தினர். உடலுழைப்பின் மேன்மையை உணர்த்தினர். ''தொழிலே தொழுகை'' (கயகவே கைலாச) என்று போதித்தார். மக்க

ளுக்குக் கடவுளிடத்து அன்பும், தொண்டில் ஆர்வமும் ஏற்படச் செய்தார். மக்களின் மனத்திலும் சிந்தனையிலும் ஒரு பெரும் மாறுதலை நிகழ்த்தினார். சமய ஆன்மிகத் துறைகளில் ஓர் ஒருமைப்பாட்டை உருவாக்கினார். அனைத்துயிர்களின் மாட்டும் அன்பு செலுத்துவதின் அவசியத்தை யாவரும் இனிது உணரச் செய்தார்.

148689

வாழ்க்கைக் குறிப்புகள்:

இத்தகைய பல சிறப்புக்களையுடைய பசவேசுவரர் கருநாடக தேசத்தில், பீஜப்பூர் மாவட்டத்தில், மாணிக்கவல்லி முத்தகே என்னும் ஊர்களுக்குச் செல்லும் வழியின் நடுவேயுள்ள, பாகேவாடி என்னுமிடத்தில் மாதிராஜன் மாதலாம்பாள் என்னும் தந்தை தாயருக்குப் புதல்வராகத் தோன்றினார். 'சிவதத்துவ சிந்தாமணி' என்னும் நூல் சித்தார்த்தி ஆண்டில், கார்த்திகை மாதத்தில் இவர் அவதரித்தார் என்று கூறுகின்றது. அதன்படி இவர் கி. பி. 1131 ஆம் ஆண்டில் அவதரித்தருளினார் எனத் தெரிகின்றது.

இவர் தமது தாயின் ஊராகிய இங்களேசுவரத்தில் தோன்றியதாகவும் கூறுவர். அது பாகேவாடியிலிருந்து ஆறு கல் தொலைவில் அருகிலேயே இருப்பது. அங்கு இவரது தாய் மாமனாகிய பலதேவர் இருந்தார். இங்களேசுவரத்தில் இரேவண சித்தேசுவரர் (இரேணுகாச்சார்யர்) வாழ்ந்திருந்த குகை உள்ளது. அவர் வெறும் சடங்குகளையே முதன்மையாகக் கொண்டிருந்த வைதிக மதத்தைக் கடிந்து, பக்தி நெறியைப் பெரிதும் பரப்பியவராவர். அதனால் இளம் பருவத்திலேயே பசவேசுவரர் பக்தி நெறிச் சூழலில் வளர்ந்து, ''பக்தி பண்டாரி'' எனப்படும் சிறப்பைப் பெற்றார்.

இளமையிலேயே இவருக்கு ஜடவேதமுனி (ஈசானிய குரு) என்னும் சான்றோர் ஒருவரின் அருளும் ஆசியும் கிடைத்தன. அவர் பீஜப்பூர் மாவட்டத்தில் உன்குந் வட்டத்தில், கிருஷ்ண நதியும் மலைப்பிரபா நதியும் கலக்கும் இடத்தில் உள்ள கூடல சங்கமம் என்னும் தலத்தில் இருந்தவர். ஆதலின் தமது குருவாகிய ஜடவேத முனியின் மூலம், பசவேசுவரருக்குக்கூடலசங்கமத்துக் கோயிலில் எழுந்தருளியுள்ள சிவபெருமானின் (கூடல சங்கமேசுவரர்) மீது, இளமை முதலே பக்தி ஏற்பட்டு வளர்ந்து வந்தது.

பசவேசுவரருக்கு எட்டு வயதாயிற்று. அந்நிலையில் அவர்தம் தந்தையார், அவருக்குப் பூணூல் இடுதலாகிய உபநயனச் சடங்கு செய்ய முற்பட்டார். தாம் தோன்றிய பொழுதே தமக்குச் சிவலிங்கதாரணம் செய்யப்பெற்றிருப்பதனால், தமக்குப் புதிதாகப்பூணூல்இடும் உபநயனச் சடங்கு தேவையில்லை என்று, பசவேசுவரர் மறுத்து விட்டார். தந்தை தம்மைப் பெரிதும் வற்புறுத்தியதனால், அதனை ஏற்க விரும்பாத பசவேசுவரர், தம் தாய் தந்தையரையும் வீட்டையும் துறந்து, பாகேவாடியினின்று 40 கல் தொலைவில் உள்ள கூடல சங்கமத்திற்குப் போய்விட்டார். இங்களேசுவரத்தில் தமது தமக்கையாராகிய நாகலாம்பாள் அம்மையாரின் கணவர் ஆகிய பலதேவர் என்பவரின் ஆதரவில் வளர்ந்துவரும்பொழுது அங்கிருந்த சிவபக்தர்களின் திருக்கூட்டத்தில் சேர்ந்து பழகி மகிழ்ந்தார்.

கல்வி கேள்வி:

கூடல சங்கமம் என்னும் அத்தலத்தில், வேதம், ஆகமம், காவியம், புராணம் சாத்திரம் என்னும் பல கலைகளையும் பயின்றவர்கள், மிகுதியாக வாழ்ந்து வந்தனர். அங்கே இவர் அப்பக்தி நூல்களையெல்லாம் ஆழ்ந்து பயின்றார். ஜடவேதமுனி, ஜேதர தாசிமய்யர் சங்கரதாசிமய்யர், இரேவணசித்தேசுவரர், சகலேச மாதரசர், கொண்டகுலிகேசி ராசர் போன்ற, அருளாளர்களின் கோட்பாடுகளால் உள்ளம் கவரப்பெற்றார். தமிழ் நாட்டில் வாழ்ந்த அறுபான்மும்மை நாயன்மார்கள் ஆகிய '' புராதனர்களின் வரலாறுகள் '' அவர் தம் உள்ளத்தையும் உணர்வையும் பெரிதும் கவர்ந்தன. 'அர்ச்சுனவாடா' என்னும் இடத்தில் உள்ள கல்வெட்டு ஒன்று, பசவேசுவரர் தமிழகத்துச் சைவ நாயன்மார் ஆகிய அறுபத்துமூவரின் பக்தர் என்று குறிப்பிடுகின்றது.

இல்லற வாழ்வு:

இங்ஙனம் சிறந்த சான்றோர்களோடு பழகி நற்பண்புகள் அனைத்தும் அமைய வாழ்ந்து,

N71. 13.7

134

கல்வி கேள்விகளில் நிறைந்து புலமை எய்தி யிருந்த பசவேசுவரருக்கு, அவர்தம் தாய்மாம ஞகிய பலதேவர் என்பவர், தமது மகள் **கங்காம்பிகை** என்னும் அம்மையாரைத் திரு மணம் செய்து கொடுத்தார். பால்குர்க்கி சோமநாதர், பீமகவி, சிங்கிராஜர் என்னும், நூலாசிரியர்கள் இவருக்கு **மாயிதேவி** (நீலலோ சனி அல்லது நீலாம்பிகை) என்னும் மனேவியும் இருந்ததாகக் கூறுகின்றனர். பசவேசுவரர் மேலும் சில ஆண்டுகள் கூடல சங்கமத்திலே தங்கி இருந்து இல்லற வாழ்க்கை நடாத்தி வந்தார்.

அப்போது அவரது தமக்கையாரும், பல தேவரின் துணேவியாருமாகிய நாகலாம்பாள், **சென்ன பசவேசுவரர்** என்னும் தெய்விகக் குழந்தையைப் பெற்றெடுத்தார். அக்குழந் தைக்குப் பசவேசுவரர் தமது திருக்கையினுல் இலிங்கதாரணம் செய்தார். பின்னர்ச் சில காலம் பசவேசுவரர் மகாராட்டிர மாநிலத்தில், ஷோலாப்பூர் மாவட்டத்தில், பந்தர்பூர் (பண்டரிபுரம்) வட்டத்திலுள்ள, **மங்களவாதம்** என்னுமிடத்தில் இருந்துகொண்டிருந்தார். பசவேசுவரருக்குப் **பாலசங்கய்யர்** (சிக்க சங்கய்யர்) என்னும் புதல்வர் ஒருவர் இருந்தார். ஹரிஹரர் என்னும் கவிஞர், பசவேசுவரர்க்குச் **சித்தராசர்** என்னும் மற்றெரு புதல்வரும் இருந்ததாகக் குறிப்பிடுகின்றூர். பசவேசுவரின் குடும்பம் முழுவதும் ஒரு தெய் விகக் குடும்பமாக விளங்கியது.

அமைச்சராதல் :

அப்போது மைசூர் மாநிலத்தில், பீடார் மாவட்டத்தில், உம்னபாத் வட்டத்தில் உள்ள கல்யாணபுரம் என்னும் தலேநகரில், மேலேச் சாளுக்கிய மன்னனுன இரண்டாம் **ஜகதேக மல்லன்** என்பவனுக்குப் பிறகு, மூன்றும் **தைலபன்** (கி. பி. 1151-1156) என்னும் சாளுக்கிய வேந்தன் அரசாண்டு வந்தான். அவ்வரசன் போதிய திறமையும் வலிமையும் இல்லாதவன். ஆதலின் அவனது உறவின ஞகிய **விச்சலன்** என்பவன் மெது மெதுவாக அரசாட்சியைக் கைப்பற்றிக்கொண்டு தானே அரசாண்டு வந்தான். அவனிடத்திலேயே பல தேவர் அமைச்சராகப் பணிபுரிந்து கொண்டி ருந்தார். பலதேவர் இயற்கை எய்தி இறை வனடி சேர்ந்த பிறகு, அப்பொறுப்பு விச்சல மன்னனுல் பசவேசுவரருக்கு வழங்கப்பெற்றது. கி. பி. 1162-இல், பசவேசுவரர், விச்சலன் (கி. பி. 1156-1167) என்னும் அச்சாளுக்கிய மன்னனின் அமைச்சராயினுர்.

காலநிலே

அக்காலத்தில் கருநாடக நாட்டில் பல வகையான குழப்பங்களும் சீர்கேடுகளும் நிலவி வந்தன. **சென்னபசவர்** தமது வசனமொன்றில் குறிப்பிட்டிருத்தல் போல, அக்கால நிலேயில் "சைவர்கள் தெளிவின்றிக் கலங்கி நெறி பிறழ்ந்து இருந்தனர். பாசுபதர்கள் உண்மை நெறியைக் காண இயலாது உழன்றனர். காளாமுகர்கள் உணர்வற்ற குருடர்களாக அலேந்தனர். மாவிரதியர் அகந்தை மிக்க ஆடம்பர வாழ்வில் அழுந்தியிருந்தனர். சந்நி யாசிகள் கடவுள் மறுப்பாளர்களாக வாழ்ந்து வந்தனர். கவுளர்கள் பித்துப் பிடித்து உன்மத் தர்களாக ஒழுகினர்." மக்களிடையில் பக்தி மார்க்கம் குன்றி நாடு நிலே குலேந்திருந்தது.

வைதிக சமயம் பற்பல உட்குழுக்களாகப் பிரிந்து சிதறிக் கிடந்தது. அவர்கள் கரும மார்க்கத்தையே பெரிதும் அழுத்தமாகக் கடைப்பிடித்தனர். கொலே வேள்விகள் பெரி தும் மலிந்திருந்தன. சமய வாதங்களும் பேதங் களும் தலேவிரித்தாடின. காதி மோதி வாதா டும் நூல் கற்றிடுவோர் பலர், பெருகி இருந்த னர். சமண பௌத்தத் துறவிமார்கள், தமது சீரிய கொள்கை ஒழுக்கங்களேக் கைவிட்டு, ஆடம்பரமான சுகபோக வாழ்க்கையில் ஈடுபட லாயினர். ஐம்புலன் நுகர்ச்சிகளில் பெரிதும் அழுந்திக் கூடா ஒழுக்கங்களில் தலேப்பட்டனர். பொதுமக்களிடத்தில் சமய உணர்வு, தனது செல்வாக்கை இழந்து மிகவும் நைந்து நலிந்து இருந்தது.

சிவானுபவ மண்டபம்

இந்நிலேயில்தான் பசவேசுவரர் பக்தி இயக் கத்தைத் தொடங்கி வலிவூட்டி வளர்க்க முற் பட்டார். சமுதாயத்தில் சமயத்திற்குத் தொடர்

பும் சிறப்பும் ஆதரவும் பெருக, ஆக்கமும் ஊக்க மும் அளித்தார். பக்தியையும் ஒழுக்கத்தையும் பரப்பினர். பல புதிய சீர்திருத்தங்கள் நிகழு மாறு செய்தார். கல்யாணபுரத்தில் ''சிவானு பவ மண்டபம்'' என்னும் ஒரு பெரிய சமய அமைப்பை நிறுவினர். பொது மக்களுக்குப் புரியும்படி, அவர்களின் தாய்மொழியிலேயே தமது உயரிய கருத்துக்களை, எளிய இனிய நடையில், அனைவர் உள்ளத்திலும் பதியும் வகையில் ''வசனங்கள்'' எனப்படும் ஒருவகைச் சிறந்த உரைச் செய்யுட்களால் போதித்துப் பரப்பினர், சங்கமர் (சிவசரணர்) என்னும் அடியார்களைப் போற்றிப் பெருகச் செய்தார். தாம் நிறுவிய அனுபவ மண்டபத்தில், எல்லா மக்களும் எத்தகைய வேறுபாடும் இன்றிக் கலந்து பங்கு கொள்ளும்படி செய்தார், ஜேதரதாசிமய்யர், ஒரு நெசவாளர். சங்கர தாசிமய்யர் ஒரு தையற்காரர், மடிவாலமாச் சையர் ஒரு சலவையாளர், கின்னரி பொம் மைய்யர் ஒரு பொற்கொல்லர், வக்கல முத் தைய்யர் உழவர், அடபாத அப்பண்ணர் ஒரு நாவிதர், ஜோதரமாதண்ணர் ஒரு படைவீரர், கணுதகண்ணப்பர் ஒரு மீனவர், தோகரகக்கய் யர் தோல் பதனிடுவோர், மாதர சன்னய்யர் செம்மார், அம்பிகாரசவுடய்யர் ஒரு படகு ஓட்டி. இங்ஙனம் பல்வேறு குலத்தினரையும், இணைத்துப் பிணைத்துப் பெருமையளித்து ஒருமைப்படுத்தியவர் பசவேசுவரரேயாவர். மதுவையா என்னும் பிராமணரின் மகளுக்கும், அருளய்யா என்னும் தீண்டாதவரின் மகனுக்கும் திருமணம் நடைபெற்றமையைப் பசவேசுவரர் பெரிதும் ஆதரித்தார்.

அவர்தம் காலத்தில் அவரோடு உடன் இருந்து இலிங்காயதம் என்னும் வீர சைவ சமயத்தைப் பரப்பியருளிய பெரியவர்கள் பலர். அவர்களுள் அல்லமதேவர், சித்தராமய் யர், சென்னபசவர், அக்கமாதேவி முதலியவர்கள் குறிப்பிடத்தக்கவராவர். வீரசைவப் பெண் மணிகளுள் நீலாம்பிகை, நிம்மவை, மகாதேவி யம்மா, இலச்கம்மா, முத்தாயிஅக்கா, என்பவர் கள் தலைசிறந்தவர்களாவர்.

பசவர் உபதேசங்கள் :

(1) மனிதர் அனைவரும் சமநிலையினரே. (2) மனிதர்களில் எவரும் பிறப்பினுலோ தொழிலினுலோ பாற்பகுப்பினுலோ, தம்முள் சிறிதும் உயர்வு தாழ்வு உடையவர் அல்லர். (3) மனிதனுக்கும் மனிதனுக்கும் இடையிலோ, அன்றி ஓர் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடை யிலோ, வேறுபாடு எதுவும் இருத்தலாகாது, (4) ஆன்மீக வளர்ச்சி நெறியில் ஓர் ஆணுக்குப் போலவே, ஒரு பெண்ணுக்கும் சம உரிமைகள் உண்டு. (5) தான் விரும்பும் ஒரு தொழிலை ஒவ்வொருவரும் செய்யலாம்; வேலையில்லாமை யும் பிச்சையேற்றலும் ஆகிய சமுதாயத் தீங்கு கள் அறவே ஒழிக்கப்படல் வேண்டும். (6) பெண்களும்கூட ஒரு தொழிலை மேற் கொள்ளலாம். (7) உடலுழைப்பால் செய்யப் பெறும் தொழில் எதுவாயினும், அது பெருமைக் குரியதேயாகும்; தொழிலில் உயர்வு தாழ்வு என்பது இல்லை. (8) வருணம் ஆசிரமம் பற்றிய வேறுபாடுகள் புறக்கணிக்கத்தக்கவை. (9) உடலுழைப்பின் மூலமாகவே ஆன்மீக வளர்ச்சியைத் தேடிக் கொள்ளுதல் கூடும். (10) வெறும் துறவும், காடுகளிற் சென்று வசித்தலும், வாழ்க்கைத் துன்பங்களிலிருந்து தப்பியோட முயலும் கோழைத்தனமேயாகும். (11) கலப்பு மணங்களும், கலந்து உணவு உண்ணலும், பெரிதும் போற்றி வளர்க்கத் தக்கனவாகும். (12) சமுதாய வாழ்வில் தீண்டாமை என்பது கூடாது; மக்கள் அனை வரும் ஒரு குடும்பத்தினர் போலக் கலந்து பழகு தல் வேண்டும். (13) ஆன்மீகத் துறையிலும் சமுதாயத் துறையிலும் ஒவ்வொரு மனிதனும், தானே சுயமாகச் சிந்திக்க உரிமையுடையவன் ஆவான். (14) நிரந்தரமான சிந்தனைக்கும் ஆன்மீக முன்னேற்றத்திற்கும், அறிவும் அனு பவமுமாகிய இரண்டும்தான் உண்மை வழி காட்டக்கூடிய ஒளிவிளக்குகளாகும். (15) ஆன் மீகக் கல்விக்கும், உலகியற் கல்விக்கும், மக்கள் வழங்கும் தாய்மொழியே உரிய கருவியாகப் பயன்படுத்தப்படுதல் வேண்டும். (16) சமய ஆராய்ச்சிகளில் கலந்து கொள்ளுவதற்கும், ஆன்மீக ஞானத்தைப் பெறுவதற்கும், ஆன்ம வளர்ச்சி நெறியைப் பின்பற்றுவதற்கும், எல்லா மனிதர்களும் சம உரிமை உடையவர் களாவர்,

சமய வாழ்வியற் சாதனங்கள் :

பசவேசுவரர், இலிங்காசாரம், சதாசாரம், சிவாசாரம், பிருத்தியாசாரம், ஞானசாரம், என்னும் பஞ்ச ஆசாரங்களை வகுத்தார். பக்தன் மாகேசுவரன் பிரசாதி பிராணலிங்கி சரணன் ஐக்கியன் என்னும் ஷட்ஸ்தலங்களையும், குரு லிங்கம் சங்கமம் பாதோதகம் பிரசாதம் விபூதி உருத்திராக்கம் மகாமந்திரம் என்னும் அஷ்டாவரணங்களையும் அமைத்துக் கொடுத்தார். இவற்றுள் பஞ்சாசாரங்கள் என்பன ஒரு தனிமனிதன் உலகியலில் சீலம் மிக்க உயரிய சிறந்த வாழ்க்கை நடத்துவதற்குப் பெரிதும் துணை புரிகின்றன. அஷ்டாவரணங்கள் என்பன ஒருவன் ஆன்மீக நெறியில் சென்று உறுதி பெறுவதற்கு நற்பெரும் துணையாக அமைந்து நலம் விளைவிக்கின்றன. ஒருவன் ஆன்மீக நலத்தில் வளர்ச்சியுற்றுச் சிறப்பெய்தி இறைவனோடு ஒன்றி இயைவதற்கு உரிய படிகளாக ஷட்ஸ்தலங்கள் அமைகின்றன. இவை மூன்றும் சமய வாழ்வில் தலைசிறந்த பெரும் சாதனங்களாகும். இவற்றை வகுத்து உருவாக்கித் தந்த பெருமை பசவேசுவரருக்கே உரியதாகும்.

பசவேசுவரர் மனித குலம் அனைத்துக்கும் சகோதரத்துவ உணர்வைப் பரப்பியருளினர். அதனால் இலிங்காயதர் என்னும் வீர சைவப் பெருமக்கள், ஆண்கள் எவரையும் அண்ணா அப்பா அய்யா (அய்யர்) என்றும், பெண்களை அக்கா, அவ்வா என்றுமே, மிக்க அன்புடனும் மதிப்புடனும் போற்றி வழங்குதல் காணலாம். பெண்களை எல்லாம் உலகத் தாய் ஆகிய அம்பிகையின் கூறாகவே மதித்துப் போற்றுதலின் அடையாளமாக, தேவி என்று பெருமதிப்புடன் போற்றிச் சிறப்பித்துக் குறிப்பிடும் வழக்கமும், அவர்கள்பால் இருத்தலைக் காணலாம். இத்தகைய ஒப்புயர்வற்ற சிறந்த பண்பாடுகளுக்கு எல்லாம் அடிப்படை அமைத்து வளர்த்தருளிய பசவேசுவரர், அன்பையும் அருளையும் பரப்பிக் கொண்டு, இந் நிலவுலகிற் சிலகாலம் வாழ்ந்திருந்து, தாம் வழிபட்டுவந்த கூடல சங்கமேசுவரர் திருவருளில் (கி. பி. 1131—1167), ஒன்றிக் கலந்து மறைந்தருளினர்.

முடிவுரை :

பசவேசுவரரின் உபதேசங்களை ஒரு பெரும் ''ஞானப் பொய்கை'' என்று கூறலாம். பண்டைப் பெரியோர்களின் அருளுரைகளாகிய நீர்க்கால்கள், அதன்கண் வந்து நிறைந்து நின்றன; அதனினின்றே பிற்காலத்தில் பல பெரியோர்கள் அருளிய நற்கருத்துக்களாகிய நதிகள் பெருகின. கார்ல்மார்க்ஸ், காந்தியடிகள் போன்றவர்களின் கருத்துக்களையும் கொள்கைகளையும், எத்தனையோ பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே, பசவேசுவரர் வெளியிட்டு வலியுறுத்தியுள்ளார். இரக்கத்தில் புத்தரும், எளிமையில் மகாவீரரும், மென்மையில் இயேசுவும், துணிவில் நபி நாயகமும் போலப் பசவேசுவரர் சிறந்து விளங்கினர். பழமைக்குப் பழமையாகவும், புதுமைக்குப் புதுமையாகவும் பசவேசுவரர் அருளிய ''வசனங்கள்'' எனப்படும் ஞானோபதேசங்கள் அமைந்து காணப்படுகின்றன. அவைகள் ஒருவகையில் மார்க்கஸ் அரேலியரின் ஆத்ம சிந்தனைகளையும், தாமஸ் ஆ கெம்ப்பிஸ் என்பவரது 'இயேசுவைப் பின்பற்றி' என்னும் நூலின் கருத்துக்களையும், எபிரேய தீர்க்கதரிசிகளின் அருள்மொழிகளையும் போலச் சிறந்து விளங்குகின்றன. அவற்றைக் கற்று உணர்ந்தும், கடைப்பிடித்தொழுகியும், நாம் அனைவரும் பசவேசுவரரின் திருவருளைப் பெற்று உய்ய முயலுவோமாக.

—ஆசிரியர்.

வெள்ள வேணிப் பெருந்தகைக்கு
யாம்செய் அடிமை மெய்யாகக்
கள்ள வேடம் புனைந்திருந்த
கள்வர் எல்லாம் களங்கமறும்
உள்ளமோடு மெய்யடியார்
ஆக உள்ளத் துள்ளும்அருள்
வள்ளல் ஆகும் வசவேசர்
மலர்த்தாள் தலையால் வணங்குவாம்

—சிவப்பிரகாசர்

[பெங்களூர் ஸ்ரீராமபுரம் தீனசேவா சங்கத்தின் சார்பில் நிகழ்ந்த இலக்கிய விழாவில் ஆற்றிய சொற்பொழிவைத் தழுவியது.

(13-3-71)

—ஆசிரியர்.

திருமுறைக் கருத்தரங்கத் துவக்கவுரை

திரு. கே. எஸ். நரசிம்மன், B. A., B. L., I. A. S.
ஆணையர், அறநிலைய ஆட்சித்துறை

பெருமதிப்புக்குரிய ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களுக்கும், என் அருகில் வீற்றிருக்கும் பெரியார் டாக்டர் அவர்களுக்கும், திருமுறைப் பொருள்களை எடுத்து விளக்க வந்திருக்கும் பெரியார்களுக்கும், இங்குச்குழுமியுள்ள பெரியவர்களுக்கும், தாய்மார்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நல்ல பெரிய புனிதமான விழாவிலே எனக்கும் ஒரு பங்கு — இந்த நல்ல பொருள்களைப் பற்றிக்கேட்கும் ஒரு வாய்ப்பும், அதன் பயனை அடையும் வாய்ப்பும் கொடுத்ததற்கு, நம்முடைய குருமகா சந்நிதானம் அவர்களுக்கு நான் பலமுறை வணக்கம் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தக் கருத்தரங்கு உண்மையிலேயே சரித்திரப்புகழ் பெற்றது என்று சொல்ல வேண்டும். ஏனென்றால் இதைப் போன்ற ஒரு பெரிய கருத்தரங்கை ஆரம்பித்ததே இதுவே முதலாவது என்று நினைக்கிறேன். சாதாரணமாக, பன்னிரு திருமுறைகளைச் சொல்லித் திருமுறை விழாக்கள் நடைபெறும். திருமுறைகளைப் பூசிப்பது, நல்லவிதமாக ஓதுவது போன்ற காரியங்களைச் செய்கிறார்களே தவிர, இதைப்போன்று அதிலுள்ள சாராம்சங்களை எடுத்துக்காட்டும் முயற்சி நடைபெறவில்லை. நாம் எப்படி பாலைத் தயிராக்கிக் கடைந்து, அதிலுள்ள வெண்ணெயைத் தனியாக எடுக்கிறோமோ, அதைப்போல இந்தத் திருமுறைகளைப் பற்பல கோணங்களில் இருந்தும்— சாத்திர நோக்கத்தோடும், இலக்கிய நோக்கத்தோடும், சித்தாந்த நோக்கத்தோடும் ஆராயும் வாய்ப்புடன் நடைபெறுவது, இதுவே முதலாவது கருத்தரங்கு என்று நினைக்கிறேன். இவ்வளவு பெரிய பணியை, இந்த வாய்ப்பை அளித்த நம்முடைய குருமகா சந்நிதானம் அவர்களுக்கு, நாம் எல்லோருமே மிகவும் கடமைப்பட்டிருக்கிறோம்.

பன்னிரு திருமுறைகளின் தத்துவங்களை, அவற்றின் சாராம்சங்களை ஆராய்ந்து, மற்றவர்களுக்கு விளக்கியாகவேண்டும். பொருள் எல்லா வற்றிலுமே நிறையப் பொதிந்திருக்கிறது. அந்தப் பொருள் இன்னது என்று எடுத்து எல்லா மக்களுக்கும் தெரிவிப்பது பெரிய பணியாகும். இது பெரிய தெய்வீகப் பணியாகும். இதிலே உள்ள இலக்கிய நயங்களைச் சாதாரணமாகப் பலர் சொல்வார்கள். ஆனால் சாத்திர நோக்கோடு அதன் தத்துவங்களை விரிவாக எடுத்துச் சொல்லக் கூடியவர்கள் இப்போது நம்மிடையே ஒரு சிலர்தான் இருக்கிறார்கள். தமிழ் நாட்டிலே தலைசிறந்தவர்கள் என்று போற்றப்படுகிறவர்கள் எல்லாம் இதிலே பங்குகொள்ள இருப்பதைப் பார்த்தால், நாம் மிக மிகப் பெரிய பயனை அடையப் போகிறோம் என்று தெரிகிறது. இவ்வளவு பெரிய வாய்ப்பை நம்முடைய குருமகாசந்நிதானம் அவர்கள் நமக்கு வழங்கியிருப்பது அவர்களுடைய பெரும் உள்ளத்தையும், அவர்களுடைய சமயத்தொண்டையும் நமக்கு விளக்குகின்றது. அவர்கள் உண்மையிலே மிகவும் போற்றப்பட வேண்டியவர்கள். நம்முடைய திருமுறைகளிலே உள்ள சாராம்சங்களை எடுத்து விளக்க வேண்டுமென்று, அவர்கள் அருள்கூர்ந்து செய்யும் இந்தத் திருப்பணி மிகவும் போற்றத்தக்கது,

சாத்திரம் என்றால் நாம் ஏதோ எங்கிருந்தோ வெளியில் இருந்து வந்துவிட்டது, என்பதாக அதைப் பற்றிக் கொஞ்சம் சந்தேகக் கண்ணோடு பார்க்கிறோம். ஆனால் நாம் எல்லாம் போற்றுகின்ற திருமுறைகளிலேயே சாத்திரங்கள் சொல்லப் பெற்றிருக்கின்றன என்பதைக் காணும்போது, சாத்திரங்கள் எல்லாம் நம்முடையன போலத்தான் இருக்கிறது. எங்கேயோ வெளியில் இருந்து வரவில்லை. ஆகவே அவற்றை நாமும் கொஞ்சம் கவனித்துப்பார்க்கவேண்டும் என்று தெரிகிறது. உண்மையிலேயே "Great minds always think together" என்று சொல்வார்கள். அதைப்போலத் தென்னாட்டிலே இருந்தாலும், அல்லது மற்ற வேறு எந்த நாட்டிலே இருந்தாலும் கூட, எல்லா இடங்களிலுமுள்ள பெரியவர்கள் அனைவரும், ஒரே மாதிரியாகத்தான் நினைப்பார்கள். நாம் கூடப்பார்க்கிறோம். பைபிளிலே, குரானிலே, நம்முடைய கீதையிலே சொல்லப் பட்டிருக்கிற பொருள்கள் எல்லாம், நம்முடைய திருமுறைகளைப் பார்க்கிறபோது உண்மையாகவே தோன்றும். இரண்டும் இரண்டும் என்ன? எல்லா நாட்டவர்களும் நான்கு என்றுதான் சொல்வார்கள். ஐந்து என்று சொல்கிறவனை, நாம் பெரியவன் என்று சொல்வோமா? அப்படி உலகத்துப் பெரியவர்கள் எல்லாம் எந்த இடத்தில் இருந்து, எந்தப் பகுதியில் இருந்து, எந்தக் கோணத்தில் இருந்து சொன்னாலும், உண்மையைத்தான் சொல்வார்கள். ஆகையால்சாத்திர நோக்கோடு, நம்முடைய திருமுறைகளைப் பார்த்தால், எது வெளியில் இருந்து வந்த சாத்திரம் என்று நினைக்கிறோமோ, அது உண்மையில் நம்முடையதுதான் என்று தெரிகிறது. மேலும் மேலும் அந்தப் பேருண்மையை ஆழமாக, அழுத்தமாக நம்முடைய பெரியவர்கள் மக்களுக்கு எடுத்துக் காட்டமுற்படுவார்களானால், இந்த சாத்திரங்களைப் பற்றி நாம் பயப்பட வேண்டியதில்லை. நம்முடைய திருமுறைகளிலேயே சொல்லப்பட்டிருக்கிற சாத்திரங்கள் இவை என்பதை உணர்ந்து, நாம் எல்லோரும் அதில் மிகுந்த நம்பிக்கையோடு ஈடுபட வாய்ப்புண்டு. நமக்கு வேண்டியது எல்லாம் இங்கேயே இருக்கிறது. ஆகவே சாத்திரம் பொய் அல்ல, வெளியில் இருந்துவந்த சரக்கும் அல்ல. நம்முடையனவே இந்தச் சித்தாந்தங்கள் என்ற உண்மை தெரியும்.

நாம் எல்லாம் தமிழைப்பற்றி மிக மிகச் சொல்லிக்கொண்டிருக்கிறோம். தமிழ் உயிர், தமிழ் மூச்சு என்று சொல்லிக்கொண்டிருக்கிறோம். தமிழிலேதான், நம்முடைய நாட்டுப் பெரியவர்கள் செய்த சாத்திரங்கள் இருக்கின்றன. தமிழுக்கு மதிப்புக்கொடுக்கிற நாம், நம்முடைய பெரியவர்கள் செய்து வைத்திருக்கிற இந்த சாத்திர நூல்களுக்கு மதிப்பு அளிக்கவேண்டாமா? நம்முடைய திருமுறைகளில் பொதிந்து கிடக்கும் சாராம்சங்களை, இலக்கிய நுட்பங்களை, சாத்திர உண்மைகளை இங்கே மூன்று நாட்கள் எடுத்துப் பேசப்போகிறார்கள். அவற்றை நல்லவிதமாகத் தெளிவுபடச் சொல்வார்களானால், நமக்கு அதைவிடப் பயன்தரக்கூடியது வேறு ஒன்றும் இல்லை. அதை நாம் எல்லோருமே ஒத்துக்கொள்ள வேண்டிவரும். ஆகவே அத்தகைய நிலையில், அறிஞர் பெருமக்கள் நம்முடைய திருமுறைகளை ஆராய்ந்து அருளவேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன். இந்தத் திருமுறைக் கருத்தரங்கின் ஆராய்ச்சி உரைகள் பதிவு செய்யப்படவேண்டும். பேசிப்போவதனால் இங்குவந்து கேட்பவர்கள் மட்டும் பயன்பெறக்கூடும். அப்படியின்றி இவற்றின் சாராம்சத்தை எல்லாம் விடாமல் திருமுறைகளில் பொதிந்துகிடக்கும் தத்துவ நோக்கு என்ன, இலக்கிய நோக்கு என்ன, சாத்திர நோக்கு என்ன, என்பனவற்றை எல்லாம் தொகுத்து வெளியிடுவது எல்லாக் காலத்தும், எல்லா இடங்களிலும் உள்ள மக்களுக்கும் பயன்படும். நம்முடைய பெரிய மடங்கள் எல்லாம் அதற்காகத்தானே இருக்கின்றன.

பல்கலைக் கழகங்கள் இருக்கின்றன. அங்கு மாணவர்களுக்குப் பாடம் சொல்லிக்கொடுத்துக்கொண்டு வருகிறார்கள்—தொழிலுக்காக. வேலை செய்து பிழைப்பதற்காக, வயிற்றுக்கு வேண்டியசோற்றைப் பெறுவதற்காகப் பாடம் சொல்லிக் கொடுத்துக்கொண்டு வருகிறார்கள். வைத்தியக் கல்லூரி இருக்கிறது. உடம்புக்கு வருகிற நோயை எப்படித் தீர்த்துக்கொள்வது என்பது பற்றிய பாடங்களைச் சொல்லிக் கொடுத்துக்கொண்டு வருகிறார்கள்,

" பூக்கைக் கொண்டரன் பொன்னடி
போற்றிலார்
நாக்கைக் கொண்டரன் நாமம் நவில்கிலார்
ஆக்கைக் கேஇரை தேடி அலமந்து
காக்கைக் கேஇரை யாகிக் கழிவரே "

என்று நமது திருநாவுக்கரசர் பாடுவது போல,

காக்கைக்கு இரையாகக்கூடிய இந்த யாக்கைக்குச் சோற்றைத் தேடி அலைந்தால் போதுமா? நாம் எல்லாம் ஆண்டவனுடைய அம்சங்கள். மனிதப் பிறவி எடுத்ததன் பயனே இறைவனுடைய திருவடியை அடைவதுதான். உண்மையிலேயே நாம் ஆண்டவனைத் துதித்து, போற்றி வாழ்ந்தால் "தனம் தரும் கல்வி தரும் ஒருநாளும் தளர்வறியா மனம் தரும்" என்று பாடுகிறார்களே, அதுபோல இந்த உலகில் வாழ்கிறபோதே இத்தகைய பலவித மான இன்பங்களைப் பெறுவதோடு, இறவாத இன்ப அன்பு பெறுவதற்கும் நமக்கு வழி காட்டும். அவற்றை எல்லாம் நமக்கு எடுத்துச் சொல்வதுதான் இந்தத் திருமுறைகள். அவற்றில் உள்ள உட்பொருள்களை, சாத்திரக் கருத்துக்களை, தத்துவக் கருத்துக்களை நமக்கு எல்லாம் எடுத்துப் போதிக்கிற பல்கலைக் கழகங்கள்தான் இந்தத் திருமடங்கள். திருவாவடுதுறை ஆதீன டம், அத்தகைய பல ஞானச் செல்வர்களை உண்டாக்கியிருக்கிறது. காக்கைக்கு இரையாகும் யாக்கைக்குச் சோறு தேடி மாளாது, இறவாத இன்ப அன்பை அடைவதற்கு வழிகாட்டும் பல்கலைக் கழகங்களாகிய இந்தத் திருமடங்களின் துணைவேந்தர்தான் குருமகா சந்நிதானம். சாதாரண பல்கலைக் கழகங்கள் எல்லாம் உடம்பின் பசியைத்தான். போக்க உதவும். மற்றது கொடுக்காது இவையோ நமக்கு வேண்டிய தனம் தரும். கல்வி தரும், இறவாத இன்ப அன்பைத்தரும், எல்லாவற்றையும் தருகிற பல்கலைக்கழகம் இது. இந்தப் பலகலைக்கழகத்தின் துணை வேந்தர் ஆகிய திருவாவடுதுறை ஆதீனத்தின் ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகா சந்நிதானம், இப்போது நமக்கு இந்தப் பெரிய வாய்ப்பைக் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் தொண்டு பல்லாண்டு பல்லாண்டு வாழவேண்டும். இது போன்று சைவ சமயத்திற்கு மேலும் பற்பல அரிய தொண்டுகளைச் செய்யவேண்டும். நாம் எல்லோருமே மனிதப் பிறவி பெற்றுப் பிறந்த தன் பயனை அடைவதற்கு, ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் அருள்கூர்ந்துநம் எல்லோருக்கும் ஆசி வழங்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டு, எனக்கு இந்த வாய்ப்பை அளித்த தற்காக எல்லோருக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் சொன்னமாதிரி, நம்முடைய திருமுறைகளிலே உள்ள கருத்துக்களை எல்லோருக்கும் தெளிவுபடும்படி விளக்குமாறு, அறிஞர் பெருமக்களை வேண்டிக்கொள்கிறேன். இத்தகைய திருமுறைக் கருத்தரங்கத்தைத் துவக்கி வைப்பதற்கு, நான் மிக மிகச் சந்தோஷப்படுகிறேன் என்று சொல்லிக்கொண்டு, இத்துடன் என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

ஆசையறாய்! பாசம்விடாய்! ஆனசிவ பூசைபண்ணாய்!
நேசமுடன் ஐந்தெழுத்தை நினையாய்!—சீ சீ
சினமே தவிராய்! திருமுறைகள் ஓதாய்!
மனமே உனக்கென்ன வாய்?

—ஸ்ரீ குருஞானசம்பந்தர்

திருமுறைக் கருத்தரங்கச் சிறப்புரை

டாக்டர் திரு. தெ. பொ. மீனுட்சி சுந்தரனுர்,
M. A., B. L., M. O. L., D. Litt.,

முன்னுள் துணைவேந்தர், மதுரைப் பல்கலைக்கழகம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களுடைய பொன்னுர் திருவடிகளுக்கு என்னுடைய நன்றிகலந்த, அன்புகலந்த வணக்கம். கருத்தரங்கைத் தொடங்கி வைத்த இந்து சமயப் பாதுகாப்பு ஆணையர் அவர்களே, பெரியோர்களே, வணக்கம்,

நம்முடைய ஆணையர் அவர்கள் தெரிவித்தபடி, இன்று ஒரு நல்ல நாள். ஒரு புதிய யுகத்தைத் தொடங்கிவைக்கின்ற நாளாக, இது ஆண்டவன் திருவருளால் ஓங்குதல் வேண்டும். அவர்கள் நம்முடைய நாட்டுப் பல்கலைக்கழகங்களைப் பற்றிச் சொன்னுர்கள். இந்தப் பல்கலைக் கழகங்கள் எல்லாம் எங்ஙனம் நடைபெறுகின்றன என்பது உங்களுக்குத் தெரியும். குறைகள் பல்கலைக் கழகத்தில் இல்லை. அங்கே இருக்கிற ஆசிரியர்களிடத்தில் இல்லை. மாணவர்களிடத்தில் நிச்சயமாக இல்லை. (பலத்த சிரிப்பு). ஏதோ நான் வஞ்சகப் புகழ்ச்சியாகச் சொன்னேன் என்று நீங்கள் கைதட்டினீர்கள் போலத் தெரிகிறது. உண்மையில் நம்முடைய சமுதாயம் எப்படி இருக்கிறது? அந்தச் சமுதாயத்திற்கு மாருக மாணவர்கள் என்ன செய்து விடுகிருர்கள்? பெரியவர்கள் கருப்புச் சந்தையிலே கொள்ளை லாபம் அடிக்கலாம். அதில் ஒரு சிறு பகுதியை ஆண்டவனுக்கு லஞ்சம் கொடுப்பது போலக் கொடுத்துவிட்டுப் பேரும் புகழும் பெறலாம். எல்லாம் அறிந்தவர்கள், பெரியவர்கள், அரசியல் தலைவர்கள் தான். அவர்கள் தான் ஆண்டவனையும்விட உயர்ந்தவர்கள் என்று நாம் கருதலாம். சினிமா மேடைக்குப்போய்க் கோடிக்கணக்கான பணத்தைப் பறிகொடுப்பது ஒருபுறம்இருக்கட்டும். கண்டு கண்டு கண்ணும், மனமும் கெட்டு நாம் வரலாம். ஆனுல் மாணவர்கள் மட்டும் நல்லவர்களாய், உண்மை பேசுகின்றவர்களாய், கடவுளிடத்தில் அன்பு உடையவர்களாய் இருக்க வேண்டுமென்று இந்தச் சமுதாயம் விரும்பினுல் அது நடைபெறுமா? ஆகையால், வயல் எப்படி இருக்கிறதோ அது போலத்தான் அதிலே போட்ட விதையும் விளையும். எனவே யார் யாரையோ குறை சொல்வதைவிட்டு, அந்தக் குறை நம்மேல் இருப்பதை, ஒவ்வொருவரும் உணர்கின்ற நாளில்தான் இந்தச் சமுதாயம் முன்னேறக் கூடும். இன்றைய உலகில் யாருக்குப் பெருமை? கூட்டத்தைப் பார்த்தாலே தெரியவில்லையா? இன்று மாலையில் எங்கேனும் அரசியல் கூட்டம் நடக்கட்டும். அங்கு இப்படியா கூட்டம் இருக்கும்? இன்று மிகப் பெரியவர்களாக இருப்பவர்கள் அரசியல் தலைவர்கள். இல்லையானுல், வெள்ளித் திரை நட்சத்திரங்கள். அவர்கள் வருவார்களானுல் என்ன கூட்டம்? அவர்களே சமுதாயம். நாம் ஒவ்வொருவரும் நம்முடைய நெஞ்சிலே கைவைத்துக் கேட்க வேண்டும் இந்தக் கேள்வியை இன்றைய உலகம் விஞ்ஞானத்திலே மேலேறியிருக்கிறது. அதனுல் கேடு ஒன்றுமில்லை. விஞ்ஞானிகளில் பலர் தங்களுடைய விஞ்ஞான சாதனைகளையும், காட்சிகளையும் கண்டு வியந்து நிற்கும்போது அதற்கப்பாலும் ஓர் உண்மையிருக்கிறது என்றுணர்ந்து தம்மை மறந்து ஏதோ ஒன்றிலே லயித்து விடுகிருர்கள் ஒரு சில நிமிஷ நேரம். நீங்கள் படித்திருக்கலாம், தினசரிகளில், இன்றைக்கு அப்போலோ 14-இல் வெற்றி பெற்றுத் திரும்

பிய வான்வெளி வீரர்கள் வருகிறபோது இந்த உலகம் அமைதியாக இருக்க வேண்டும். போராட்டமே இருக்கக்கூடாது என்ற எண்ணம் தோன்றுகிறது. எனவே விஞ்ஞானத்தின் முடிவு மெய்ஞ்ஞானத்திற்கு இடையூருக இல்லை. இன்று மனிதன் இயற்கையின் ஆழத்தை எல்லாம் அறிந்திருக்கிருன். அதில் லயித்திருக்கிருன். நான் பலப்பல விஞ்ஞானிகளைக் கண்டிருக்கிறேன். அவர்கள் இந்த விஞ்ஞானக் காட்சியிலே ஈடுபட்டுச் சோதனைக் களத்தில் இருக்கும்போது, சமாதி கைகூடிய நிலைமையில் இருப்பதுபோல இருக்கிருர்கள். நம் நாட்டில் இருந்து மறைந்துபோன சர். சி. வி. இராமனைப் பற்றிக் கேட்டிருக்கலாம். சோற்றைக்கூட மறந்துவிடுவார். அவர்களுடைய மனைவியார் இருந்து வற்புறுத்தி ஊட்ட வேண்டும். ஞானிகளைப் பற்றிப் படித்திருக்கிறோம். அவர்கள் சமாதி கூடுவார்களானல் பல நாளாகிவிடும் கண் விழிக்க. சீடர்களே அங்கிருந்து அவர்களது உடம்பைக் காப்பாற்றியாகவேண்டும். அப்படிப்பட்ட நிலையைத்தான் நம்முடைய விஞ்ஞானிகளிடத்தில் காணலாம். தங்களுடைய ஆழ்ந்த அனுபவத்தை இந்த இயற்கையினூடே கண்டு கண்டு அவர்கள் மகிழ்கிருர்கள். பெர்ட்ரண்ட் ரஸ்ஸல் அவர்கள் கடவுளைப்பற்றிக் கவலைப்படாதவர். அதற்காகக் கடவுள் இல்லைஎன்று தள்ளவில்லை. 'அதைப்பற்றி எனக்குத் தெரியாது, சொல்ல முடியாது' என்று சொல்வார்கள். ''என்னுடைய உள்ளத்தில் ஒரு போராட்டம், இந்த உலகத்திற்கு அப்பாற்பட்டதாக எல்லாம் வல்ல ஒரு சக்தி ஒரு ஆற்றல் இருக்கிறது என்று நம்ப விரும்புகிறது என் உள்ளம். ஆனல் என்னுடைய ஆராய்ச்சியோ, என்னுடைய அறிவோ அதற்கு இடம் கொடுக்கவில்லை. ஆயினும் இந்தப் போராட்டம் என் உள்ளே நிகழ்கிறது'' என்கிருர். அங்கே உண்மையைச் சொல்கிருர். உலகத்தில் வாழும்போது, பல வற்றை ஆராயும்போது, விஞ்ஞானத்தில் ஈடுபடும்போது, கண்ணுக்குத் தெரியாத ஒன்றை எல்லாம் பரிட்சித்துப் பார்க்க முயல்கிருர்கள். அந்த ஆராய்ச்சிக்குள் எல்லாம் முடிவதில்லை. ஏதோ ஒன்று இதற்கு அப்பாலும், அப்பாலும் மறைந்து நின்று ஒளிர்கிறது என்பதைக் காண்கிருர்கள். ஆனல் அதனை விளக்கத், தானே சோதனைக் களத்தில் எல்லோருக்கும் முன்னுக நிற்க முடியவில்லையே என்பதுதான் அவருடைய பெரிய வருத்தம். எனவே இந்த உலகத்தில் இன்று நடைபெறுவது என்ன? அணுவைப் பிளக்கிருர்கள். அணுவுக்குள் இருக்கிற ஆற்றல்களை எல்லாம் அளந்து அறிகிருர்கள். வெறும் பேச்சா? அக்டோபர் மாதத்தில் ஜப்பானில் இருந்தேன். சென்ற உலக மகாயுத்தத்தினல் அணுகுண்டுத் தாக்குதலினல் அழிந்த ஹிரோஷிமா, நாகசாகி நகரங்களைப் பார்த்தேன். அணுகுண்டு ஒன்று விழுந்ததனலே நகரமே பாழாய்ப்போய் இருப்பதை அங்கே பார்க்கிறோம். அங்கு 25-ஆம் ஆண்டுவிழா கொண்டாடினுர்கள். இயற்கையின் ஆற்றல் நமக்குத் தெரிகிறது. இந்த உலகத்தோடு நாம் இப்போது அமைதி அடையவில்லை. வானத்தை எட்டிப் பிடிக்கிறோம். சந்திரனில் நடக்கிருர்கள் நம் மனிதர்கள். வெள்ளிக்குப் போகிருர்கள். செவ்வாய்க்குப்போக முயல்கிருர்கள். வானவெளியில் சூரபன்மன் முதலியவர்கள் பல பல கோளங்களில் இருந்து போராடினுர்கள் என்று புராணத்தில் படிக்கிறோம். சில ஆண்டுகளிலே அது புராணமாக இல்லாமல் உண்மை வரலாறு ஆகக்கூட மாறலாம். இப்படி இயற்கையை வென்று அடக்கி ஆள முயன்று ஒவ்வொரு சிறந்த வெற்றியையும் அடைகிற மனிதன், ஏன் தோல்வி அடைகிருன்? பெரிய இரண்டு வல்லரசுகள் இருபக்கம். அமெரிக்கா ஒரு பக்கம்-ருஷ்யா ஒரு பக்கம். இந்த விஞ்ஞான சோதனைகளிலே வெற்றி-வானவெளிப் பயணங்களிலே வெற்றிபெற்றிருக்கிருர்கள். ஆனல் அந்த நாட்டிலே போய் இருந்தபோது பார்த்தேன். அமைதியில்லை. ஒரே ஓட்டம். நிற்கக்கூட நேரம் இல்லாமல் ஓடுகிருர்கள். காலை 6-மணியில் இருந்து இரவு 10 மணிவரை, ஏன் வயிற்றுப் பிழைப்புக்காக என்று சொல்லலாம். அவர்களுடைய வயிற்றுப் பிழைப்புக்கு நிறையத்தொழில் வாய்ப்புக்கள் இருக்கின்றன. நிறையச் செல்வம் இருக்கிறது. இருந்தும் அங்கு இருக்கிற மக்களுக்கு ஒரு அமைதியேற்படக் காணும். செல்வத்தினலே, விஞ்ஞான வெற்றிகளினலே இன்பம் இருக்குமானல், அதை அவர்கள் கண்டிருக்கவேண்டும். இன்பம் இருப்பதாகத் தெரியவில்லை. பெரிய பணக்காரர்கள், செல்வந்தர்கள் அமைதியில்லாமல் அலைகிருர்கள். கல்விமான்கள் நிறையக்கற்றவர்கள் இவர்களுக்கு எல்லாம் அடிக்கடி மூளைக் கோளாறு

வருகிறது அந்த நாட்டிலே. இந்த உலகத்திலே குடிமக்களுக்கு வேண்டியதை எல்லாம் செய்து வைக்கின்ற ஒரு அரசு ஸ்வீடனில் இருக்கிறது. நாம் 'சமுதாய நல அரசு' (Welfare state) என்று சொல்கிறோம். ஸ்வீடனில் நடைமுறையில் வெற்றியோடு அது நடைபெறுகிறது. குறையில்லை. ஆனால் என்ன பயன்? பைத்தியக்கார ஆஸ்பத்திரிகள் இருக்கின்றன. அதிலேதான் ஆட்கள் அதிகம். நம் நாடு இன்னும் அந்த நிலைக்கு வரவில்லை என்று மகிழ்ச்சி அடைகிறேன். ஆனால் சென்னைக்குப் போகும்போது அங்கேயுள்ள மனக்கோளாறு சிகிச்சை நிலையங்களைப் பார்த்தால், முன் இருந்தவர்களைவிட மக்கள் எண்ணிக்கை இப்போது மிகுந்துகொண்டு வருகிறது. ஆகவே இதை எண்ணிப்பார்க்கவேண்டும். ஏதோ நான் இன்று இங்கிருக்கிறேன் என்று நினைக்கலாம். நான் கல்லூரி ஆசிரியனாக இருந்தேன். பல்கலைக் கழகத் துணைவேந்தராக இருந்தேன். அதில் கண்டது என்ன? நம்முடைய மாணவர்கள் ஒருவகை உள்ளக்கோளாறினால் வாடுகிறார்கள். வெளியே சமுதாயத்தில் காணப்படுகிற குறைபாடுகள் எல்லாம்தான், உள்ளே மாணவர்களிடத்தில் காணப்படுகிறது. வெளியே நாம் எல்லாம் பைத்தியக்காரர்களாக இருக்கிறோம். இந்த உண்மையை நாம் உணரவேண்டும். ஏதோ நமக்கு வருகிறது கோபம். ஒருவன் ரொம்ப ஏழையாக இருக்கலாம். ஆனால் அவன்தன் பெண்டாட்டியிடத்தில் காட்டும் கோபத்தைப் பார்த்தால், பெரிய நெப்போலியன் போன்றவர்கள் எல்லாம்கூட இணையாக மாட்டார்கள். அப்படி என்ன நேருகிறது? இன்று இதற்கு மனோதத்துவ சாஸ்திரி என்ன சொல்கிறான்? இதுவரை அமைதிபெறாத நெஞ்சத்திலே பிறக்கிற ஒரு பெரிய கேடு இது என்கிறான். இளமையில் உடம்பில் இரத்தம் இருக்கிறது. பொறுமையை இழந்துவிடாமல் இருக்கிறான். நாளாக ஆக இரத்தம் குறையச் சினம்தான் பொங்குகிறது. ''நாற்பதுக்கு மேலே நாய்க்குணம்'' என்பார்கள். இந்தக் கேட்டுக்கு அகப்படாதவர்கள் யார்? "எனக்குக் கோபம் வருவதில்லை. நான் பொறுமை இழந்ததே இல்லை. எனக்குக் காமம் என்பதே இல்லை'' என்று வெளியில் சொல்லிக்கொள்கிறவர்கள்கூட, தமக்குள் எண்ணிப்பார்க்கவேண்டும். இராவணனைப் பற்றிச் சொல்வார்கள். நம்முடைய உள் எண்ணங்களைக் கனவுகளை எல்லாம் எண்ணிப் பார்ப்போமானால், நாம் எல்லாம் இராவணனுக்கு அண்ணனாக இருப்போம். ஆகவே, நாம் ஏதோ நல்லவர்கள் என்று எண்ணிக்கொண்டிருப்பதில் பயன் இல்லை. இந்த உலகமே ஒரு பெரிய பைத்தியக்கார ஆஸ்பத்திரி. ஆனால் இதை யாரும் நினைக்கிறவர்கள் இல்லை. இந்த நிலைமை இருப்பதனாலேதான் அமெரிக்கா ருஷ்யாவைப்பற்றி அஞ்சுகிறது. ருஷ்யா அமெரிக்காவைக்கண்டு அஞ்சுகிறது. லாவோஸ், கம்போடியா, வியட்நாம் போன்ற இடங்களில் என்ன நடக்கிறது என்று பாருங்கள். புறத்தையே ஆராய்ந்துகொண்டு போகிறோம். அகத்தை அடக்க - வெற்றி கொள்ளக் கற்கவில்லை. மனிதன் புறத்தைத்தான் ஆராய்கிறான். புறத்தை வெல்கிறான். அகத்தையும் புறக்கோலமாகத்தான் காண்கிறான். ஆனால் அதனை அறியவில்லை. இயற்கையை எல்லாம் வெற்றிகண்டு அடக்கி ஆளத் தெரிந்த மனிதனுக்குத் தன்னை அடக்கிக் கொள்ளக் கற்காமையினால் பெரிய சாபக்கேடு. மனிதன் தன்னை இன்னான் என்று இதுவரை அறிந்தான் இல்லை. மனிதனையும் யாரும் இதுவரை ஆராயவில்லை. ''நான்தான் இருக்கிறேனே. என்பெயர் தெரியாதா? என்னுடைய பட்டம் எல்லாம் தெரியாதா?'' என்று கேட்கலாம். உண்மையிலேயே மனிதன் என்பவன் யார்? இது என்னடா, பெரிய வேதாந்தமாக ஆரம்பித்துவிட்டார் என்று தோன்றும். நான் யார் என்பதை அறியாதவரையில், புறத்தை அறிந்து என்ன பயன்? நம்மை நாமே அறியாத நிலை ஒரு புதிராகவே இருக்கிறது. இத்தனை ஆற்றலும் எங்கே இருந்து வருகிறது. மனிதன் சூரியனைக்கூட எடைபோடுவான் என்று ஒரு சங்கப்புலவன் சொன்னான். இன்றைக்குப் பார்க்கிறோமே, வான வெளியை எல்லாம் ஆராய்கிறார்கள். இத்தகைய பேராற்றல் பொங்கிவழிகிற மனிதன் தன்னைத் தான் அறியவில்லை. எல்லாவற்றையும் ஆராய்கிற மனிதன் தன் உள்ளத்தில் புதைந்து கிடக்கும் வித்தை உணரவில்லை. அதனால்தான் பலவிதமான கேடுகள். விஞ்ஞானிகள் எல்லாம் ஒப்புக்கொள்கிறார்கள். எல்லாப் புறக் கோலத்தையும் நாம் நன்றாக அறிந்து இருந்தும், நம்முடைய உள்ளத்தை நம் உள்ளத்தில் பொங்குகிற போராட்டங்களை நாம் அறிந்தோமில்லை. அதைத் தீர்க்க வழி அறிந்தோ

மில்லை: யுனஸ்கோ என்று சொல்கிறோமே- அனைத்துலக நிறுவனம் அது என்ன சொல்கிறது போரே வேண்டாம்; அதை ஒழிப்பது எப்படி? என்கிறது. போரை ஒழிப்பதற்கு வித்து நம் முடைய உள்ளத்தில் இடவேண்டும். அமைதி என்பதை மனித உள்ளங்கள் ஒவ்வொன்றிலும் நாட்டி விடுமோமானுல், போரையே தடுத்து விடமுடியும். அது வெறும் சொற்பொழிவினுல் முடியாது. பலபல நிறுவனங்கள் மூலம் கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவிடுவ தனுலும், இந்த அமைதியை-உலக இன்பத்தை நிலைநாட்ட முடியாது. இன்று அவர்களே ஒப்புக்கொண்டிருக்கிறுர்கள். அதற்கு என்ன வழி?

அந்த வழியைத்தான் நம்முடைய நால்வர்கள் நமக்குக் காட்டிச்சென்றிருக்கிறுர்கள். அதனுலேதான் இந்தத் திருமுறைகளுக்கு இன்றைய உலகத்தில் ஒரு பெரிய இடம்உண்டு. அவர்கள் வாழ்ந்த காலத்திலே தமிழ் நாடு சிறிது வாடிக் கிடந்தது. சோற்றுக்கும் திண்டாடியகாலம். இன்றும் நம்நாடு சோற்றுக்குத் திண்டாடுகிறது. பிறரிடத்தில் கையேந்து கிறோம். நமக்கு ஒன்று தெரியும். பொலபொல என்று புற்றீசல்போலப் பிள்ளைகளைப் பெறுவதற்குச் சிறந்த ஞானம் இந்த நாட்டில் கைவந்திருக்கிறது. ஆனுல் அதில் வருகிற கேடுகளை நினைத்துப்பார்த்தால், நெஞ்சம் பகீர் என் கிறது. இத்தனை வாய்க்கும் சோறு எங்கே தேடுவது என்கிற நினைப்பு, அரசியலாருக்குச் சிலநேரமேனும் உதிக்கிறது. அப்படிவாடி வதங்கிய காலத்தில் மூவர் முதலிகள் தோன்றினுர்கள். இல்லையென்றுல் சோறும் கூறையும் தருவான் என்று ஏன் பாடவேண்டும்? அது பெருந் தலைவலியாக இருந்தது. ''புறத்தைப் பற்றிக் கவலைப்படாதே. உழைப்பது உன் கடமை. ஆனுல் வெற்று உழைப்பினுல் ஒன்றும் தீர்க்க முடியாது. ஒரு குறிக்கோள் இருத்தல் வேண்டும். ஒன்றை நோக்கி நீ போதல் வேண்டும். ஏன் எனக்குப் பணம்? ஏன் எனக்குக் கூறை? ஏன் எனக்கு வீடு? ஏன் எனக்கு இந்த உழைப்பு? ஏன் இந்தத் தொழில்?' என்று கேட்டிருப்போமானுல், இந்த உலகம் இந்த நிலையில் இராது. ''குறிக்கோள் இலாது கெட்டேன்'' என்று சொல்கின்றுர் அப்பர் அடிகள்.

அவர் எல்லாம் படித்தவர். அந்த நாளிலே எத்தனை சாத்திரங்கள் இருந்தனவோ அத்தனையையும் கற்றவர். வாதிலே பலரை எல்லாம் வென்றுர். பலவித உபவாசங்கள் இருந்தார். ஆனுல் வயிற்றுப் புண்தான் வந்தது. உள்ளே எல்லாவற்றையும் அடக்கி வைக்கின்ற ஒருவன் இதனை எல்லாம் செய்கின்றுன் என்ற எண்ணம் இல்லாமையினுல் அவதிப்பட்டார். அப்போது தான் தன்னுடைய தமக்கை ஒரு பெண்-அந்த அம்மையாரின் நினைவு வந்தது. அந்த அம்மையார் எந்த நிலையில் இருந்தார்கள்? இந்தத் தம்பிக்காகவே உயிர் வாழவேண்டுமென்று இருந்தார்கள். அவருக்கு யார் உறுதி? தந்தையார் போயினுர், தாயாரும் போயினுர் தனக்கென விதித்த கணவனும் மறைந்தார். இனி, தம்பியார் உளராகவே அவர் உயிர் தரித்து இருந்தார். அந்தத் தம்பியும் அவரை விட்டுப்போனுர். கலங்கினுர்களா அந்த அம்மையார்? உள்ளத்துள்ளே ஒரு உறுதி இருந்தது. ஆண்டவனுடைய திருவருளை உள்ளத்திலே தேக்கி வைத்திருந்ததனுல் அவர்களது உள்ளத்திலே ஒரு திண்ணம். அந்த அம்மையாரின் தம்பி நிலை என்ன? எல்லாவற்றையும் கற்று, எல்லோரையும் வென்று மிகப் பெரியவனுக ஓங்கியிருக்கிற எனக்கு இந்த வயிற்று நோயைத் தாங்கிக்கொள்ள, போக்கிக்கொள்ள முடியவில்லையே, அமைதியைக் காணுமே, இந்தச் சிறு துன்பத்தைக் கூட என்னுல் பொறுத்துக்கொள்ள முடியவில்லையே? வாழ்வில் எல்லா இன்பங்களையும் இழந்து நிற்கிற நம் தமக்கையார், என்ன செய்து கொண்டிருப்பார்கள் என்ற நினைவு அடிக்கடி வந்து உறுத்திற்று. இந்தக் காலத்திலாவது பெண்களுக்கு ஒரு வழியுண்டு. நமது இந்தியப் பிரதமரைப் போலக்கூட ஆகலாம். ஆனுல் அந்தக் காலத்திலே அந்த அம்மையார் வாழ்வு கைத்துப்போகாதிருக்க என்ன செய்தார்கள்? கோயிலையே நம்பி மனத்தை அந்த நிலையில் வைத்துக்கொண்டிருந்தார்கள். இவர் அந்த அம்மையாரின் பக்கம் திரும்பினுர். அவர்களைத் தேடி ஓடினுர். அந்த அம்மையார் கோயிலை அலம்பி, மெழுகி, கோலம் போட்டுக் கொண்டிருந்தார்கள். அவருக்குப் புரிந்து விட்டது உலகம். ஆண்டவன் பெயரால் மக்களுக்குத் தொண்டு செய்வதுதான் இந்த உலகத்தில் மன அமைதியைத் தரக்கூடியது.

என்று அறிந்தார். புறப்பட்டார். அந்த அம்மையாரின் அருளைப்பெற்று உழவாரப் படையை எடுத்தார். தொண்டர் கூட்டத் துடனே ஊர் ஊராகச் சென்று திருக் கோயில்களை எல்லாம் சுத்தம் செய்து, இறைவனை வழிபட்டுப் பாடி, பெரிய வீதிகளை எல்லாம் அமைத்தார். அப்படித்தானே ஞானசம்பந்தப் பெருமானும் !

''மண்ணில் நல்லவண்ணம் வாழலாம்''

என்பதாக, வாழமுடியாது அலைந்து கிடந்தவர் களைப் பார்த்துச் சொல்கிறார். ஆண்டவன் அம்மையப்பனாக எழுந்தருளியிருக்கிறான்.

''பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்த தே'

ஆகவே இந்த மண்ணில் நீங்கள் மணந்து வாழ வேண்டுமா? வாழுங்கள். ஆனால் அடிப்படை யாக எல்லாவற்றுக்கும் வேராக இருக்கிற, தாயும் தகப்பனுமாய், அப்பாலுக்கப்பாலாய் இருக்கிற ஒன்றை, நீங்கள் நம்புதல் வேண்டும். அந்த நம்பிக்கை வந்துவிடுமானால், நீங்கள் எந்தத் தொழிலைச் செய்தாலும், ஏதவத்தைப் பட்டாலும் உங்களுக்கு ஒரு கேடும் இல்லை என்ற உண்மையை வற்புறுத்தினார்கள். சூரியனைப் பார்க்கின்றோம். அது ஆண்டவ னுடைய அருள். சந்திரனைப் பார்க்கின்றோம். அதுவும் அவனுடைய அருள். நம்முடைய மண்தரை நம்மைத் தாங்கிக்கொண்டுள்ளது. நாம் எத்தனைதான் அதைத் தோண்டினாலும் அது நம்மைத் தாங்குகிற நிலை இறைவனது அருள். உடம்பெல்லாம் நீராக இருக்கிற - நீர்ப்பிண்டமாக அதற்கு மேலும் உயிர் கொடுத்து வாழ்விக்கிற தண்ணீர் - இனிய உணவுகளை எல்லாம் ஆக்கித் தருவதற்குப் பயன்படும் தீ, நம் உடம்புள்ளும் தீ இருக் கிறது. இல்லையானால் எப்படி சீரணிக்க முடியும்? இந்தத் தீ - மூச்சுவிடுகிற காற்று - வெட்டவெளிப் பயணம் செய்கிறோமே இதற் கெல்லாம் இடம் கொடுக்கிற ஆகாயம் - ஆண்டவன் அருள் இல்லையா? அதற்கும் மேலாக ஒன்றைக் கண்டார்கள். உலகத்தில் இருக்கிற அத்தனை உயிர்களிடத்திலும் ஆண்டவன் நடனம் புரிகின்றான். அப்படி உயிருக்கு உயி ராக இருக்கிற ஒன்றை நாம் அறிதல் வேண்டும், இதனை,

''இருநிலனாய்த் தீயாகி நீரும் ஆகி
இயமானனாய் எறியும் காற்றும் ஆகி
அருநிலைய திங்களாய் ஞாயிறாகி
ஆகாச மாய்அட்ட மூர்த்தி யாகிப்
பெருநலமும் குற்றமும் பெண்ணும் ஆணும்
பிறருருவும் தம்முருவும் தாமே யாகி
நெருநிலையாய் இன்றாகி நாளையாகி
நிமிர்புன் சடையடிகள் நின்றவாறே"

என்று எடுத்துக் காட்டினார்கள். அவர்கள் சொன்னார்கள். உலகத்தில் உனக்கு என்ன வேண்டும்? பாடு......பாடு என்றார்கள். ரொம்ப வருத்தமாக இருந்தால் என்ன பண்ணுவது என்பதாக, மனோதத்துவ சாஸ்திரியிடம் கேட் டால், அவர் ''பாடு, பாடத் தெரியவில்லை என்றால் விசில் அடித்துக்கொண்டாவது இரு'' என்கிறார். பாடுவதனால் துக்கம் மறைந்து இன்பம் உண்டாகும். இது பைத்தியக்காரன் சொல்வது இல்லை. மனோதத்துவ நிபுணர்கள் சொல்வது. அதைத்தான் ஆண்டவனே சொன்னான்.

''அருச்சனை பாட்டே ஆகும்''

ஆண்டவனை வழிபட ரூபாய் இல்லையே என்றால், எதற்காக ரூபாய் வேண்டும்? உன் வாயார அவனைப் பாடு அப்பா போதும். பாடு வது என்றால் எனக்கு ராகம் இல்லையே?

''கோழை மிடறாகக் கவிகோளும் இலவாக
இசை கூடும் வகையால்
ஏழை அடியார்கள் யாவை சொன சொல்
மகிழும் ஈசன் இடமாம்''

என்று திருஞானசம்பந்தர் பாடியருளியிருப்பது போல, கோழை மிடறாகவும் கவிகோள் இல வாகவும், நீங்கள் பாடினாலும் சரி... ..உங்கள் உள்ளத்தைத்தான் அவன் கவனிக்கிறானே தவிர ராகம் நன்றாக இருக்கிறதா? சுருதி பிழை யாது பாடுகிறானா என்றெல்லாம் அவன் கவனிப்பது இல்லை. ஆகவே பாடு பாடு— அதுவே அவனுக்கொரு வழிபாடு என்கிறார்கள்.

பெரியபுராணம் முதலியவை எல்லாம், இந்த அடிப்படையிலேயே பிறந்தன. இன்று கன்னட தேசத்திலும், ஆந்திர தேசத்திலும், பெரியபுராணக் கதையில் ஈடுபடுகிறவர்கள்

மிகுதி என்று நினைக்கிறேன். எனக்குத் தோன்றுகிறது. அங்கெல்லாம் மக்களுக்குத் தொண்டுசெய்வது ஆண்டவனுக்குத் தொண்டு செய்வது என்று நினைக்கிறார்கள் ஞானசம்பந்தர், சுந்தரர், அப்பர் முதலியவர்கள் அதனைத் தான் நமக்குச் செய்து காட்டினார்கள். அந்த உண்மையை ஒவ்வொருவரும் தம்தம் உள்ளத்திற்குள்ளே பார்க்கவேண்டும். பெரிய பெரிய முடியாத காரியங்களை எல்லாம் செய்கிற ஆற்றல் இருக்கிறதே—அவை அனைத்துக்கும் வேர், உள்ளத்திற்குள்ளே கூத்தாடுகிற கூத்தப் பெருமானுடைய அருள்தான் என்ற உணர்ச்சி ஏற்படவேண்டும். அதனையே செய்து காட்டினார்கள். பாட்டாகப் பாடினார்கள்.

இன்றைக்குத் தமிழிசை இயக்கம் நடைபெறுகிறது. அன்றைக்கு நடந்தது என்ன? மூவர் முதலிகள் ஒருவிதப் பண்ணமைப்புக்குள்ளே பாடிய அற்புதப் பாடல்கள் எல்லாம் என்ன? அவற்றை வெறும் இலக்கியமாகப் படிப்பதில் சிலசமயம் ஒன்றும் புரியாது, பண்ணோடு பாடுவதைக் கேட்டோமானால், உள்ளம் கட்டு விட்டு நெகிழ்ந்து உருகும். அதனால் ஏற்படுகிற இன்பம் எல்லையற்றது. அவர்கள் எப்படிப் பாடினார்கள் என்பது இப்போது மறைந்து வருகிறது. ஏதோ சில ஓதுவா மூர்த்திகளிடம் தான், இப்போது அந்தச் செல்வம் இருந்து வருகிறது. அவர்களும் பண்ணாராய்ச்சி பண்ணி வருகிறார்கள். ஓதுவாமூர்த்திகள் வாழவேண்டும். தேவாரம் வாழ வேண்டுமென்றால், திருமுறைகள் வாழவேண்டுமானால், திருப்புகழ் வாழவேண்டுமானால், என்ன செய்ய வேண்டும்! இதைப் பாடுகின்றவர்கள் வளத்தோடு வாழ வழிவகுக்க வேண்டும். அவர்களைச் சங்கீதப் புலவர்கள் ஆக ஆக்க வேண்டும். ''உங்களுடைய பழைய சங்கீதத்தை வளர்த்துக் காட்டுங்கள்'' என்று வேண்ட வேண்டும். அதிலே மக்களுடைய உள்ளம் ஈடுபடும். ஈடுபடாமல் இல்லை. ஈடுபடக்கூடும். ஆனால் நீங்கள் அதை அலட்சியப்படுத்திவிடுவீர்களானால், மெல்லிசைதான் சிறப்பு. மெல்லிசையைத்தான் உலகத்தில் பலரும் விரும்புகிறார்கள் என்று தோன்றும்; ரேடியோ இசையை நம்புவதால் நாம் ஏமாந்தவர்களாவோம். இன்று அப்படி ஒன்றும் உண்மையில் காணோம், சங்கீதக் கச்சேரியில் கூட முதலாவதாக ஆண்டவனைப் பற்றித்தான் பாடுகிறார்கள். தேவாரம் திருவாசகம், திருப்புகழ் இவற்றை எல்லாம் பாடுகிறார்கள். மக்கள் இன்புறுகிறார்கள். ஏழிசையால் அருட்பாக்களை எழுப்பினால் காம, குரோத மோகலோபமத மாற்சர்யங்கள் எல்லாம் அடங்கி-உள்ளம் அடங்குகிற நிலை உண்டாகும்: உள்ளத்திலே ஒரு புண்டரிகம்-ஒரு வெண்தாமரை தோன்றுகிறது. அங்கே ஆண்டவன் எல்லோருக்கும் அருள் செய்கின்றான் என்று பாடுகிறார் ஞானசம்பந்தப் பெருமான், இந்தத் திருமுறைகளின் உண்மையைக் காணவேண்டுமானால் பண்ணோடுபாடி அனுபவிக்கவேண்டும். பேச்சாக அனுபவிப்பது வேறு. அதை நாங்கள் செய்ய முயல்கிறோம். ஆனால் பாட்டாக அனுபவிக்கவேண்டும். பாட்டாக அனுபவிக்கவே அவர்கள் அந்த வகையில் பாடினார்கள். ''எப்படிப் பாடினரோ?'' என்பார்களே அப்படிப் பாடினால் அந்தப் பெரும்பயன் இன்று நமக்குக் கிடைக்கும். எப்படி இன்று அரசியல் தலைவர்களிடத்தில், வெள்ளித் திரை நட்சத்திரங்களிடத்தில் நாம் நம்பிக்கை வைத்திருக்கிறோமோ, அந்த நம்பிக்கையைத் திருமுறைகளிடத்தில் நாம் வைக்க வேண்டும்.

71 ஆண்டு உலகத்தில் நான் வாழ்ந்தவன். தமிழ்நாடு முழுவதையும் சுற்றிப் பார்த்தவன். கோயிலுக்குப் போய்க்கொண்டிருக்கிறவர்களில் ஒருவன். இன்றுபோல் மக்கள் திரள் திரளாகக் கோயிலுக்கு முன்பு போனார்கள் என்று எண்ணுவதற்கில்லை. நிறையப்பேர்கள் கோயிலுக்குப் போகிறார்கள். ஆனால் கடவுளை ஏமாற்றலாம் என்று நினைக்கிறார்கள். பெரியவர்களுக்குப் போய் மாலை போடுவதுபோல, ஆண்டவனுக்கு மாலை போட்டு மகிழ்வித்துவிடலாம் என்று சிலர் நினைக்கிறார்கள். இறைவனோ உள்ளே நின்று சிரிக்கிறான். ''பொக்கம் மிக்கவர் பூவும் நீரும் கண்டு நக்கு நிற்பன் அவர் தம்மை நாணியே'- என்று சொல்வார்களே, அதுபோல அத்தகையவர்களைக்கண்டு இறைவன் சிரிக்கிறான்.

இறைவனை எங்கே கண்டார்கள்? 'தேடிக் கண்டு கொண்டேன் என் உள்ளத்தே' என்பதாக உள்முகமாகத் தேடி இறைவனைக் கண்டு கொண்டார்கள். தாம் உள் முகமாகப்பெற்ற

பேரின்பத்தினலே ஆண்டவனை [மக்களிடத்தெல்லாம் கண்டார்கள். அப்பர் சுவாமிகள் கயிலாயம் முதல் கன்னியாகுமரி வரை பார்த்தவர். கயிலாயக் காட்சியைத் திருவையாற்றில் வந்து கண்டுகொள் என்முன் இறைவன். திருவையாற்றிலே கயிலாயக் காட்சியைக் கண்டு பாடுகிருர்.

மாதர்ப் பிறைக் கண்ணியானை
 மலையான் மகளொடும் பாடிப்
போதொடுநீர் சுமந்தேத்திப்
 புகுவார் அவர்பின் புகுவேன்.
யாதும் சுவடு படாமல்
 ஐயாறு அடைகின்றபோது
காதல் மடப்பிடி யோடும்
 களிறு வருவன கண்டேன்
கண்டேன் அவர் திருப்பாதம்
 கண்டறியாதன கண்டேன்

என்று பாடுகிருர். ஒரு பெண் யானையைப் பார்த்தேன், ஒரு ஆண் யானையைப் பார்த்தேன் என்கிருரே-அது என்ன ஜுவா? (ZOO) ஆண்யானையும், பெண்யானையும் மறைய அவற்றையே அம்மையப்பனுகக் காண்கின்முர். யானையை யானையாக, மாட்டை மாடாகப் பார்த்த காட்சி மறைய, எல்லாவற்றின் ஊடேயும் இறைவனைக் காண்கின்ற அற்புதக் காட்சியைக் காண்கிருர். எல்லாவற்றையும் கூத்தாட வைக்கின்ற கூத்தாட்டப்பெருமானை உள்ளத்தே காண்கிருர். இந்த உலகம் எல்லாம் எப்போது நமக்கு அம்மையப்பனுகத் தோன்றுகிறதோ, அன்றுதான் நாம் வெற்றி அடைந்தோம். நம்மை அறிந்தோம். நம் உள்ளே இருக்கிறவனை அறிந்தோம்.

நாம் எண்ணிப்பார்க்கவேண்டும்? அப்படிக் காண்பதற்குத் தடை என்ன? ஆணவம்தான். கோயிலுக்கு உற்சவம் பண்ணுகிறவர்களைப் பார்த்திருக்கின்றேன். சென்னைப் பட்டணத்தில். இன்று ஒருவர் உற்சவம் செய்கிருர். திட்டம் என்ன ஐந்தாயிரம், அப்படியானுல் நாளைக்கு நம் திட்டம் ஆறுயிரம். இன்னெருவர் அடுத்த நாளைக்கு ஏழாயிரம் என்பதாக இப்படி அடுத்தவனைவிடத் தான் உயர்ந்தவன் என்பதைக் காட்டத் திட்டம் போடுகிருர்கள். ஆண்டவனுக்குரிய வாகனத்தைஅகற்றிவிட்டுத் தம்முடைய ஆணவமாகிய வாகனத்தை வைக்கின்ற தன்மையிருக்கிறதே, இதைப்பற்றி என்ன சொல்வது? இப்படி இருக்கிற நிலை மாறவேண்டுமானுல் உள்ளம் உருகவேண்டும். வெளியிலே பலபல வெற்றிகளை அடைந்து என்ன பயன்? உள்ளத்தை வெற்றிகொள்ள வேண்டும். காமக்குரோத மோகமத லோப மாற்சரியங்களை வெற்றி சொள்ள வேண்டும் பக்திமார்க்கம், கர்ம மார்க்கம் என்றெல்லாம் எத்தனையோ மார்க்கங்களைச் சொல்கிருர்கள்.

ஆனல் ஞானசம்பந்தர் இரண்டு நெறி சொல்கிருர். ஆடல் நெறி, பாடல் நெறி என்பதாக. பாடு ஆண்டவனை அடைவதற்கு. உன்னை மறந்து ஆடு இறைவனை அடைவதற்கு என்கிருர். எத்தனைபேர் நாட்டியத்தை அறிந்து ரசிக்கிருர்சள் என்று தெரியாது. ஆபரணங்களையும், ஆடைகளையும் ரசிக்கிருர்கள். ஆனுல் அதனை உள்ளபடி ரசிக்கத் தெரிந்தால், ஆடல் நெறியிலே நாம் ஆண்டவனைக் காண முடியும்: இப்படித் தம்மை அறிவார், தம்மை அறிவார், உலகத்தை அறிவார். இது இரண்டையும் அறியும்போது உள்ளே இருக்கிற ஆண்டவனை உணர்வார். இதை எல்லாம் தேவாரத்திலே உள்ள சாத்திரப் பகுதிகளைச் சுட்டிக்காட்ட இருப்பவர்கள் சொல்வார்கள். திருமுறைகளில் எவ்வளவோ இலக்கிய நயம் இருக்கிறது? அப்பா உனக்கு முத்து வேண்டுமா? பவழம் வேண்டுமா? என்ன வேண்டும். இயற்கை அன்னை எங்கே பார்த்தாலும் அவற்றைக் குவித்து வைத்திருக்கிருள். இதோ பார்—ஒரு பாக்குமரம். பாளையில் தோன்றி உள்ள வித்துக்கள் முத்துபோல இருக்கின்றன. அதிலே இருக்கிற காய் மரகதம்போல இருக்கிறது. பின்னே நன்ருகப் பழுத்திருக்கிற போது பவழம்போல இருக்கிறது. இப்படி முத்து மரகதப் பவழங்களை எல்லாம் பாக்கு மரத்திலே காட்டுகிருர். இறைவனுடைய பேராற்றலை உணர்கிற போதுதான் உலகம் எல்லாவற்றையும் அவன் அருளாகக் காண முடியும். உண்மையான மணி எது? உண்மையான பவழக் குன்று எது? மாணிக்கக் குன் எது? எல்லாவற்றுக்கும் மூலமாக இருக்கிற அம்மையப்பனே என்பதைக் காணமுடியும் அவர்கள் இயற்கையைப் புறக்கணிக்கவில்லை.

இயற்கையின் அழகை எல்லாம் அம்மையப்பனின் அழகாகக் கண்டார்கள். ஒவ்வொரு ஊருக்குச் சென்றபோதும் அங்கேயுள்ள இயற்கை அழகை எல்லாம் வேறு எந்தப் பாவாணரும் பாடாத நெறியில் பாடிக் காட்டி மக்களது உள்ளத்தை இறைவன் திருவடியிலே பிணைத்திருக்கிறார்கள்.

அதற்குமேலே திருவீழிமிழலைக் கோயில், வானத்தில் இருந்து இறங்கியது என்பது புராணம். அந்த ஊரில் குறமகள் பாடுகிறாள். தன் குழந்தைக்குத் தாலாட்டு. 'க்ளாசிகல்' (Classical) சங்கீதம் இல்லை. அன்போடு தன்னை மறந்து பாடுகிறாள். அதைக் கேட்டு அந்தக் கோயில் வானத்தில் இருந்து இறங்கிற்றாம். வானத்தில் இருந்து இழிந்து இறங்க வேண்டுமானால் எவ்வளவு உள்ளம் உருகி, அன்பு பொங்கியிருக்கவேண்டும். இதுதான் பாடல் நெறி—குறத்தி பாடினால் என்ன? அந்தத் தாயின் உள்ளத்தில் பொங்கிய அன்பிற்கு உருகி இறைவனே இறங்கிவிட்டான் என்கிறார். இதைப்போல எந்தப் புலவன் பாடினான்? எவ்வளவுதூரம் சங்கீதத்தில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டவர் என்பதைத் தெரிந்துகொள்ளலாம்.

அப்பர் சுவாமிகள் 'கள்ளக் கம்பனைக் கண்டுகொண்டேன்' என்பார். 'வாராதே வருவானை' என்பார். என்ன பொருள்? நம் உள்ளத்துள்ளேயே இருக்கிறான். நாம் அவனைக் காணாது அலைகிறோம். பக்குவ நிலை வரும் போது அவன் தன்னைக் காட்டுகிறான். 'காட்டுவித்தால் யார் ஒருவர் காணாதாரே' அடக்குகிறான். 'அடக்குவித்தால் யார் ஒருவர் அடங்காதாரே'. மாணிக்கவாசகர் எம்பெருமானின் திருக்காட்சியைக் காணும் நிலையைப் பாடுகிறபோது, நமக்காகத்தான் பாடினார் போலத் தோன்றுகிறது. அந்தப் பாடல்கள் எல்லாம், இன்று நம்முடைய மாணவர்களுடைய உள்ளத்தில் பதியுமானால், எத்தனை குறைகள் அகன்றுவிடும்? இறைவனே நமக்குத் தோன்றாத் துணையாக இருக்கிறான்.

ஞானசம்பந்தப் பெருமான் இறைவனை ''என் உள்ளம் கவர் கள்வன்'' என்பார். நம்முடைய மற்ற மற்ற பொருள்களை எல்லாம் திருடுகிற கள்வர்கள் இருக்கிறார்கள். ஆனால் யாராலும் உள்ளத்தைக் கவர்ந்துசென்றுவிட முடியாது. அவன் என் உள்ளத்தையே கவர்ந்து சென்றுவிட்டான் என்கிறபோது, அவன் எத்தகைய கள்வனாக இருக்கவேண்டும். இந்தப் பாடலை அகப்பொருள் துறையில் அமைத்திருக்கிறார். வேதத்திலே,

''தஸ்கரஸ்ய தஸ்கர''

என்ற வாக்கியம் வருகிறது. 'திருடனுக்குத் திருடன்' என்றால் நமக்கே பொருள் விளங்காது. மாக்சுமில்லர் இதை மொழி பெயர்க்கிறபோது ''இது திருடர்களால் எழுதப்பட்டது'' (This might have been Written by a thief) என்கிறார். திருடர்களுக்கு எல்லாம் திருடர் என்றால் என்ன பொருள்? ஞானசம்பந்தர் சொன்னாரே—'என் உள்ளம் கவர் கள்வன்' என்பதாக அதைப் பார்த்தால் புரியும். மற்ற மற்ற திருடர்களுக்கு எல்லாம் கைவரப்பெறாத கலை மனத்தையே திருடிச் செல்லும் முறை. இதைப் பார்த்தவுடன் 'தஸ்கரஸ்ய தஸ்கர' என்பது புதுமையாகத்தோன்றவில்லை. பழமையானவர்கள் சொல்லிய ஆழ்ந்த பொருள்களை எல்லாம் திருமுறைகளிலே தெளிவாகக் கண்டுவிட முடியும். வேதாந்த தேசிகர் வடமொழிச் சாத்திரங்கள் எல்லாம் படித்தவர். ஆனால் நாலாயிரத்தைப் படித்தவுடனே ''தெளியாத மறை நிலங்கள் தெளிந்தேன்'' என்கிறார். வைணவப் பெருமக்கள் அந்தப் பாடல்களுக்கு எல்லாம் எழுதிவைத்துள்ள உரைகளைப் பார்க்கும் போது திருமுறைகள் நன்கு விளங்கும்.

இந்தத் திருமுறைகளைப் பண்டைப் பண் முறையில் பாடிப் பரப்புவதற்கு நாம் வகை செய்தாகவேண்டும். இன்றைக்கு எம். ஏ. தத்துவ சாத்திரம் படிக்கிறவர்கள் இருக்கிறார்கள். அது வாழ்வுக்கு என்பது அவர்களுக்குத் தெரியவில்லை. படிப்பாகவே இருக்கிறது. பெரியவர்கள் என்ன செய்திருக்கிறார்கள்? விளையாட்டு நெறி முறைக் கல்வி' (Play way method of education) என்பார்கள் விளையாட்டு முறைகளினாலேயே எல்லாவற்றையும் போதிக்க முடியும் என்கிறார்கள். மாணிக்கவாசகர் பாடல்களைப் பாருங்கள். உந்தியார். ஊஞ்சல், சாழல் போன்றவைகள் எல்லாக

பெண் குழந்தைகள் பாடுகிறபாடல். திருப்பாவை, திருவெம்பாவைப் பாடல்கள் எல்லாம் என்ன? இவை எல்லாம் கடல் கடந்துபோயிருக்கின்றன, நான் பாங்காக் போயிருந்தபோது அவர்களுடைய தேசீயத் திருவிழாவுக்கு-நம்முடைய திருவிழாவுக்கு இல்லை-திருப்பாவை, திருவெம்பாவை விழா என்றே சொன்னார்கள். அந்த வார்த்தை அவர்கள் பேசுகிற மொழியிலில்லை. நம் தமிழ்ப் பெயர் அதற்கு அமைந்திருக்கிறது. இப்படி எவ்வளவுதூரம் நம்முடைய சமயக் கலாசாரம் ஊடுருவியிருக்கிறது என்பதைப் பார்க்கலாம்.

இவற்றை எல்லாம் பாடவேண்டியவர்கள் ஒரு சிலர்தான் என்ற எண்ணம் போகவேண்டும் இவை எல்லோருக்கும் உரியது. எல்லா மக்களும் உணர்ந்து கொள்ளும் வண்ணம் இதனைப் பரப்பவேண்டும். மக்களுக்கு இதனை விளக்கக் காலத்திற்கேற்ற உவமைகளை மேற்கொள்ளவேண்டும். உலகம் இவற்றை ஏற்றுக் கொள்ளக் காத்துக்கொண்டிருக்கிறது. இந்தப் பெரிய திருவாவடுதுறை ஆதீன மடாலயம் திருமூலரோடு தொடர்புடையது. பெரு மக்கள் பலரோடு தொடர்புடையது. சிவ யோகிகள் பலர் வாழ்ந்த இடம். பல தமிழ் நூல்களைக் கொடுத்த இடம். தலைவர் சொன்னார்கள், பல்கலைக்கழகம் என்று. ''ஆக்ஸ்போர்டு யுனிவர்ஸிடி'' போன்ற பெரிய பல்கலைக் கழகமாக மிளிர்வது இது. ஆனால் உலகம் இருக்கிற சூழ்நிலை கண்டு குருமார்கள் கொஞ்சம் ஒதுங்கினார்கள். இது ஒதுங்கியிருக்கிற காலம் இல்லை. பண்டைய காலம் போல ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் சமுதாயத்தின் தலைமையை ஏற்றுக்கொண்டாகவேண்டும் அஞ்சவேண்டாம். உறுதிவேண்டும். அரசியலுக்கு அஞ்சியும், நட்சத்திரங்களுக்கு அஞ்சியும் ஒதுங்கி நிற்காது, எதிர்த்து நிற்கவேண்டும், ஆண்டவன் இருக்கிறான். சக்தி நமக்குத் துணை. சிவன் நமக்குத் துணை. அந்த உறுதிவந்துவிடுமானால், எதற்காக நாம் ஒதுங்க வேண்டும்? தேவாரத்தைக்கற்ற பின்னர், திருவாசகத்தைக் கற்றபின்னர், பெரியபுராணத்தைக் கற்ற பின்னர், அந்த உறுதி நமக்கு வரவில்லையானால் யார் நம்மைக் காக்கக்கூடியவர்கள் என்று கேட்கிறேன்.

இந்தத் திருமுறைக் கருத்தரங்க மகாநாடு ஒரு நிலையாக ஆகி, இந்தப் பாடல்கள் எல்லாம் அங்கங்கே சிறுவர்கள், சிறுமியர்கள், யாவருடைய நாவிலும் ஒலிக்கும்படியாகச் செய்தாகவேண்டும். அப்படிப்பட்ட ஒரு உறுதியான தொண்டினைச் செய்ய, நமது குருமகா சந்நிதானம் முன்னின்று நடத்தியாகவேண்டும். இது நம் நாட்டுக்கு மட்டுமல்ல. இவை சிவனோடு தொடர்புடையது என்று நினைக்கிறோம். சிவனோடு தொடர்பில்லாதது உலகத்தில் எது இருக்கிறது? சிவம் எல்லோருக்கும் உரியது. எல்லா உலகங்களுக்கும் உரியது.

148689

நான் ஜப்பானுக்குச் சென்றேன் என்றேனே, அங்கே கூடிய அகில உலக மகாநாட்டில், அமைதியை நிலைநாட்டச் சமயங்கள் எப்படித் துணை புரிய முடியும் என்பதை ஆராயச் சமயத்தொண்டர்கள் எல்லாம் வந்திருந்தார்கள். அவர்கள் என்ன சொன்னார்கள்? நாம் இன பேதம் பாராட்டுவதை விட்டுவிடவேண்டும். எல்லோரையும் ஆண்டவனுடைய குழந்தைகளாகக் காணவேணடும். செல்வர்கள் ஏழைகளுக்கு உதவ, செல்வ நாடுகள் ஏழ்மை நிலையில் உள்ள நாடுகளுக்கு உதவ முன்வர வேண்டும், என்பது போன்ற 'வளர்ச்சித் திட்டங்கள்' முதற்படி.

மனிதனை மனிதனாகக் காண்கின்ற கண், இந்த உலகத்தில் இன்று இல்லை. அவன் கறுப்பன், இவன் வெளுப்பன், இதுபோன்ற எண்ணங்கள் இருக்கின்றனவே, இவை எல்லாவற்றையும் ஒழித்தாகவேண்டும். இன்றைக்கு அன்பே சிவம் என்பது நம் சைவம். இதை எங்கே காணமுடியும்? அன்பே சிவம் என்று வாழவேண்டும். நாம் அப்படி வாழ்ந்தால் நம்மவர்கள் அப்படி வாழ்வார்கள்.

இந்தத் திருமுறைகளின் உண்மைக் கருத்துக்களை நான் முன்பாக உணரவில்லை. ஒரு குருநாதன்-மகாத்மா காந்தியடிகள் - அவர் வாழ்ந்த அடிச்சுவட்டிலே நான் பின்பற்றிச் செல்கிறபோது, இந்தத் திருமுறைகளின் உட்கருத்தெல்லாம் உணர முடிந்தது. ஒரு எறும்பைப்போல ஒரு அணிலைப்போல அவரைப்

பின்பற்றிச் செல்கிறபோது, பலப்பல உண் மைகளைக் காணமுடிந்தது. பெரிய இந்தியா விலே தனி ஒரு மனிதன் செய்துகாட்டிய அற்புதங்கள் எத்தனை?

நமக்கு நால்வர் இருக்கிறார்கள், அவர்கள் போன வழியிலே போவோம். இனி எல்லாவற் றையும் விட்டுவிட்டுத் திருமுறைகள் ஒன்றையே நிலைநாட்டக் குருமகாசந்நிதானம் அவர்கள் முன்வந்துவிடவேண்டும். எங்களுக்கு எல்லாம் தலைமைப் பொறுப்பை ஏற்று நடத்தவேண்டும். அவர்களுடைய பெருங் கருணையினால் நாம் உய்வோம். நாடு உய்யும். உலகம் உய்யும், நமது திருமடங்களின் பழைய பெருமை ஓங்கும். எத்தனையோ திருமுறை மகாநாடு களில் பேசிப் பேசி, அலுத்து அயர்ந்து புளித் துப்போன உள்ளத்தோடு பேசுகின்றேன். குருமகா சந்நிதானம் அப்படித் தொண்டாற்ற முன்வருகிறபோதுதான், ஒரு புதிய யுகத்தைத் தொடங்கியவர்கள் ஆவோம். அன்றைக்கு இடையூறுகள் ஏது?

''முன்னவனே முன்னின்றால் முடியாதது ஒன்றுண்டோ?''

வணக்கம்



திருவிடை மருதூரில் நிகழ்ந்த திருமுறைக் கருத்தரங்க விழாவில், யானையின் மீது ஏற்றித் திருமுறைகளை ஊர்வலம் செய்வித்த அழகிய இனிய அரியகாட்சி (12-2-71)

மாசிக் கடலாட்டு விழா

(ந. ரா. முருகவேள், M. A., M. O. L.,)

முன்னுரை :

பண்டைத் தமிழ் மக்கள் குறிஞ்சி நிலத்தில் தோன்றினர்; முல்லை நிலத்தில் வாழ்ந்தனர்; மருத நிலத்தில் வாழ்க்கைச் செழிப்பில் வளர்ந்தனர்; நெய்தல் நிலத்தில் பரவிச் சிறந்தனர். அவர்களின் வாழ்க்கை இயற்கையோடு இயைந்து இனிது விளங்கியது. இயற்கையின் நலன்களை இனிது உணர்ந்து அவற்றோடு இயைந்து நின்று, இயற்கை தரும் இன்ப எழில் நலன்களையெல்லாம் அவர்கள் இனிது துய்த்து மகிழ்ந்து மாட்சியுற்றனர். இயற்கையின் வாயிலாக இறைவனை உணர்ந்தனர்; வழிபட்டனர். இயற்கையை உடலாகவும், இறைவனை அவ்வியற்கைக்குள் அமர்ந்துறையும் உயிராகவும் கொண்டு போற்றி வழிபட்டு வந்தனர். இயற்கை நெறி பிறழாமல், இயற்கையைத் தழுவி அதனோடு இயைந்து ஒழுகிநின்ற பண்டைத் தமிழ் மக்களின் வாழ்க்கை, பல துறைகளிலும் மேம்பாடுற்றுச் சிறந்து விளங்கித் திகழ்ந்தது.

மாசிக் கடலாட்டு :

பண்டைத் தமிழக மக்களின் இயற்கையோடு இயைந்த இன்ப நல்வாழ்வின் அடிப்படையில் அமைந்து, அதனை என்றும் நம்மனோர்க்கு நினைவூட்டிக் கொண்டு நிற்கும் நிலையில், தொன்றுதொட்டுக் கொண்டாடப் பெற்றுவரும் விழாக்கள் பலவற்றுள், 'மாசிக் கடலாட்டு விழா' என்பது தலை சிறந்த தொன்றாகும்.

கடலுக்கும் தமிழ்மக்களுக்கும் நீண்ட நெருங்கிய தொடர்பு உண்டு. தமிழ் மக்கள் மிகப் பழங்காலத்திலேயே திரை கடல் ஓடியும் திரவியம் தேடியவர்கள். கிரேக்கம், இத்தாலியம், எகுபதியம், சீனம் முதலிய மிகப் பழைய நாகரிக நாடுகளுடனெல்லாம், கடல் வழியாகத் தொடர்பு கொண்டு பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வாணிபம் செய்து வந்தவர்கள் தமிழர்கள் என்பதற்குப் பலவகை வரலாற்றுச் சான்றுகள் உள்ளன. இடைக்காலத்திலும் இலங்கை, பர்மா, மலேயா, ஜாவா, சுமத்திரா முதலிய அயல்நாடுகளுடன் தமிழகம் கடல் வழியாகத் தொடர்பு கொண்டிருந்தது. கடல் கடந்த இவ் அயல்நாடுகளிலும் தமிழகத்திலிருந்த பல்லவ சோழ பாண்டியப் பேரரசர்களின் ஆட்சி பரவிவிளங்கியது.

இங்ஙனம் கடலுக்கும் தமிழ் மக்களுக்கும் இருந்த தொடர்பின் விளைவாகவே, கடலாட்டு விழாப்பண்டைக்காலந்தொட்டு, கொண்டாடப் பெற்றுவருவதாயிற்று. நெய்தல் நிலமாகிய கடற்கரையைச் சார்ந்துள்ள தமிழ் நாட்டுத் தலங்களில் எல்லாம் மிகப் பழங்காலத்திலேயே இக் கடலாட்டு விழா நிகழ்ந்து வந்த செய்தி,

மடலார்ந்த தெங்கின்
    மயிலையார் மாசிக்
கடலாட்டுக் கண்டான்
    கபாலீச் சரம்அமர்ந்தான்;
அடல்ஆனேறு ஊரும்
    அடிகள் அடிபரவி
நடமாடல் காணாதே
    போதியோ பூம்பாவாய்

என இற்றைக்கு 1300 ஆண்டுகட்கு முன்னர் விளங்கியிருந்த திருஞான சம்பந்தப்பெருமான் அருளிய தேவாரப் பாடலால் தெற்றெனப் புலனுகும்.

சிலப்பதிகாரம் :

கடலிற் சென்று நீராடுதல் உடல் நலத்திற்கும் உயிர் நலத்திற்கும் நன்மை பயப்ப தொன்றுகத் தமிழ் மக்கள் நன்கினிது அறிந்து இருந்தனர். முத்தமிழ்ப் புலமை வித்தகராகிய இளங்கோவடிகள் இயற்றியருளிய, நெஞ்சை அள்ளும் சிறப்புடைய செஞ் சொற் காப்பியமாம் சிலப்பதிகாரத்தின்கண், "கடலாடுகாதை" என ஒரு பகுதி அமைந்திருத்தல் காணலாம். உவா எனப்பெறும் நிறைமதி நாளாகிய பௌர்ணமி தினத்தில், கடலிற் சென்று நீராடுதல் பலவகை நலன் தரும் என்று பண்டைக் கால மக்கள் பாங்குற உணர்ந்திருந்தனர். அதனுல் நிறை நிலா நாளில் கடலிற்குச் சென்று நீராடுதல் அனைவருக்கும் உரியதொரு பெரு வழக்கமாக இருந்துவந்தது. இதனை,

''உருகெழு மூதூர் உவவுத்தலை வந்தெனப்
பெருநீர் போகும் இரியல் மாக்கள்''

என வரும் சிலப்பதிகார வரிகளால் செவ்விதில் தெளியலாம்.

மாசிமகம் :

முழுநிலா நாளாகிய பௌர்ணமி, முறையே சித்திரை மாதத்திற் சித்திரை நட்சத்திரத்திலும், வைகாசியில் விசாகத்திலும், ஆனியில் கேட்டையிலும், ஆடியில் உத்திரட்டாதியிலும், ஆவணியில் அவிட்டத்திலும், புரட்டாசியில் பூரட்டாதியிலும், கார்த்திகையில் அசுவனியிலும், மார்கழியில் மிருகசீரிடத்திலும், தையில் பூசத்திலும், மாசியில் மகத்திலும், பங்குனியில் உத்திரத்திலும் அமையும். இவ் எல்லா முழுமதி நாள்களிலும் கடலாடுதல் சிறப்புடையதாயினும், மாசி மாதத்து மக நட்சத்திரத்தில் வரும் பௌர்ணமி நாளில் கடலாடுதல் மிக்க சிறப்பும் பயனும் உடையதாக, நம்முன்னேர்கள் நன்கினிது அறிந்து வரையறுத்து வகுத்து வைத்துள்ளனர். அதற்குக்காரணம், மகம் என்னும் நட்சத்திரக் கூட்டம் வெட்டரிவாள் போன்று வளைந்து கரை போலவும், அவற்றின் இடைப்பட்ட முழு நிலா கடல் போலவும் தோன்றும் ஒருவகை இயைபுடைமையே போலும்.

''மழைநீங்கிய மாவிசும்பின்
மதிசேர்ந்த மகவெண்மீன்
உருகெழுதிறல் உயர்கோட்டத்து
முருகமர்பூ முரண்கிடக்கை
வரியணிசுடர் வான்பொய்கை''

எனவரும் பட்டினப்பாலை வரிகள், இங்குச் சிந்தித்து மகிழத் தக்கன. 'மதியும் மகவெண் மீனும்' கோயிலும் பொய்கையும் போன்றன என்று, நச்சினர்க்கினியர் வரைந்துள்ள விளக்கமும், ஈண்டு அறிந்து போற்றுதற்கு உரியது.

தீதுநீங்கக் கடலாடல் :

கடலாடுதல், சிறப்பாக, கடலும் ஆறும் கலக்கும் ஒரு சங்கமுகத் துறையில் சென்று நீராடுதல், பெரும் புண்ணியத்தையும் பயனையும் தரும். இவ்வுண்மையைச் செவ்விதின் உணர்த்தும் பகுதி ஒன்று சிலப்பதிகாரத்தில் வந்துள்ளது. ''கண்ணகியே! நீ கண்ட கனவு குறித்து, வருந்திக் கவலை கொள்ளுதல் வேண்டா. நீ நின் கணவன் ஆகிய கோவலனுல் வெறுக்கப்பட்டாய் அல்லை. முற்பிறப்பில் நீ நின் கணவன் பொருட்டுக் காக்க வேண்டிய நோன்பில் தவறிவிட்டாய். ஆதலின் இத் துன்பம் நேர்ந்தது. கடலொடு காவிரி சென்று கலக்கும் சங்கமுகத்துறையின்கண், சோம குண்டம், சூரியகுண்டம் என்னும் இரண்டு பொய்கைகள் உள்ளன. அவற்றில் மூழ்கி அங்கேயுள்ள காமவேள் கோயிலை வழிபடுபவர்கள், இம்மையிற் கணவருடன் கூடி மகிழும் இன்ப வாழ்வைப் பெறுவார்கள்; மறுமையிற் போக பூமியிற் சென்று பிறந்து இன்பம் நுகர்வார்கள். நாம் இருவரும் ஒரு நாளைக்கு அங்குச் சென்று நீராடி வழிபடுவோம்'' என்று, கற்புத் தெய்வமாகிய கண்ணகிக்கு, அவளது நற்பெருந் தோழியாகிய தேவந்தி என்பவள் கூறுவதாக,

''கடலொடு காவிரி சென்றலைக்கும்
முன்றில்
மடலவிழ் நெய்தல்அம் கானல் தடம் உள;
சோமகுண்டம் சூரியகுண்டம் துறை மூழ்கிக்
காமவேள் கோட்டம் தொழுதார்,
கணவரொடு
தாம் இன்புறுவர் உலகத்துத் தையலார்;
போகம் செய் பூமியினும் போய்ப்
பிறப்பர்;
யாம் ஒரு நாள் ஆடுதும்''

எனவரும் சிலப்பதிகாரப் பகுதி, கடலாடுதலால் விளையும் பயனை ஒருவகையில் விளக்குதல் காணலாம்.

பட்டினப்பாலை:

இங்ஙனமே பட்டினப்பாலை என்னும் சங்க கால நூலில்,

''தேறுநீர்ப் புணரியொடு
யாறுதலை மணக்கும்
மலிஓதத்து ஒலி கூடல்
தீது நீங்கக் கடலாடி''

எனவரும் சிறந்த வரிகளும், அவற்றிற்கு நச்சினார்க்கினியர், ''தெளிந்த கடலில் திரையோடு காவிரியாறு தலைகலக்கும் ஓதத்தினால் ஒலிமிகுந்த புகார் முகத்தே, **தீவினை போகக் கடலாடி**'' என வரைந்துள்ள உரை விளக்கமும், ஈண்டு நாம் உணர்ந்து இன்புறற்பாலன. இவ்வாற்றால் கடலாடுதல், நமது தீவினை கழிதற்குக் காரணமாதல் உணரலாம்.

தீர்த்தவாரி:

இவ்வடிப்படையிலேயே கடலாட்டு விழா ஒரு பெரும் கடவுட் டிருவிழாவாகப் பண்டு தொட்டுக் கொண்டாடப் பெற்று வருகின்றது.

ஆனந்த வெள்ளத்து அழுந்தும் ஓர்
ஆருயிர் ஈர் உருக்கொண்டு,
ஆனந்த வெள்ளத் திடைத் திளைத்தால்
ஒக்கும்; அம்பலம் சேர்
ஆனந்த வெள்ளத்து அறைகழலோன்
அருள் பெற்றவரின்,
ஆனந்த வெள்ளம் வற்றாது;
முற்றாது இவ் அணிநலமே

பிறவிக் கடலில் வீழ்ந்து துன்பக் கடலில் அமிழ்ந்தி வருந்தும் உலக மக்களை, இறைவன் அவற்றினின்று எடுத்து அருட்கடலில், இன்ப வெள்ளத்தில் அமிழ்த்தித் திளைக்கச் செய்யும் திருவருட் குறிப்பையே, 'கடலாட்டு விழா' அல்லது 'தீர்த்த வாரி' என்னும் சிறப்பு நிகழ்ச்சி உணர்த்துகின்றது எனலாம்.

இனி வேறுவகையிலும் நாம் இங்குச் சிந்தித்தல் தகும். இறைவனையே ஒருவகையில் **கடல்** என்றும், **தீர்த்தம்** என்றும் உருவகம் செய்து பெரியோர்கள் போற்றுவர். ''உருகிப் பெருகி உளம் குளிர முகந்துகொண்டு பருகற் கினிய பரங்கருணைத் தடங்கடல்'' என்றும், ''மரணம் பிறப்பென்று இவையிரண்டின் மயக்கறுத்த **கருணைக் கடலுக்கே** சென்று ஊதாய் கோத்தும்பி'' என்றும், பிறவாறும் மணிவாசகர் பாடி மகிழ்தல் காணலாம். இவ்வாறே அவர் இறைவனைத் தீர்த்தம் எனவும், தீர்த்தன் எனவும் போற்றிக் குறிப்பிட்டு, ''ஆர்த்த பிறவித் துயர்கெட நாம் ஆர்த்து ஆடும் **தீர்த்தன்** தில்லைச் சிற்றம்பலத்தே தீயாடும் கூத்தன்'' என்றும் பாடியிருக்கக் காண்கின்றோம்.

''கிரியை என மருவும் அவையாவும் ஞானம் கிடைத்தற்கு நிமித்தம்'' என உமாபதி சிவம் கூறுதற்கு ஏற்ப, நமது சமயச் சடங்குகளும் கோயில் விழாக்களும் ஆகிய பலவும், ஒவ்வொரு தத்துவ உண்மையை நுட்பமாக உணர்த்துதற் பொருட்டு அமைக்கப்பெற்றனவாகும். ''குறிகளும் அடையாளமும் கோயிலும் நெறிகளும் அவர் நின்றதோர் நேர்மையும்'' என வரும் திருநாவுக்கரசர் திருமொழியும் இவ்வுண்மையைச் செவ்விதின் உணர்த்தும். இம்முறையில் உயிர்கள் இறைவனின் திருவருட் கடலில் திளைத்து மகிழும் பேறு பெறுதல் வேண்டும் என்னும் சிறந்ததொரு தத்துவ நுட்பத்தினை, யாவரும் இனிது உணரும்படி நிகழ்த்திக் காட்டுவதே ''கடலாட்டு விழா'' எனவும் கூறலாம்.

விக்கிரமசோழன்:

மாசி மாதத்தில் மக நட்சத்திரத்தில் வரும் பௌர்ணமி தினத்தன்று கடலாட்டு விழா நிகழ்த்தி, கடற்கரையில் ஒரு மண்டபத்தில்

அல்லது ஒரு நல்ல சூழலில் இறைவனை எழுந்தருளுவித்து, வழிபட்டு மகிழும் வழக்கம், தொன்று தொட்டு இன்று காறும் நமது தமிழகத்தில் இடையருது நடைபெற்று வருகின்றது. இத்திருவிழாவின் சிறப்புக்களை விளக்கும் முறையில் கல்வெட்டுக் குறிப்பொன்றும் கிடைக்கப்பெற்றுள்ளது. சோழப்பேரரசர்களில் தலைசிறந்த ஒருவனுகிய விக்கிரமசோழன் (கி.பி, 1118—1136), இவ்விழாவிற் பெரிதும் ஈடுபட்டு, இதனை மிகவும் சிறப்புறக் கொண்டாடி மகிழ்ந்தான். தில்லைப் பொன்னம்பலவாணர், மாசித்திங்கள் மக நாளில் கடலாடி வீற்றிருக்க மண்டபமும், தில்லையம் பதியிலிருந்து அவர் கடற்கரைக்கு எழுந்தருளுவதற்குரிய பெரு வழியும், இப்பேரரசனுல் அமைக்கப்பெற்றன. விக்கிரம சோழனின் கட்டளையின்படி, மணவிற்கூத்தன் காலிங்கராயன் என்னும் தலைவன், மாசிக் கடலாட்டு விழா மண்டபமும், பெருவழியும் அமைத்தான். இதனை,

> மாசிக் கடலாடி வீற்றிருக்க மண்டபமும்,
> பேசுற்ற அற்றைப் பெருவழியும்,--ஈசற்குத்
> தென்புலியூர்க்கே அமைத்தான் கூத்தன்;
> திசையனைத்தும்
> மன்புலி ஆணைநடக்க வைத்து.

என வரும் கல்வெட்டுப்பாடல் உணர்த்துகின்றது. விக்கிரம சோழன் எடுப்பித்த மண்டபம், இந்நாளிலும் சிதம்பரத்திற்கு அருகிலுள்ள கிள்ளை (Kille) என்னும் ஊரில் இருத்தலை இன்றும் யாவரும் கண்டு மகிழலாம்.

முடிவுரை:

இத்தகைய பெருஞ்சிறப்பும் பழமையும் பயனும் மிக்க மாசிக் கடலாட்டு விழா, திருஞானசம்பந்தர் காலத்திற்கும் முன்பிருந்து, இன்றளவும் முறையே நடந்து வருதல், நாம் பெரிதும் எண்ணி எண்ணி இன்புறுதற்குரியது.

> பத்திக் கடலில்
> பதித்த பரஞ்சோதி,
> தித்திக்குமா பாடித்
> தெள்ளேணம் கொட்டாமோ.

என்பன போலவரும் திருவாசகப் பகுதிகளும், திருமொழிகளும் கூட, ஒருவகையில் மாசிக் கடலாட்டு விழாவின் மாண்பை உணர்த்துகின்றன எனலாம். இறைவன் நம்மைப் பிறவிக் கடலினின்று எடுத்து, பக்திக்கடலிலும் அருட் கடலிலும் இன்பக் கடலிலும் ஆட்டி நலம்புரிகின்முன். இவ்வுண்மையை யுணர்த்தவே, ''கடலாடு விழா'' என்னுமல், ''கடலாட்டு விழா'' எனத் திருஞானசம்பந்தர் பாடியருளியிருக்கின்முர். எனவே நமது திருமயிலையில் நிகழும் இக்கடலாட்டு விழாவில், நாம் அனைவரும் கலந்து கொண்டு ஸ்ரீகற்பகாம்பாள் உடனுறை ஸ்ரீ கபாலீச்சுவரப் பெருமானின் திருவடிகளை வழிபட்டு நலம் பலவும் பெற்று உய்வோமாக. ★

சென்னைத் தியாகராயநகர்த் தருமபுர ஆதீன சமய பிரசார நிலையத்தின் 17 ஆம் ஆண்டு விழாவில் முன்னுள் சபாநாயகர் புலவர் திரு. கா. கோவிந்தன் M.A., M.L A. அவர்களும், திருமதி அனந்தநாயகி B. A.. B.L.. M.L.A. அவர்களும் கலந்துகொண்டு உரை நிகழ்த்திச் சிறப்பித்தல். (1-1-71)

நெய் தீபத்தின் நன்மையும், கற்பூர தீபத்தின் தீமையும்

வித்துவான் ஸ்ரீமத். முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்,
ஜூனியர்., ஸ்ரீகாசிமடம், திருப்பனந்தாள்,

''செய்ஞ்ஞின்ற நீலம் மலர்கின்ற
தில்லைச்சிற் றம்பலவன்
மைஞ்ஞின்ற ஒண்கண் மலைமகள்
கண்டு மகிழ்ந்து நிற்க
நெய்ஞ்ஞின் றெரியும் விளக்கொத்த
நீல மணிமிடற்றான்
கைஞ்ஞின்ற ஆடல்சண் டாற்பின்னைக்
கண்கொண்டு காண்பதென்னே''

இது அப்பர் பாடிய கோயில் திருவிருத்தம். நெய் நின்றெரியும் விளக்குப் போன்றது நீல மணிமிடறு என்பது இங்குக் கண்டது. எனினும் இறைவனுக்கு முன்னர் இடையறாது எரியும் விளக்கிடப்பட்டிருத்தல் வேண்டும் என்பதும், அவ்விளக்கு ஒளியில் தில்லைச் சிற்றம்பலவன் ஆடல் காணலாம் என்று கூறுவதும் இங்கு அறிதற்பாலனவாகும். ஆகவே நிலையாக நின்று எரியும் விளக்கு இட்டால் மெய்ந் நெறி ஞானம் பெறலாகும் என்பது அப்பர் கருத்தாகும்.

''பெரும்புலர் காலை மூழ்கிப்
பித்தற்குப் பத்த ராகி
அரும்பொடு மலர்கள் கொண்டாங்
கார்வத்தை யுள்ளே வைத்து
விரும்பிநல் விளக்குத் தூபம்
விதியினால் இடவல் லார்க்குக்
கரும்பினிற் கட்டி போல்வார்
கடவூர்வீ ரட்ட னாரே''—என்பது

அப்பர்பாடிய திருநேரிசை. இதினின்று விளக்கு இடுவதால் இறைவன் கரும்பினிற் கட்டிபோல இனித்து அருள் செய்வான் என்பது பெறலாகும்.

கற்பூரம் காட்டுதலால் ஏற்படும் தீங்கு:

கோயில் தளத்தையும் இறைவன் எழுந்தருளப்பெற்ற கருவறையையும் விளக்குகள் ஒளிமயமாக்குதல் போல், இறைவனைத் தரிசிக்கச்செல்பவர் இறைவன் திருமுக மண்டலத்தைத் தரிசிப்பதற்குக் கற்பூரம் காட்டுவது பழக்கமாக இருக்கிறது. அர்ச்சனை செய்யும் சேவார்த்திகளும் அர்ச்சனைக்குப் பிறகு கற்பூரம் காட்டுவதும் வெகுவாக உள்ள பழக்கம். கோயில்களின் செல்வ வளத்துக்கு ஏற்ப ஒன்று முதல் ஆறு கால பூசை கோயில்களில் நடைபெற்று வருகின்றது. அக்கால பூசைகளில் இறுதியிலும் கற்பூரம் காட்டப்பெறுகிறது. அதனைக் கற்பூர நீராஞ்சனம் என்பர்.

நீராஞ்சனம் என்றால் நன்றாக விளங்கச் செய்தல் என்பது பொருள்: கருவறையில் உள்ள இறைவனுடைய திருமுக மண்டலத்தை நன்றாகத் தரிசிப்பதற்காகப் பண்டைக்காலத்தில் நெய் விளக்குக் காட்டப்பெற்றது என்று தெரியவருகிறது. நீராஞ்சனம் என்றதும் கற்பூர நீராஞ்சனம் என்று நினைக்கின்றனர்,

நன்ருக விளங்கச் செய்தற்கு நெய் விளக்கே போதுமானது. கற்பூரம் வேண்டற்பால தன்று.

கற்பூரம் என்று முன்னுட்களில் கூறப் பட்டது பச்சைச் கற்பூரமே. அதுவும் நின்று எரியக்கூடாது. அது புகையில்லாதது, மிகவும் விலேயுள்ளது. ஆதலின் அதனை விடுத்து இந் நாளில் விலே மலிவாகக் கிடைப்பதும் வேற்று நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பெறு வதும், பலவிதமான எளிதில் பற்றக்கூடிய கந்தகப் பொருள்களால் ஆக்கப்பெற்றதுமான கற்பூரத்தைக் கொளுத்தத் தொடங்கினுர்கள். இக்கற்பூரம் ஏற்று வதற்கு எளிது. ஆனல் அதனுல் ஆகும் செடுதிகள் பல கர்ப்பக்கிருகத் தைப் புகை படியச்செய்கிறது. கர்ப்பக்கிரு கத்தை எவ்வளவுதான் சந்தனம் பூசிப் பாது காத்தாலும் மேலும் மேலும் புகை படிவது கண்கூடு. கற்பூரம் காட்டும் சிவாச்சாரி யாருப் அப்புகையைப் பொறுத்துக்கொள்ள வேண்டியுள்ளது. அப்புகை அன்னேருடைய சுவாசப்பையைக் கெடுக்கும். அதனல் அன் னேரின் உடல் நிலே குன்றக்கூடும். இறைபணி நிற்றலில் உள்ள இடையருப் பற்றுக் காரண மாக அப்புகையைச் சகித்துக் கொள்ளுகிருர் கள். இதில் மற்ருெரு விநோதம் என்ன வெனில் கற்பூரம் காட்டித் தரிசிக்க வருபவர், கற்பூரப்புகையினுல் இறைவனின் திருமுக மண்டலத்தைத் தரிசிக்காமல் கற்பூர ஒளியை யும், புகையையும் மட்டும் காண்கிருர்கள். ஆகவே தரிசனப்பேறும் முற்றுப்பெறுவ தில்லே.

நெய் தீபம் :

கற்பூரம் காட்டுவதற்குத் திருமுறை களில் ஆதாரம் இல்லே. நெய் தீபம் காட்டு வதற்கே திருமுறைகளில் ஆதாரமுண்டு. ''எண்ணில் ஆகமம் இயம்பிய இறைவர்'' விரும்புவது பூசனேயே என்பது உணர்ந்த அம் மையே இறைவனே ஆகம விதிப்படி பூசனே செய்யுங்கால்,

''கொய்த பன்மலர் கம்பையாம் நதியிற்
குலவு மஞ்சனம் நிலவுமெய்ப் பூச்சு
நெய்த ருங்கொழுந் தூபதீ பங்கள்
நிறைந்த சிந்தையில் நீடிய அன்பின்
மெய்த ரும்படி வேண்டின எல்லாம்
வேண்டும் போதினில் உதவமெய்ப் பூசை
எய்த ஆகம விதியெலாம் செய்தாள்
உயிர்கள் யாவையுமீன்ற எம்பிராட்டி''

—என்று சேக்கிழார் பெருமான் பெரிய புராணத்தில் அம்மையார் நெய் தீபம் காட்டியது கூறியுள்ளமையும் இங்கு அறிதல் வேண்டும். எனவே கற்பூர தீபம் ஆகமத்திற்கு விரோதம் என்பதும், நெய் தீபமே ஆகம சம்மதம் என்பதும் தெளி வாக விளங்குகிறது.

நீராஞ்சனம் —நன்ருக விளங்குமாறு செய் தல் என்று பொருள்படுதலின், இறைவனின் திருமுக மண்டலத்தைத் தரிசிக்க நெய் தீபம் காட்டுதலே ஆகம சம்மதமாம். ''ஆடினுய் நறு நெய்யொடு பால் தயிர்'' என்ற தேவாரம் நெய்யாடுதலேக் குறிப்பிடுவது.

ஆகையால் நறு நெய்யால் தீபம் ஏற்று வதும் இறைவனுக்கு உகப்பதேயாகும். கற் பூரம் போலன்றி நெய் தீபம் நல்லொளி தரு வது. இறைவனுடைய திருமுக மண்டலத் தைச் செம்மையாகத் தரிசித்தற்கு ஒளி தருவ தாய் அமைவது. எவ்வளவு நேரம் எத்தனேத் தடவை நெய் தீபம் காட்டினுலும் புகை தோன்ருது. அன்றியும் நெய் விளக்கு எரியும் போது காற்றைத் தூய்மைப்படுத்திச் சுவாசத் திற்கு ஏற்ற காற்ருகமாற்றுகிறது என்பது ஆய்வாளர்களின் துணிபு.

கற்பூரம் காட்டுவது இம்மாநிலத்தில் தான் இடைக்காலத்தில் ஏற்பட்டிருக்கிறது. மலேயாள நாட்டிலும், கன்னியாகுமரி மாவட் டத்திலும், வடநாட்டிலும் நெய் தீபமே காட் டப்பெறுகிறது, விஷ்ணு கோயில்களில் இந் நாட்டிலும் நெய் தீபம் காட்டுவதே பெரும் பான்மை வழக்கு,

திருமுறைகளில் காணப்படாததும், உட லுக்கு ஊறு பயக்கக் கூடியதும் ஆகிய கற்பூரம் காட்டும் பழக்கத்தைச் சிறிது சிறிதாக அகற்ற வேண்டியது அவசியம். கர்ப்பக்கிருகத்தில் நெய் தீபம் மட்டுமே காட்டுதல் வேண்டும்.

சேவார்த்திகள் அர்ச்சனைப் பொருள்கள் கொணரும் பொழுது பெரும்பாலும் நெய்யும் கொணர்தல் உண்டு. ஆகவே கற்பூரம் காட்டுவதற்குப் பதில் நெய் தீபம் காட்டினால் சேவார்த்திகளும் விரும்பி ஏற்பர். அன்றியும் கோயில் திட்டங்களில் கற்பூரம் வாங்குவதை நிறுத்தி, அவ்விடத்தில் நெய்யும் திரியும் சேர்த்தால் கோயில்களில் கற்பூரம் காட்டுதல் இன்றி நீங்கும். பின்னர்ச் சேவார்த்திகளும் கற்பூரத்திற்குப் பதில் நெய்யும் திரியும் கொணர்வர். நெய்யில் ஆவின் நெய் சிறப்புடையது; கலப்பு நெய் மத்திமம்: எண்ணெய் அதமம். எனினும் எந்நெய்யாயினும் தீபம் காட்டினால் குறை வில்லை.

திருமறைக்காடு தன்னில் கறை நிறத்து எலி தன் மூக்குச் சுட்டிடத் திரியைத் தூண்டிய தாலேயே அரச பதவி பெற்றது, எனில் நெய் தீபம் நின்று காட்டினால் இறைவன் அருள் செய்வதற்கு எல்லை இல்லை.

வழிபாட்டில் சேவார்த்திகள் கற்பூரம் காட்டச்செய்து தரிசனம்செய்யுமிடத்தில் நெய் தீபம் காட்டச் செய்ய வேண்டும். நெய் தீபம் காட்டுதலே ஆகம சம்மதமும் ஆகும். ஆகவே ஆலய வழிபாட்டினர் நெய் தீபம் காட்டி நல்லன எல்லாம் பெறுவாராகுக! நாடு நலம் பெறுக!

''எந்தமது சிந்தைபிரி யாதபெருமான்
என விறைஞ்சி யிமையோர்
வந்துதுதி செய்யவளர் தூபமொடு
தீபமலி வாய்மையதனால்
அந்தியமர் சந்திபல அர்ச்சனைகள்
செய்யவமர் கின்றவழகன்
சந்தமலி குந்தளநன் மாதினொடு
மேவுபதி சண்பைநகரே''

— சம்பந்தர் —

மேடான் மக்களுக்குத் திருவாசகமணி திருநீறு வழங்குதல்

ஆழ்வாரும் சேதனனும்

புரிசை. நடாதூர். ஸ்ரீ கிருஷ்ணமாசாரிய சுவாமிகள்,

ஸ்ரீ அகோபிலமடம் திருவள்ளூர்.

பகவானிடத்தில் மிக்க பக்தியுடையவர்கள் ஆழ்வார்களானார்கள். அவர்களுக்குப் பகவான் மயர்வற மதிநலம் அருளினன். ஆழ்வார்களுடைய அருளிச் செயல்களைக் கோயில்களிலும், ஸ்ரீவைஷ்ணவர்களின் திருமாளிகைகள் தோறும், தினமும் அநுசந்திக்க வேண்டும் என்று ஆசார்யர்கள் ஆசாஸனம் பண்ணினார்கள். ஆசார்யர்களின் நியமனத்தை இன்றளவும் எல்லா ஸ்ரீ வைஷ்ணவர்களும் அநுஷ்டித்து வருகிறார்கள்.

தமிழ் வேதமான ஆழ்வார்களின் அருளிச் செயல்களை அறியாதவன் ஸ்ரீ வைஷ்ணவன் ஆகான். ஸ்ரீவைஷ்ணவன் வடதேசத்தில் இருந்தாலும், ஆந்திர தேசத்தில் இருந்தாலும் கருநாடகதேசத்தில் இருந்தாலும், அந்தந்தத் தேசத்துலிபியில் தமிழ்ப் பாசுரங்களை அச்சிட்டு அநுஸந்தானம் பண்ணிவருவான். இதை இன்றளவும் காணலாம். ஸ்ரீ வைஷ்ணவப் பெரியோர்கள் தமிழ்வேதத்தை மிக்க ஆதரத்துடன் வளர்த்து வந்துள்ளார்கள். ஸ்ரீவைஷ்ணவர் ஒருவர் பெயரைக் குறிப்பிட்டு எழுதும் போது, ஸ்ரீமதுபயவே என்று முதலில் எழுதுவார்கள். இது உபயவேதாந்தத்தையும் அறிந்தவர் என்று குறிப்பிடுவதாகும். ஆகையால் தமிழ் வேதத்தை அறிந்தவன்தான் ஸ்ரீவைஷ்ணவன் எனப்படுவான்.

ஆழ்வார்கள் பதின்மரில் தலையானவர் நம்மாழ்வார். அவர் திருவிருத்தம், திருவாசிரியம், பெரியதிருவந்தாதி. திருவாய்மொழி என நான்கு பிரபந்தங்கள் அருளிச் செய்துள்ளார். நான்கும் நான்கு வேதங்களின் சாரங்களைக் கூறுவதாகும். அவற்றுள் மிக்க சிறப்புடையது திருவாய்மொழி. விஷ்ணு ஆலயங்களில் எம்பெருமானின் வீதிப் புறப்பாட்டின் போது வேதத்தை எம்பெருமானுக்குப் பின்னும், ஆழ்வார்களின் அருளிச் செயல்களை எம்பெருமானுக்கு முன்னும், கோஷ்டியாக ஓதிக்கொண்டு செல்வார்கள். ஆனால் திருவாய்மொழியை மட்டும் கோயில்களில் உட்கார்ந்து கொண்டுதான் சொல்லுவது வழக்கம். அது தனிச் சிறப்புடையது. வேதாந்தம் (காலக்ஷேபம்) படிப்பவர்கள், பகவத் விஷயம் என்று சொல்லப்படும் திருவாய் மொழியை (காலக்ஷேபம் பண்ணாமல்) படிக்காமல் இருக்கமாட்டார்கள்.

நம்மாழ்வார் தாம் பகவானை அநுபவிக்கிறார். பிறருக்கு உபதேசிக்கிறார். தாய் பேசுவது போலும், தோழி பேசுவது போலும் பேசிப் பாசுரமிடுகிறார். பிறருக்கு உபதேசம் செய்யும் போது அர்ச்சாவதாரத்தின் ஸௌலப்யத்தை ஆழ்வார் அருளிச் செய்துள்ளதையும், அதற்கு ஆசார்யர்கள் வியாக்கியானம் இட்டுள்ள அழகையும் இங்கு அநுபவிப்போம்.

ஆழ்வார் ''புகழுநல் ஒருவன்'' (திரு. 3-4) என்னும் பதிகத்திலே, பகவானுடைய ஆச்ரித வாத்ஸல்யாதி கல்யாண குணங்களை அநுபவித்தார். அத்தால் உண்டான ப்ரீதியாலே

ஸந்மிஷ்டரானார். அடுத்த பதிகமான ''மொய்ம்மாம் பூம்பொழிலில்'' பகவதநுபவம் இல்லாதாரை ''தம்மாற் கருமம் என் சொல் லீர் தண்கடல் வட்டத்துள்ளீரே'' என்றும், ''மண்கொள் உலகிற் பிறப்பார் வல்வினை மோத மலைந்தே'' என்றும், 'அலைகொள் நரகத்த முந்திக்கிடந்துழைக்கின்ற வம்பரே'' என்றும், ''தம்பிறப்பாற் பயனென்னே சாது சனங்களிடையே'' என்றும். ''ஓதியுணர்ந்தவர் முன்னா எவன் செவிப்பார் மனிசரே'' என்றும் நிந்தித்தார். அடுத்த ''செய்யதாமரைப்'' பதி கத்திலே, பகவத் அநுபவமில்லாதார்க்குக் கீதோபதேசம் செய்ய விழைகிறார். இதைக் கண்டு ஒரு சேதனன் கேட்கிறான்.

சேதனன் :- ஆழ்வாரே ! நீவிர் மொய்ம் மாம் பூம்பொழிலில் எங்களைப் பலவாறு திட்டித் தீர்த்தீர். இப்பொழுது 'பாவநாசனைப் பங் கயத்தடங் கண்ணனைப் பரவுமினோ' என்று எதற்கு கீதோபதேசம் செய்யப் புறப்பட்டீர் ?

ஆழ்வார் :- ஸர்வேச்வரன் திருவடிகளில் கைங்கர்யம் பண்ணவேண்டுமென்று ஆசை யுடையவர்களுக்கு அதைக் கொடுப்பவன் ஸர்வேச்வரன். அந்தக் கைங்கர்யம் தானும் அவனிலும் போக்யமாக இருக்கும். அத்தை இழந்த சிலரை நிந்திக்க வேண்டும்படி இருந் தது. அவர்கள் அறிவுக்கேடாலே பண்டேவழி தப்பித்திருக்கின்றனர். அதனால் அநர்த்தப் படா நின்றனர். அவர்களை நாம் கைவிட வொண்ணாது என்று பார்த்துக் கீதோபதேசம் செய்கிறோம். தடுக்கி விழுந்தவரைத் தடி கொண்டு அடிப்பாரும் உண்டோ? கேளும் ஐயா சேதனரே! அசோகவனத்தில் சீதாப் பிராட்டியைத் தாய் என்றும் பாராதே தகாத வார்த்தைகளைச் சொன்னான் இராவணன். அவனைப் பார்த்துப் பேசாமல் புல்லைக் கிள்ளி நடுவில் போட்டு ''நீசனே! உனக்கு நல்லுப தேசம் செய்வார் இல்லையா? இருக்கும் ஸாதுக்களை நீ கிட்டுவதில்லையா? உன் புத்தி விபரீதத்தில் செல்லுகிறதே'' என்று நிந்தித் தாள் பிராட்டி. பிறகு, 'இராவணன் நல்வழி செல்லாமல் அனர்த்தப்பட்டுப் போகிறானே. அவனும் நல்லவனாகி நற்கதியை அடைந்திட உபதேசிப்போம்' என்று எண்ணித் தயை யாலே சில உபதேசங்களைச் செய் திடுகிறாள். ''இராவணா! நீ வழியடி பார்க்கும் தரையிலே கால்கள் பாவ நின்று உனக்கோர் இருப்பிடம் வேண்டி இருந்த தாகில் இராமனுடன் ஸ்நேஹம் பண்ணிக் கொள்வது யுக்தமாகும். உன்னுடைய பிள்ளை கள் பேரன்கள் பந்துக்கள் மித்திரர்கள் மந்திரி கள் பிரதானிகள் யாவரும் மாண்டு, கடைசி யில் நீ மாள்வதாகிற கோரபதத்தை நீ இச்சிக்கமாட்டாய் என்று எண்ணுகிறேன். 'நான் பண்ணின அபராதத்திற்கு என்னை அவர் கைக் கொள்வரோ ? என்று நினையாதே. அவர் புருஷ சிரேஷ்டர். நீ மித்ர பாவனை பண்ணினாலும் உன்னைக் கை விடமாட்டார்' என்று உபதேசித்ததைக் கண்டும், உங்களை முதலில் திரஸ்கரித்தாலும் கீதோபதேசம் பண்ணாமல் இருக்கப்போமோ?

சேதனன் :— ஸ்வாமி! கருமமும் கரும பலங்களும் நியந்தாவும் ஸர்வஜகத்காரண னும், நிரதிசயகாந்தியுடையவனும், தாம ரைக் கண்ணனும், அனந்த கருட விஷ்வக் ஸேநாதி நித்யஸூரிகள் வணங்குபவனும், எம் பிரான் என்று 'கருமமும் கருமபயனும்' என்ற பாசுரத்தில் பாடியுள்ளீர். அவ்வெம்பிரானை நாஸ்திகர் எப்படி கிட்ட முடியும்? அவன் எங்கே? நாங்கள் எங்கே? அவன் விசைக்கொம்பு. அவனைக் கிட்டப்போகாது.

ஆழ்வார் :— நீங்கள் 'அவன் கிட்ட அரி யவன்' என்று இருந்து விடாதீர்கள். அவன் ஆச்ரிதஸுலபன். பத்துடையடியவர்க்கு எளி யவன். பிறர்களுக்கன்றோ அரிய வித்தகன்?

சேதனன் :— ஸ்வாமி! அவன் ஆச்ரிதஸு லபனாக இருக்கலாம். அவன் இருக்கும் தேசம் ஸ்ரீவைகுண்டமன்றோ? ஒருவரும் கிட்டவொண் ணாத உயர்ந்ததான ஸ்ரீவைகுண்டலோகத்தில் மகாலக்ஷ்மியுடன் எழுந்தருளியிருக்கிறான். அங்கே பல்லாண்டு பாடும் பத்தர்களும், குடை போடுதல் சாமரம் வீசுதல் முதலிய பணி விடைசெய்யும் பாகவதர்களும்கூட இருந்து வருகிறார்கள், என்றல்லவோ பிரமாணங்கள் கூறுகின்றன? அந்த லோகத்திற்கு நாங்கள் எப்படிச் செல்ல முடியும்? தண்ணீர்த் தாக

முடையவன் 'தண்ணீர் வேண்டும்' என்று கேட்டால், 'அண்டத்திற்கு வெளியில் வெள்ளம் கரை புரண்டு ஓடுகிறது போய்க் குடியும்' என்று சொன்னால், எவ்விதம் தாகத்தைத் தணித்துக் கொள்ள முடியாதோ, அவ்விதம் உமது உபதேசமும் பயனற்றதாகும். அண்டத்திற்குள் திருப்பாற்கடல் இருந்தாலும், அதுவும் கிட்டமுடியாததான தேசமே. அதனாலும் பிரயோஜனமில்லை. அதுபோல் வியூக ரூபத்தாலும் பயனையடைந்திட முடியாது. 'நாம் பரமரூபத்தைப் பற்றியோ, வியூக ரூபத்தைப் பற்றியோ பேசவில்லை. ''நருஸிம்ஹ ராம க்ருஷ்ணாதிவிபவ மூர்த்திகளின் ஸௌலப்யத்தைப் பற்றியன்றோ உங்களுக்கு இப்பொழுது உபதேசித்தோம். ''தென்னிலங்கை எரியெழச் செற்றவில்லியை ... பரவுமினோ'' ''குரவை கோத்தகுழகனை மணிவண்ணனைக் குடக் கூத்தனை ... ஏத்துதல் மனம் வைம்மினோ'' ''தோற்றக் கேடவையில்லவன் உடையான் அவன் ஒரு மூர்த்தியாய் சீற்றத்தோடருள் பெற்று அவனடிக் கீழ்ப்புக்கு நின்ற செங்கண்மால்...'' என்று.

சேதனன் :- ஆம், எம்பெருமான் திருவவதாரம் பண்ணி ஸர்வ ஸுலபனாக வர்த்தித்து அருளுகிற காலத்தில் உதவப் பெற்றிலோம். காட்டாற்றில் ஜலம் போல் அப்பொழுது தோன்றி அப்பொழுதே மறைந்துவிட்டதே, எங்கள் விடாய் தீர வழி ஏது?

ஆழ்வார் :- அஞ்சிநீர் உலகத்துள்ளீர்கள். அவனிவனென்று கூழேன்மின், நெஞ்சினால் நினைப்பான் யவன் அவனாகும் நீள் கடல் வண்ணனே! பிரம்ம இந்திராதிகளால் வணங்கப் பெற்றவனாக, ஸர்வஜகத்காரணனாக, அயர்வறும் அமரர்களாகிய நித்யஸூரிகளுக்கு அதிபதியாய், எல்லா அவஸ்தைகளிலும் நம்மை ரக்ஷிக்குமவனாகப் பிதாவாய், மாதாவாய், மற்ற எல்லாவித பந்துவாய் இருக்கும் எம்பெருமானை எழுந்தருளப் பண்ணி ஆச்ரயிங்கோள். நாம் அவனுக்கு ஒரு ரூபத்தை எண்ணினால் (ஸங்கல்பித்தால்) அது அவனுக்கு ரூபம் ஆகுமோ? என்று அஞ்ச வேண்டாம். நீங்கள் யாதொன்றை அவனுக்கு ரூபமாக நினைத்தீர்களோ, அத்தையே அவன் திவ்ய ரூபமாகக் கொண்டு அருள்வான்.

அதாவது :-நாம் தங்கம், வெள்ளி, செம்பு முதலிய உலோகங்களில் நமக்குப் பிடித்தமான இராமன், கிருஷ்ணன், பரவாஸுதேவன், ஸ்ரீநிவாஸன் முதலிய விக்கிரகங்களில் ஏதாவது ஒன்றைப் பண்ணி அதில் ஸாந்நித்யம் பண்ண வேண்டுமென்று வேதமந்திரங்களைக் கொண்டு பிரார்த்தித்தால் அந்த விக்கிரகத்தில், ஸ்ரீவைகுண்டத்தில் பகவான் எவ்வளவு சக்தியுடன் இருக்கிறானோ அவ்வளவு சக்தியுடன் இங்கும் எழுந்தருளிவிடுகிறான். பாலில் ஜலம் கலந்தால் பால்வேறு ஜலம் வேறு என்று எப்படித் தெரியாதோ, அதேபோல் உயர்ந்ததான பரஸ்வரூபம் இந்த விக்கிரகத்தில் கலந்துவிடுகிறது. அதன்பிறகு நாம் ஆச்ரயித்தால், நாம் வேண்டுவன எல்லாம் கொடுக்கிறான். கும்பாபிஷேகம் ஆனவுடன் சக்தி உண்டாகிவிடுகிறது. நமது குருவை நம்மைப் போன்று அவரும் ஒரு மனிதன்தான் என்று நினைத்தாலும், கோயில்களிலுள்ள விக்கிரகங்களில் தங்கம், வெள்ளி, செப்புதானே என்ற லோகபுத்தி எண்ணம் கொண்டாலும், நரகத்தை அடைந்திடுவான் என்று சாத்திரம் கூறுகிறது.

அர்ச்சையில் பகவான் மிக்க ஸுலபராக-ஸௌலப்ய குணபரிபூர்ணராக எழுந்தருளியிருக்கிறார். நாம் அபிஷேகம் செய்யும்போது அபிஷேகம் பண்ணிக்கொள்கிறார். நாம் நிவேதனம் செய்யும் போது புஜிக்கிறார். இவற்றை நமது சௌகரியப்பட்ட வேளையில் நாம் செய்து வருவதைக் கண்கூடாகக் காண்கிறோம், அவர் நம் இஷ்டப்படி நடந்து கொள்பவராக இருந்து, நாம் வேண்டிய பலன்களை எல்லாம் நமக்குத் தந்து நமக்கு அருள் புரிகிறார், இவ்விதம் ஸௌலப்ய குணபூர்த்தியுடன் அர்ச்சையில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானை ஆச்ரயியுங்கோள் என்று ஆழ்வார் நமக்கு ஒரு பாட்டாலே உபதேசிக்கிறார். அந்தப் பாசுரம்,

தஞ்சமாகிய தந்தை தாயொடு
தானுமாய் அவை அல்லனாய்
எஞ்சலில்அமரர் குலமுதல் மூவர்தம்
உள்ளும் ஆதியை
அஞ்சி நீருலகத்துள்ளீர்கள்
அவனிவனென்று கூழேன்மின்
நெஞ்சினால் நினைப்பான் யவன்
அவனாகும் நீள் கடல் வண்ணனே

திருவாய்மொழி. 36—7

எழுத்தாளரும் கடவுளரும்

ந. ரா. முருகவேள், M. A., M. O. L.,

முன்னுரை :

''ஈச்சுவரன் தானும் ஆசார்யத்துவத்தை ஆசைப்பட்டிருக்கும்'' (430) என்று, ஸ்ரீவசந பூஷணம் என்னும் சிறந்த வைணவப் பெரு நூலில் பிள்ளைலோகாச்சாரியார் அருளிச்செய்வர். அதனால் ஆசிரியத் தன்மையின் மேன்மை புலப்படுத்தப்பட்டது. ஆசிரியத்தன்மையின் மாட்சிமையைக கருதியே, திருமால் கிருஷ்ணாவதாரத்தில் கீதாச்சாரியனாகத் திகழ்ந்தார் மற்றும் ''நரநாரணனாய் உலகத்து அற நூல் சிங்காமை விரித்தவன்'' என்கிறபடி ''தானே சிஷ்யனுமாய் ஆசார்யனுமாய் நின்று' அர்த்த பஞ்சக ஞானத்தைத் தெளிவுற அளிக்கும் திருமந்திரத்தை வெளியிட்டருளினார். சிவ பெருமான் கல்லால மரநிழலின்கண் தட்சிணா மூர்த்தியாக அமர்ந்து, சனகர் சனந்தனர் சனாதனர் சனற்குமாரர் என்னும் நால்வருக்கும் ஞானோபதேசம் புரிந்து ஆசார்யனாய் விளங்கினார். முருகப்பெருமான் சுவாமிநாதனாய்த் தன் தந்தையாகிய சிவபெருமானுக்கே பிரணவப் பொருளை உபதேசம் செய்து ஆசிரியத் தன்மைபெற்றுப் பொலிந்தார்.

கடவுளரில் எழுத்தாளர்:

இவ்வடிப்படையில் கருதினால், ஆசிரியராதலில் மட்டுமேயன்றி, எழுத்தாளராதலிலும், கடவுளர் விருப்பம் கொண்டுள்ளனர் எனத் தெரிகின்றது. விநாயகப் பெருமான், தம் ஒற்றைக் கொம்பை எழுத்தாணியாகவும், மேருமலையை ஏடாகவும் கொண்டு, வியாச முனிவர் சொல்லிக்கொண்டுவர, மகாபாரதத்தை எழுதியருளினார். ''நீடாழி உலகத்து மறை நாலொடு ஐந்து என்று நிலைநிற்கவே'' எனவரும் வில்லிபுத்தூரார் பாரதச் செய்யுள் இச்செய்தியை உணர்த்தும். மற்றும் பாகவத புராணத்தையும்கூட, வியாசரின் விருப்பத்திற்கிணங்கி, விநாயகரே எழுதி உதவினார் என்றும் வரலாறு உண்டு. முருகப் பெருமான் வள்ளியம்மையார்க்குத் தாம் வழிவழி அடிமை என்று அடிமை ஓலைச்சாஸனம் ஒன்றை எழுதி அளித்ததாக அருணகிரிநாதர் தமது திருப்புகழில் பாடுகின்றார். பிரமதேவர் எல்லா உயிர்களையும் படைத்து, அவ்வவற்றின் தலையில் ஏதோ சிலவற்றை விதித்து எழுதிவிடுவதாக, நமது புராணங்கள் நவில்கின்றன. ''இட்டமுடன் என்றலையில் இன்ன படியென்று எழுதிவிட்ட அயனும் செத்துவிட்டானோ'' என்பது தனிப் பாடல். ''செந்தூரன் கால்பட்டு அழிந்தது இங்கு என்தலை மேல் அயன் கையெழுத்தே'' என்பது கந்தரலங்காரம்.

எழுத்தாளர்-சிவபெருமான் :

இவர்கள் எல்லோரையும்விட, எழுத்தாளராதலிற் சிவபெருமான் பெருவிருப்பினன் போலும். மணிவாசகர் அருளிய திருவாசகம் திருக்கோவையார் என்னும் இரண்டையும் சிவபிரான் எழுதிவைத்துப் பொதிந்துகொண்டு போற்றி மகிழ்ந்தார். ''கொங்குதேர் வாழ்க்கை'' ''மதிமலி புரிசை மாடக் கூடல்'' ''அடியார்க்கெளியன் சிற்றம்பலவன்'' என்னும் கவிதைகளை, முறையே தருமி-சேரமான் பெருமாள் — உமாபதிசிவம் என்பவர்களுக்கு எழுதிக்கொடுத்தருளினார். அம்மட்டோ!

''தொழுது தூ மலர் தூவித் துதித்து நின்று அழுது காமுற்று அரற்றுகின்றாரையும், பொழுது போக்கிப் புறக்கணிப்பாரையும் எழுதும் கீழ்க்கணக்கு இன்னம்பர் ஈசனே'' எனத் திருநாவுக்கரசரும், ''நின் தமர் பெயர் எழுதிய வரிநெடும் புத்தகத்து, என்னையும் எழுத வேண்டுவன்'' எனப் பட்டினத்தாரும் பாடியிருத்தல் காணலாம். திருவாலவாய்ச் சோமசுந்தரப் பெருமான், பாண்டிய வேந் தனின் வேண்டுகோட்கிணங்கி ''இறையனார் களவியல்'' என்னும் நூலை இயற்றி அளித்தார். திருவொற்றியூரிலுள்ள இறைவனுக்கு ''எழுத் தறியும் பெருமான்'' என்பது ஒரு திருப் பெயர். இவைகளெல்லாம் சிவபிரான் ஓர் எழுத்தாளராகத் திகழ்தலை இனிது உணர்த்தும்.

எழுதுதல் எளிதன்று :

இஞ்ஞான்றைய உலகியல் வாழ்விலும், சமுதாய அமைப்பிலும், எழுத்தாளர்கள் ஒரு தனிப்பெரும் சிறப்பிடம் பெற்று விளங்கு கின்றனர். சமுதாயத்திற்குப் பலவகைகளில் தொண்டு புரிபவர்களுள், எழுத்தாளர்களும் தலையாயவராகத் திகழ்கின்றனர். ஆயினும் அவர்களின் பணி, ஒரு சிலர் பிழைபட நினைப் பதுபோல எளிதானதொன்றன்று. கதையோ, கவிதையோ கட்டுரையோ எழுதுவதென்பது எளிதான ஒரு செயலன்று. மிகவும் கடினமான இடர்ப்பாடான செயல்களுள் ஒன்று.

ஆசிரியர் திருவள்ளுவர் சொல் வன்மையின் அருமைபற்றித் தமது திருக்குறளில் விளக்கி யுள்ளார். எழுத்துவன்மையின் இன்றியமை யினையும்உள்ளடக்கியே உபலக்கணமுறையால், அவர் அவ்வதிகாரத்தை அமைத்தனராதல் வேண்டும். ''ஆர்த்த சபை நூற்றொருவர், ஆயிரத்தில் ஒன்றும் புலவர், வார்த்தை பதினாயிரத்தில் ஒருவர்'' என்பது ஔவையார் பாடல். ''சொல்லுதல் வல்லான் நூறாயிர வருள் ஒருவன்'' (வக்தா சத ஸகஸ்ரேஷு) என்பது அறிஞர் கூற்று.

பேசத் தெரிந்தவர் எல்லோரும் சொற் பொழிவு நிகழ்த்த வல்லவர் ஆவதில்லை. அங்ங னமே எழுதக்கற்றோர் அனைவருமே எழுத் தாளராக இயலுவதில்லை. எழுதுதல் என்பது ஒரு தனிப்பெரும் கலை. மிகவும் முயன்று உழைத்துப் பாடுபட்டாலன்றி, அத்துறையில் திறமைபெறுவது அரிது. 'யானும் முயன்றால் ஒரு நூல் எழுதிவிடுவேன்' எனச் சிலர் கூறுவ துண்டு. ''பல நூறாயிரம் மக்களுள், ஒருவரே பிறருக்குச் சொல்லுதற்குரிய செய்தியை நினைத்துணர வல்லவராயிருப்பர். அத்தகைய நூற்றுவருள் ஒருவரே அதனை எழுதும் முறையை அறிந்திருப்பர். அவருள்ளும் பதின் மரில் ஒருவரே, அதனை நன்றாக எழுதக் கூடியவராக இருப்பர். அவர்களிலும் ஒரே ஒருவர் மட்டுமே, அதனைக் கவின்மிக்க கலைத் திறப் பணியாகச்செய்தல் இயலும். இத்த தகைய திறம்பெற்றோர் உண்மையில் அரிய ராய் ஒரு சிலராகவே இருப்பர்'' *(1)*

பிற பருப்பொருட்களை நாம் நம் முயற்சி யினால் கருவிகள் கொண்டு செய்து உருவாக்கு தல் போல, நாம் நம் முயற்சியினால் கருத் துக்களை உருவாக்குதல் இயலாது. *(2)* அவைகள் தாமாகவே நம் உள்ளத்தில் உதித்து உருப்பெறுதல் வேண்டும். மேலைநாட்டு அறிஞர் களிற் பலர், தத்தம் நூல்களில், கட்டுரையோ கவிதையோ புதினமோ எழுதத் தலைப்பட்டு, அடைந்த பல இன்னல்களையும் அனுபவங்களை யும், தாம் அடைந்தவாறே பிற்கால மக்களுக் குப் பயன்படும் பொருட்டுக் கிளந்து கூறி மொழிந்திருக்கின்றனர்.

---

(1) 'Who has not met the bore who says: 'If only I could get down to it, I would write a book'?... But for every million people who have a story to tell, only a hundred know how to set it down on paper, only ten know how to set it down well, only one makes it a work of art—and that is probably putting the percentage too high.''

—C. T. Winchester.

(2) "A man cannot say: "I will compose poetry. Even the greatest poet cannot say it.''

—W. B. Yeast

வாசகர்கள், தாம் அரைமணி நேரத்திலோ அல்லது ஐந்து மணித்துளிகளிலோ படித்து முடித்துவிடும் ஒரு பகுதி, ஆசிரியரின் இருதயக் குருதியினின்று உருவாகி அரிதின் வெளிவந்த திறனை உணர்வதில்லை, வாசகர்களுக்கு உண்மையெனப்பட்டு உள்ளத்தைத் தொடும் ஓர் உணர்ச்சியை வெளிப்படுத்த, ஆசிரியர் அவ்வுணர்ச்சி வயப்பட்டுப் பல இரவுகளில் உருகி அழுது அதன் மயமாக ஒன்றியுறைந்திருப்பர் (3).

(1) ஏ. ஜி. கார்டினர் என்னும் புகழோங்கிய ஆங்கில எழுத்தாளர், தாம் எழுதிய ''கடற்கரையிற் கூழாங்கற்கள்'' என்னும் நூலின் கட்டுரை ஒன்றில், ''எழுதுவது என்பது மட்டுமே கடினம் அன்று; அதற்குரிய பொருளையோ—தலைப்பையோ தேர்ந்தெடுப்பதும்கூட, மிகவுங் கடினமான ஒரு செயல்! ஏதேனும் எழுதவிரும்பி முயலும்போதெல்லாம் அதற்குரிய பொருளோ கருத்தோ ஒன்றும் தோன்றாமையால், கைந்நகங்களைத் திருத்துவதும், எழுதுகோல்களைக் கூர்மையாக்குவதுமாகவே பெரும்பாலும் காலங்கழிகின்றது. இவற்றால் மேலும் மேலும் திகைப்பு உண்டாகின்றதேயன்றிக் கருத்தொன்றும் உதித்திலது'' எனக் குறிப்பிடுகின்றார். (4)

(2) ''எழுதுவது ஒருபுறம் இருக்கட்டும். எழுதும் பொருளையும் அதற்குரிய தலைப்பையும் தேர்ந்தெடுப்பது தானும், ஒரு பெருங் கடினமான செயலாகும். போர்க்களத்தில் தனது படைகள் அணிவகுத்து நிற்பதற்குரிய நிலையையும், சரியான முனையையும் ஆராய்ந்து தேர்தெடுப்பது, ஒரு படைத் தலைவனுக்கு எங்ஙனம் எளியதொரு செயலன்றோ, அங்ஙனமேஎழுதும் பொருளையும் அதன் தலைப்பையும் தேர்ந்தெடுப்பதும்கூட, மிகவும் அரிய பெரிய கடினமான செயலேயாகும்.'' (5) என்று பொவீ என்னும் ஆசிரியர் எழுதியிருக்கின்றார்.

(3) கஸ்டாவ் பிளாபர்ட் என்னும் பிரசித்திபெற்ற பிரெஞ்சு நூலாசிரியர், ''ஏதேனும் ஒரு சிறுசொல் தடைப்பட்டுவிட்டால், அதனைக் கண்டுபிடித்தற்காகக் கைகளில் தலையை வைத்துக்கொண்டு, வறண்டுபோன நற்பேறற்ற மூளையினின்று அச்சொல்லை வலிந்து கசக்கிப் பிசைந்து முயன்று வருவித்ததற்பொருட்டு, ஒருநாள் முழுவதும் உட்கார்ந்திருக்க நேரும் துன்பம் எத்தகையதென்று நீ அறியமாட்டாய்! கலைத்துறையிற் கடினமான உழைப்பு இன்றியமையாததாக இருக்கின்றது. ஆ! உண்மையிலேயே எழுதுதலால் நேரும் வேதனைகளை யான் நன்குணர்கின்றேன்'' எனத் தம் நெருங்கிய நண்பர் ஆகிய ஜார்ஜ்சேண்ட் என்பவருக்குத் தெரிவிக்கின்றார் (6).

---

(3) "Readers do not know that the passage which they read in half an-hour, or in five minutes, has been evolved out of the heart's blood of the author. The emotion which strikes them as 'so true' he has lived through with nights of bitter tears.''

—Somerset Maugham.

(4) "Now if you are accustomed to writing articles for a living, you will know that sometimes the difficulty is not writing the article, but choosing a subject... I had pared my nails several times with absent minded industry, and sharpened every pencil I had on me with elaborate care. But the more I pared my nails and the more I sharpened my pencils the more perplexed I grew as to the theme for an article..."

—A. G. Gardiner, On Writing An Article in 'Pebbles on the Shore.'

(5) ''The selection of a subject and a caption is to the author what choice of position is to the general,—once skilfully determined, the battle is already half won."

—Bovee.

(6) ''You don't know what it is to stay a whole day with your head in your hands trying to squeeze your unfortunate brain so as to find a word. Hard labour at art is necessary. Ah! I certainly know the agonies of writing.''

—Gustave Flaubert to Louis Bouhilet

(4) இவரே மற்ருெரு சமயம், பிறிதொரு நண்பரும் பெருங் கவிஞரும் ஆகிய லூயிபூயிலெட் என்பவருக்கு எழுதிய கடிதம் ஒன்றில், ''நான் தன்னந்தனியாக ஒரு துறவி போலவும், இறைவனைப்போல அமைதியாகவும் நல்லதொரு வார காலத்தைக் கழித்தேன். இலக்கிய உன்மத்தம் என்னைப் பற்றிக்கொண்டு விட்டமையால், என்னையானே இழந்து கை துறந்து போனேன். நடுப்பகலில் அமர்ந்தேன். காலை நான்கு மணிக்குப் படுக்கச் சென்றேன். டாக்னேவுடன் உணவு உண்டேன். 15 முறை புகைபிடித்தேன். இதுவரையில் 8 பக்கங்கள் மட்டுமே எழுதியிருக்கிறேன்'' எனக் கூறுகின்ருர். (7)

(5) ஏ. இ. அவுஸ்மன் என்னும் ஆங்கிலக் கவிஞர் ஒருவர், பின்வருமாறு தம்முடைய அனுபவம் ஒன்றை எழுதுகின்ருர் : யான் ஒரு சமயம் ஒரு கவிதை எழுத நினைத்துத் தொடங்கினேன். முதல் இரண்டு செய்யுட்களை (Stanzas) ஒருவாறு எழுதி முடித்தேன். மூன்ருவது செய்யுள் ஒன்றை எழுத முயன்றேன். அஃது எளிதில் வருவதாகஇல்லை, சிறிது ஓய்வு எடுத்துக்கொண்டு, தேநீர் அருந்திய பின்னர்ச் சிறிது இடர்ப்பட்டு அம்மூன்ரும் செய்யுளை எழுதி முடித்தேன். அக் கவிதை முடிவதற்கு நான்காவதாக ஒரு செய்யுளும் தேவைப்பட்டது. அதனை எழுத எவ்வளவோ முயன்றுபார்த்தேன். அஃது அறவே வர மறுத்துவிட்டது. எங்ஙன மேனும் எழுதியே தீரவேண்டியிருந்தமையால், அது மிகவும் தொல்லையான வேலையாகவேஇருந்தது. அதனை யான் 13 முறைகள் திருத்தித் திருத்தித் திரும்பத் திரும்ப எழுதிப்பார்த்தேன். அப்போதும் அது செவ்விதாக அமையவே இல்லை. பின்னர்ப்பன்னிரண்டு மாதங்கள் வரை காத்திருந்து, மிகவும் முயன்றே அதனை முடிக்கவேண்டி நேர்ந்தது. அதற்குப் பின்னர் தான் அஃது ஓரளவு திருத்தமாக அமைவதாயிற்று.'' (8).

(6) ''ஒருவரி இயற்கைப் புனைவுரை எழுத அவர் நூறுமைல் தொலைவு பயணம் புரிந்தார். ஒரு சிறு சொற்ருெடர் எழுதக் குறைந்தது இருபது நூல்களையாவது ஆராய்ந்தார்'' என்று மெக்காலே என்னும் பேரறிஞரைக் குறித்து, தாக்கரே என்னும் ஆசிரியர் குறிப்பிடுகின்ருர்(9).

---

(7) ''I have just spent a good week, alone like a hermit, as calm as a god. I got up at midday, abandoned msyself to a frenzy of literature. I went to bed at four in the morning. I dined with Dakno. I smoked fifteen pipes in a day. I have written only eight pages.''

—Gustave Flaubert to
Louis Bouhilet.

(8) ''...A third stanza came with a little coaxing after tea. One more was needed, but it did not come. I had to turn to and compose it myself, and that was a laborious business. I wrote it thirteen times, and it was more than twelve months before I got it right.

—A. E. Housman.

(9) ''To write a line of description, he travelled hundred miles; to write a single sentence he consulted at least twenty books''

—W. M. Thackeray, on Lord Macaulay
in 'Nil Nisi Bonum'

(6) இவ்வாறே மிகவும் புகழ்பெற்றவரும் உலகப் பெருங் கவிஞர்களுள் ஒருவராக மதிக்கப் பெறுபவரும் ஆகிய வில்லியம் வோர்ட்ஸ்வொர்த் என்பவர் (1770—1850), 'குயிலுக்கு' (To the Cukoo) என்னும் தலைப்பில் தாம் எழுத முற்பட்ட கவிதையில், அக்குயிலின் குரல்பற்றிக் கொடுக்கத் தக்க பொருத்தமான அடைமொழி (Epithet) ஒன்றனைக் காண மாட்டாமல், எத்தனையோ சொற்களை மாற்றி மாற்றித் திருத்தி அமைத்துப் பார்த்தும் அவைகளுள் ஒன்றேனும் செவ்வியதாக அமையாமையால், மன நிறைவு கொள்ளாத வராய்ப் பல ஆண்டுகள் வருந்தி முயன்று வந்தனர். கடைசியாக 43 ஆண்டுகள் கழித்துத் திடீரென்று ஒருநாள் 'அலைந்து திரியுங் குரல்' (Wandering Voice) என்னும் அடைமொழித் தொடர், அவர் உள்ளத்தில் உதித்தது. அதனையே அக்கவிதையில் அவர் பின்னர்த் திருத்தி அமைத்துப் பதிப்பித்தார் என அவர் தம் சகோதரியார் ஆகிய டொரத்திவோர்ட்ஸ் வொர்த் அவர்கள் குறிப்பிட்டுள்ளார். (9)

(7) ராபர்ட்லூயிஸ்டீவென்ஸன் என்னும் புகழ்மிக்க ஆசிரியர் ஒருமுறை இரண்டு மணி நேரம் முயன்று, ஒரு சிறு சொற்றொடர் மட்டுமே எழுதினர். மறுநாள் அதனைப் படித்துப் பார்த்து, குப்பைக்கூடையில் கிழித் தெறிந்துவிட்டார்.

எழுதுதல் என்பது கடினம் மிக்க ஒரு பெருஞ்செயல். தாமஸ் கிரே என்பவர், 'சிற்றூர்க் கோயிலி முன்றிலில் எழுதிய இரங்கற் கவிதை' என்பதனை எழுதிமுடிக்க எட்டு ஆண்டுகள் ஆயின. (கி. பி. 1732-1750). ஆல்ஃபிரெட் டென்னிசன் என்னும் கவிஞர், தமது நண்பராகிய ஆர்தர்ஹாலம் என்பவரின் மறைவு குறித்து "நினைவின் பொருட்டு" என்னும் கையறு நிலைச் செய்யுளை இயற்றப் பதினேழு ஆண்டுகள் கழிந்தன. (11) இங்ஙனமே 'உயிர் வகைகளின் தோற்றம்' என்னும் நூலை எழுதச் சார்லஸ் டார்வின் என்பவர் பதினேழு ஆண்டுகள் அரிதின் உழைக்க வேண்டியிருந்தது. "மூலதனம்" என்னும் நூலை எழுதக் கார்ல்மார்க்ஸ் பதினெட்டு ஆண்டுகள் செலவிட்டார். நத்தானியேல் ஹாத்தார்ன் என்னும் ஆசிரியருக்குச் செவ் வண்ணக் கடிதம் (Scarlet Letter) என்னும் புதினம் எழுத இருபது ஆண்டுகள் தேவைப் பட்டன. தாம் கேட்ட ஒரு சுவையான நிகழ்ச்சி ஒன்றைப் பற்றிய கதையினை எழுதச் சாமர்செட்மாம் என்பவர்க்கு, நாற்பது ஆண்டுகளுக்குப் பின்னரே முடிந்தது. (12)

ஓவியன் ஒருவன் தனது தூரிகைகொண்டு எங்ஙனம் ஓர் உருவத்தைப் பலகால் அழித் தழித்துத் திரும்பத் திரும்ப வரைந்து வண்ணம் தீட்டுகின்றானோ, அங்ஙனமே எழுத்தாளனும் தனது எழுதுகோல் கொண்டு ஒரு கருத்தை வெளியிடுவதற்குப் பலமுறை திரும்பத் திரும்ப எழுதிப் பார்த்துச் செப்பனிடவேண்டியுள்ளது.

---

(9) "Dorothy Wordsworth records in her Journal' that her brother William had tried to seek an epithet for the Cuckoo, and only after 43 years found himself able to express the sound of the Cuckoo's as the 'Wandering Voice".

—L. L. Lowes, Convention and Revolt in Poetry, P. 6.

(10) Robert Louis Stevenson, it has been said, once spent two hours in writing only one sentence and next day, after reading it, threw it into the waste paper basket. If that was true with a writer like Robert Louis Stevenson, what would it be to an ordinary mortal"

(11) "Seventeen years elapsed between the death of Arthur Hallam and the publication of Tennyson's exquisite elegy, In Memoriam."

—W. J. Dawson, The Makers of Modern English.

(12) "This anecdote gave me the idea for a story which I wrote 40 years later. It is called 'The Colonel's Lady.'"

—Somerset Maugham, A Writer's Note book.

(13) எர்னஸ்ட் ஹெமிங்க்வே என்பவர், தமது நூல் ஒன்றின் இறுதிப் பத்தியைப் பத்தொன்பது முறை மாற்றி மாற்றித் திருத்தி எழுதியதாகக் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறே உச்சிமேற் புலவர் கொள்ளும் நச்சினார்க்கினியர், தாம் இயற்றிய சீவக சிந்தாமணி உரையினை ஆறு முறை திரும்பத் திரும்ப மாற்றி எழுதித் திருத்திச் செப்பம் செய்த பின்னரே மன நிறைவு எய்தினர் என அறிஞர்கள் கூறுவர்.

---

(13) I Can't understand how anyone can write without rewriting everything over and over again. I scarcely ever re-read my published writings, but if by chance I Come across a page, it always strikes me: All this must be re-written; this is how I should have written it.

—Count Leo Tolstoy, Talks with Tolstoy

முடிவுரை :

இதுகாறும் கூறிவந்த வாற்றால், எழுத்தாளர்களின் பணி, மிக அருமையும் கடினமும் வாய்ந்தது என்பதும், ஒருவகையில் தெய்விக இயல்பும் புனிதத் தன்மையும் பொருந்தியது என்பதும், தக்கவர்கள் ஆகிய நல்லவர்கள் அனைவரும் அதனை வியந்து உவந்து போற்றிப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளனர் என்பதும், இதுபற்றியே "கலைமகள் வாழ்க்கை முகத்தது எனினும், மலரவன் வண்டமிழோர்க்கு ஒவ்வான்; மலரவன் செய் வெற்றுடம்பு மாய்வன போல் மாயா; புகழ்கொண்டு மற்றிவர் செய்யும் உடம்பு" என்று நமது குமரகுருபர சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிச் செய்தனர் என்பதும், ஏற்றபெற்றி விளக்கப்பெற்றன.

—ஆசிரியர்



இந்தோனேசியத் தலைநகர் ஜகர்த்தாவின் நகர் ஓரத்தில் உள்ள சிவாலயம் ஒன்றில் உள்ள சிவலிங்கம்.

மேடான் மகாமாரியம்மன் கோவிலில் சொற்பொழிவாற்றிய திருவாசகமணியும் கூட்டத்தினரும்.

செய்திச் சுருக்கம்

பர்மியத் தலைநகரில் தைப்பூச விழா ; பர்மியத் தலைநகர் ரெங்கோனில் மூன்று நாள் தைப்பூசவிழா கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. முதல் வீதியிலுள்ள ஆறறை திருக் கோவிலிலிருந்து, மூன்று மைல் தொலைவிலுள்ள பசுமந்தான் நகரத்தார் மடத்திற்கு 8-2-71 திங்கட்கிழமை காலையில் நன்கு அலங்கரிக்கப்பட்ட ரதத்தில், ஸ்ரீ முருகப்பெருமானை எழுந் தருளச் செய்து நகரின் பிரதான வீதிகளின் வழியாகப் புறப்பட்ட ஊர்வலம் நகரத்தார் மடத்திற்கு வந்து சேர 6 மணி நேரம் பிடித்தது. ரெங்கோன் தேவாரக்குழுவினர், சுந்தர விநாயகர் ஆலய பசனைக் கோஷ்ட்டியினர், சந்திரோதயக் கலா மன்றத்தினர், ஆகியோர் தேவார திருவாசகப் பாடல்களைப் பாடிப் பக்தர்களை மகிழ்வித்தார்கள். பர்மா இந்து தமிழ் மன்றத்தில் தொண்டர்கள் போக்குவரத்துகளைச் சீர் செய்துவந்தார்கள்.

சுவாமி இருப்பிடம் சேர்ந்ததும், பக்தர்களுக்குப் பகல் உணவு அளிக்கப்பட்டது. அன்று மாலையில் ஆசிரியர் சுப. முத்துவேல் தயாரித்த 'வள்ளி' எனும் புராண நாடகம் சிறுவர் சிறுமியர்களைக் கொண்டு மிகவும் சிறந்த முறையில் நடைபெற்றது. இரவில் பர்மியப் புரட்சி சர்க்காரும், இந்தியத் தூதுவராலயத்தினரும் சேர்ந்து பர்மிய இந்தியத்திருக் கோயில்களைப் பற்றிய சினிமாப் படக்காட்சியைக் காண்பித்தார்கள், இங்குத் தற் போது தமிழ் சினிமாப் படம் காண்பிக்கப்படுவதில்லை. ஆகவே பொது மக்கள் இந்தியத் தூதுவ ராலயத்தினர் காட்டிய தஞ்சாவூர், மதுரை, பரத நாட்டியம் போன்ற படங்களைத் தமிழ் வர்ணனையுடன் பார்த்த போது ஆரவாரம் செய்து, தங்களின் மகிழ்ச்சியைத் தெரி வித்தார்கள். படம் பார்த்தவர்கள் பர்மியப் புரட்சி சர்க்காரையும், இந்தியன் எம்பாசியை யும் பாராட்டிச் சென்றார்கள்.

9-2-71 செவ்வாய்க்கிழமை தைப்பூச நாளன்று பசுமந்தான் கோவிலிலுள்ள ஸ்ரீ தண் டாயுதபாணிக்கு விசேட அபிஷேக ஆராதனை வழிபாடுகள் நடைபெற்றன. ஸ்ரீதண்டாயுத பாணிக்குச் சுவர்ண அங்கி சாத்தி இருந்ததையும், மடத்தில் எழுந்தருளியுள்ள உற்சவ மூர்த்தி ஸ்ரீ முருகப்பெருமான் வள்ளி தெய்வயானையுடன் சுவர்ண அங்கிகளால் அலங்கரித் திருந்ததையும், ஆயிரக்கணக்கில் பக்தர்கள்திரண்டு வந்து தரிசித்தார்கள். சாதி மத பேதமின்றித் தைப்பூச விழாக் காண வந்திருந்த ஆயிரக்கணக்கான மக்களுக்கு அன்ன தானம் வழங்கப்பட்டது. அன்னமிடும் தொண்டில் முனீஸ்வரர் ஆலயக் குழுவினர், 57-வது வீதி பொது நலக் குழுவினர், கம்பைக் கலைமகள் மன்றத்தினர்- 48-வது வீதி இளைஞர் குழுவினர், நடராசர் ஆலயப் பொது நலக் குழுவினர், பர்மா இந்து தமிழ் மன்றந்தினர், ஆகியோர் இருநாட்களிலும் ஈடுபட்டிருந்தார்கள். மாலையில் ஆசிரியர் எம். காசிவிசுவநாதன் தயாரித்த வள்ளித் திருமண நாட்டிய நாடகத்தைப் பக்தர்கள் ரசித்தார்கள். நாடகத்தில் பங்கு பெற்றோர் அனைவரும் மாணவிகளாவர் என்பது குறிப்பிடத்தக்கது.

10-2-71 புதன்கிழமை காலையில் பசுமந்தானிலிருந்து சுவாமி புறப்பாடு ஆரம்பமாகியது. வழிநெடுகப் பக்தர்கள் திருக்கண் சாத்தியும், ஊர்வலத்தோடுவந்த பொது மக்களுக்கு பான வகைகளையும் பலகாரங்களையும் வழங்கினார்கள்- இவ்வாண்டில் பசனைக் கோஷ்ட்டிகளில் மிகுதி யாகச் சிறுவர் சிறுமியர் தாய்மார்களும் கலந்து கொண்டனர், கடும் வெப்பத்தையும் பொருட் படுத்தாமல் பக்திப் பாடல்களைப் பாடி வந்தது குறிப்பிடத்தக்கது, பிற்பகல் இரண்டு மணி யளவில் ஸ்ரீ முருகப்பெருமான் தமது இருக்கை சேர்ந்தார். ரெங்கோன் நாட்டுக் கோட்டைச் செட்டியார்களின் கோயில்களின் தரும பரிபாலன சபைச் செயலர் திரு. காந்தி அண்ணாமலை அவர்கள் எல்லோருக்கும் நன்றி கூற, பிரசாதம் வழங்கப்பெற்று விழா இனிதே நிறைவேறியது.

—ஆசிரியர்

அற நிலையத் துறையின் பணிகள்

நம்முடைய இந்து சமய அற நிலைய ஆட்சித்துறை இயற்றிவரும் சில முக்கியமான பணிகளை, அவ்வப்போது நம் 'திருக்கோயில்' இதழில் குறிப்பிடுவது பொருத்தமாக இருக்குமெனக் கருதுகின்றோம். ஆதலின் அவற்றைப் பற்றிய சில குறிப்புக்கள் சுருக்கமாக இங்குக் கீழே தரப்படுகின்றன.

திருமண மண்டபங்கள் :

கோயில்களைத் தூய்மையுடன் திகழச் செய்வதிலும், ஆண்டவனைத் தரிசிக்க வரும் பக்தர்களுக்கு வசதிகள் பல செய்து தருவதிலும், அற நிலையத் துறை சிறந்த சாதனைகள் புரிந்துள்ளது. இந்து சமுதாயப் பொது மக்களுக்கும் பக்தர்களுக்கும் பயன்படும் பொருட்டு. திருமண மண்டபங்கள் பற்பல அண்மையிற் சில ஆண்டுகளில் ஆங்காங்கே கட்டப்பட்டுள்ளன. இவற்றிற்காகக் கீழே குறிப்பிட்டிருக்கும் மதிப்பீட்டுச் செலவுகள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

1967	82,000	ரூபாய்
1968	62,000	,,
1969	4,12,000	,,
1970	18,42,700	,,

கோயில்களின் வருவாய்:

அண்மைக்காலத்தில் அற நிலைய ஆட்சித் துறையின் சீரிய பணிகளினாலும், சிறந்த கண்காணிப்பினாலும், கோயில்களின் வருவாய் கணிசமான அளவுக்கு மிகுதிப்பட்டுள்ளது.

1967-68-ம் ஆண்டில்	ரூ. 3,98,52,754
1968-69-ம் ஆணடில்	ரூ. 4,99,25,142
1969-70-ம் ஆண்டில்	ரூ. 5,99,10,170

மேலும் பற்பல கோயில்களும், சமய நிறுவனங்களும் நமது அற நிலையத்துறையின் பராமரிப்பக்கும், ஆட்சிக்கும் கீழ்ப்புதியனவாக அண்மையிற் சில ஆண்டுகளில் கொண்டுவரப்பட்டுள்ளன. அறநிலையத் துறையின் ஆட்சிக்குட்பட்ட சமய நிறுவனங்களின் மொத்த எண்ணிக்கை, ஆண்டுதோறும் வளர்ச்சியடைந்துள்ளமை காணலாம்.

1966--67ல்	9,747
1967-68,ல்	9,912
1968-69-ல்	10,102
1969-70-ல்	10,239

தங்கும் விடுதிகள்:

கோயில்களுக்குத் திருவிழாக் காலங்களிலும், மற்ற காலங்களிலும் தரிசிக்க வருகின்ற பக்தர்களின் நன்மைக்காக, ஆங்காங்கே பல கோயில்களில் தங்கும் விடுதிகள் கட்டப்பட்டுள்ளன. அது குறித்துப் பின்வரும் அளவிற்குக் கணிசமான தொகைகள் செலவிடப்பட்டுள்ளன.

1869-ல்	ரூ. 1,10,700
1970-ல்	ரூ. 2,65,800

யாத்திரிகர் விடுதிகள்:

இவ்வாறே தலயாத்திரை குறித்து நாட்டின் பல பகுதிகளினின்றும் வருகின்ற யாத்திரிகர்கள், பிரயாணிகள் முதலியவர்கள் தங்குவதற்கும் கடந்த சில ஆண்டுகளில் பின்வரும் அளவிற்குச் சிறப்பான கணிசமான தொகை செலவிடப்பட்டுள்ளது.

1967	ரூ. 3,95,400
1968	ரூ. 2,73,200
1969	ரூ. 6,34,000
1970	ரூ. 10,60,000

திருப்பணிகளுக்கு உதவி:

1970-71-ஆம் ஆண்டில் திருப்பணிகளின் பொருட்டு, அரசாங்க மானியமாக 48 கோயில்களுக்கு நான்கு லட்சம் (4,00,000) ரூபாயும், அறநிலையத்துறைப் பொது நல நிதியின்று 18 கோயில்களுக்கு மூன்று லட்சத்து தொண்ணூற்று மூன்றுயிரம் (3,93,000) ரூபாயும் வழங்கப்பட்டுள்ளன.

பங்குனி உத்திரத் திருவிழா

ந. ரா. முருகவேள், M. A., M. O. L..

முன்னுரை -

நமது தமிழ் நாட்டில் நடைபெற்றுவரும் தெய்விகத் திருவிழாக்கள் பலவற்றுள், "பங்குனி உத்திரத் திருவிழா" என்பது மிகவும் பழமையும் பெருமையும் வாய்ந்த தொன்ருகும். ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட அகநானூறு என்னும் பண்டைச் சங்க கால நூலின் பாடல் ஒன்றில், பங்குனி உத்திரத் திருவிழா நிகழ்ச்சி பற்றிய குறிப்பு ஒன்று, நுண்ணிதின் அமைந்து காணப் படுகின்றது.

அகநானூறு -

தலைமகன், பொருள் தேடுதற்பொருட்டுத் தன்னைவிட்டுச் சிலகாலம் அயல்நாடுகளுக்குப பிரிந்து செல்லுதல் கூடும் என்று தலைமகள் கருதுகின்ருள். அதனுல் அவள் பெரிதும் மனம் வருந்துகின்ருள். அந்நிலையில் தலைமகன்பால் உற்ற வேறுபாடுகளைத் தோழி காண்கின்ருள். "தலைவியே! நமது தலைவர் நின்னைப் பிரிந்து ஒரு பொழுதும் செல்லார். அங்ஙனமாகவும் நீ எற்றுக்கு மனம் கவல்கின்ருய்?" சோழர்களினது உறையூரின்கண், பங்குனி விழாக் கழிந்த மறுநாளில், பொலிவழிந்து நிற்கும் விழாக் களம் போல, நினது அழகிய நெற்றி ஏன் பொலிவற்று ஒளியிழந்து இருக்கிறது? என்று வினவி, தலைமகளுக்குத் தோழி ஆறுதல் கூறுகின்ருள். இக்கருத்து அமைய,

"பங்குனி முயக்கம் கழிந்த வழிநாள்
வீஇலை அமன்ற மரம்பயில் இறும்பில்
தீயில் அடுப்பின் அரங்கம் போல
பெரும்பாழ் கொண்டன்று நுதலே"

எனவரும் அகநானூற்றுப் பாடற் பகுதி (137) பங்குனி உத்திர விழாப் பற்றிய பழைய இலக்கியச் சான்ருகத் திகழ்தல் காணலாம். இதன் கண் உத்திரமும் நிறைமதியும் கூடிய கூட்டம் 'முயக்கம்' (விழா) என்றும், அது பங்குனியில் வருதலின் 'பங்குனி முயக்கம்' (பங்குனி மாத விழா) என்றும் குறிப்பிடப் பெற்றமை, அறிந்து இன்புறுதற்குரியது.

இறையனுர் அகப்பொருள் -

பங்குனித் திங்களில் உத்திரமும் நிறைமதியும் கூடிவரும் நாள், மிகச் சிறந்த நல்ல நாளாகும். அந்நாளில் தெய்விகத் திருவிழாக்கள் கொண்டாடுதல் பண்டைத் தமிழ் மக்களின் வழக்கம். "ஊரெனப்படுவது உறையூர்" என்னும்படி மிகவும் புகழோங்கியிருந்த சோழர்களின் தலைநகரமாகிய உறையூரின்கண் இப்பங்குனி உத்திரத் திருவிழா மிகவும் சிறப்புறக் கொண்டாடப் பெற்றுவந்தது.

இவ்வுண்மை, 'களவினுள் தவிர்ச்சி' என்னும் இறையனுர் அகப்பொருட் சூத்திர (16) உரையில், "மதுரை ஆவணி அவிட்டமே, உறையூர்ப் பங்குனி உத்திரமே, கருவூர் உள்ளி

விழாவே'' என ஆசிரியர் நக்கீரனுர் வரைந்துள்ள சொற்றெடரால் புலனுகும். இவ்வாற்ருல், இற்றைக்குப் பல நூற்ருண்டுகளுக்கு முற்பட்டு, ஆசிரியர் நக்கீரனுர் வாழ்ந்த காலத்திலேயே, பங்குனி உத்திரத் திருவிழா தமிழ்நாடு எங்கணும் நடைபெற்று வந்ததென்பதும், அவற்றுள்ளும் அது சோழர்களின் தலைநகராகிய உறையூரின்கண் தனிப்பெரும் சிறப்புடன் புகழோங்கக் கொண்டாடப் பெற்றதென்பதும் தெளிவுற அறியப்படும்.

பெரிய புராணம் -

உறையூரைப் போலவே திருவாரூர்ப் பெரு நகரும், சோழர்களின் தலைநகரமாக விளங்கிய சிறப்புடையது. திருவாரூரில் நிகழ்ந்து வந்த பண்டைப் பெரும் தெய்விகத் திருவிழாக்களுள் பங்குனி உத்திரப் பெருவிழாவும் தலைசிறந்ததொன்ருகும். திருவாரூரில் வாழ்ந்து வந்தவர் நமிநந்தியடிகள் நாயனுர் ஆவர். அவர் இறைவன் திருவருளாலே நாடெல்லாம் அறியும்படி நீரினை வார்த்து ஆரூர் அரநெறியப் பர்க்குத்திருவிளக்குஎரித்தபெருமையுடையவர். சோழமன்னன் அவர்தம் அருமையும் பெருமையும் உணர்ந்து போற்றினுன். அவர் தம் திருத்தொண்டின் திறங்கண்டு மகிழ்ந்தான்.

திருவாரூர்ப் புற்றிடம் கொண்ட பெருமானுக்கு நித்த நிவேதனத்திற்கு உரிய திருவமுது படி முதலான நிபந்தங்கள் பலவற்றையும் ஒருங்கே அமைத்து, அவற்றை வேதாகம விதிப்படி செவ்வனே நடத்திவருமாறு, சோழ மன்னன் நமிநந்தியடிகளையே தலைவராக நியமித்து வேண்டிக்கொண்டான். அதற்கு இசைந்து திருவாரூர் வீதிவிடங்கப்பெருமானுடைய திருவிளையாட்டுத் திருவிழாக்களையும், சிறப்புப் பொருந்திய உத்திரத் திருவிழாவினையும், நமிநந்தியடிகள் சிறந்த முறையில் நடத்தி வந்தார்.

''நாத மறைதேர் நமிநந்தி
அடிகளார் நற்றெண்டாகப்
பூத நாதர் புற்றிடங்கொள்
புனிதர்க்கு அமுது படிமுதலா;
நீதி வளவன் தான்வேண்டும்.
நிபந்தம் பலவும் அரியணையின்
மீது திகழ இருந்தமைத்தான்
வேதா கமநூல் விதிவிளங்க.'' (1)

"வென்றி விடையார் மதிச் சடையார்
வீதி விடங்கப் பெருமாள் தாம்,
என்றும் திருவா ரூர்ஆளும்
இயல்பின் முறைமைத் திருவிளையாட்டு
ஒன்றும் செயலும், பங்குனியுத்
திரமாம் திருநாள் உயர் சிறப்பும்
நின்று விண்ணப் பம்செய்த
படிசெய் தருளும் நிலைபெற்ருர் !" (2)

தேவாரம் -

இவ்வாறு சிவனடியார்களுக்கு வேண்டியவற்றை எல்லாம் நியதியாகச் செய்து வந்ததினுலும், உலகமெல்லாம் புகழ்ந்து கொண்டாடும்படி பங்குனி உத்திரத் திருவிழா நடைபெறும்படி செய்து வந்ததினுலும், இவர் தம் சிறப்பு எங்கும் எவரும் அறியப் பரவியது. அதனுல் அதனை மிகப்பெரிதும் போற்றி,

''ஆராய்ந்து அடித்தொண்டர் ஆணிப்
பொன் ஆரூர் அகத்தடக்கிப்,
பாரூர் பரிப்பத்தம் பங்குனி
யுத்திரம் பாற்படுத்தான்;
ஆரூர் நறுமலர் நாதன்
அடித்தொண்டன் நம்பிநந்தி
நீரால் திரு விளக்கு இட்டமை
நீள்நாடு அறியும் அன்றே''

—திருவாரூர்த் திருவித்தம்

எனத் திருநாவுக்கரசர் பெருமான், தமது தேவாரத் திருப்பாடலில் நமிநந்தியடிகளை நயந்து புகழ்ந்து பாடியிருக்கக் காண்கின்றோம். நமிநந்தியடிகள் உலகமும் ஊரும் உவந்து புகழ்ந்து கொண்டாடும்படி, பங்குனி உத்திரத் திருவிழா நடைபெறச் செய்து வந்த சிறப்பினையே, நாவுக்கரசர் 'பார் ஊர் பரிப்பத் தம் பங்குனி உத்திரம் பாற்படுத்தான்' என வியந்து வியந்து அருளிச் செய்வாராயினர்.

காஞ்சிப் புராணம் -

அம்பிகை, தட்சனுக்கு மகளாகப் பிறந்து தாட்சாயினி எனப்பெயர் பெற்றிருந்த களங்கம் தீரும்படி, மலையரசனுக்கு மகளாகப் பிறந்து, மலைமகள் (பார்வதி) எனப் பெயர் பெற்றுத் தவம்புரிந்து இறைவனைத் திருமணம் புணர்ந்த நாள், பங்குனி உத்திரத் திருநாளேயாகும். அதுபற்றியே, அம்பிகை காமாட்சியாகக் காஞ்சிபுரத்துக்குப் போந்து, கம்பை நதிக்கரையில் திருவேகம்பநாதரைப் பூசித்து அருள் பெற்றபோதும் தேவர்கள் அனைவரும் விரும்பி வேண்டிக் கொண்டபடி, காமாட்சியம்மை திருவேகம்பநாதர் ஆகிய அம்மையப்பர் இருவரும், அப்புனிதநாளிலேயே திருமணம் கொண்டருளினர்.

அப்போது சிவபெருமான், ஆண்டுதோறும் இக்காஞ்சிபுரத்தில் பங்குனித் திருவிழா நடைபெறுக, முதல் ஒன்பது நாட்கள் திருவிழா நடைபெற்ற பின்னர், பத்தாம் நாளாக வரும் பங்குனி உத்திரத் திருநாளில், காமாட்சியம்மை திருவேகம்பநாதர் என்னும் எம் இருவருக்கும் திருமண விழாக் கொண்டாடப்பெறுக'' என்று அருளிச் செய்தார்.

''திருத்தகுவண் காஞ்சிதனில் ஆண்டு தொறும்
பங்குனி உத் திரநாள், யார்க்கும்
அருத்திபுரி திருவிழா நிகழ்ந்து, ஈற்றின்
வதுவை நமக்கு அமைவ தாக!''

எனவரும் காஞ்சிப்புராணப் பாடலில், ஆசிரியர் சிவஞான சுவாமிகள் இப் பங்குனி உத்திரத் திருவிழாவின் சிறப்பு நிகழ்ச்சியினைத் தெளிவுற விளக்கியிருத்தல் காணலாம். இவ்வரலாறு காஞ்சிபுரத்திற்கு உரியதாகக் கூறப்படினும், எல்லாத் தலங்களுக்கும் கோயில்களுக்குமே இத்திருவிழா மிகவும் சிறப்பாக உரியதாகும்.

திருமயிலைத்திருப்பதிகம் -

ஆதல்பற்றியே திருஞானசம்பந்தப் பெருமான் தமது திருமயிலைத் திருப்பதிகத்தில், ''சிவநேசச் செட்டியாரின் திருமகளாராகிய பூம்பாவை அம்மையாரை விளித்து, உலகுயிர்களுக்கெல்லாம் தாயும் தந்தையுமாகிய நமது அம்மையப்பரின் திருமணக் கோலம் காணும் பங்குனி உத்திரத் திருவிழாக் காட்சியினைக் காணாமலேயே நீ போய் விடுகின்றனையோ?'' எனப் பரிவுற்று வினவுவதாக,

''மலிவிழா வீதி
மடநல்லார் மாமயிலைக்
கலிவிழாக் கண்டான்
கபாலீச் சரம் அமர்ந்தான்,
பலி விழாப் பாடல் செய்
பங்குனி யுத் திரநாள்
ஒலிவிழாக் காணாதே
போதியோ பூம்பாவாய்''

என்னும் திருப்பாடலைத் திருவாய் மலர்ந்தருளினர்.

முடிவுரை

உத்திரம் என்னும் நட்சத்திரம் இயல்பாகவே சிறப்புடையது. இதனை ''ஒத்தமைந்த உத்திரநாள் தீர்த்தம் ஆக, ஒளிதிகழும் ஒற்றியூர் என்கின்றுரே'' எனவரும் திருநாவுக்

கரசர் திருத்தாண்டகப் பகுதியால் உணரலாம். இதுதானே, அழகுக்கு அழகு செய்தாற் போலவும், பொன்மலர் நறுமணம் பெற்றாற் போலவும், நிறைமதியுடன் கூடிய பங்குனி உத்திரம் எனவரின் எத்துணைப் பெருஞ் சிறப்பை யுடையதாகும் என்று கூறுதலும் வேண்டுமோ?

பங்குனியுத்தரப் பெருநாளிலேயே இறைவனும் இறைவியும் திருமணம் கொண்டருளினர்; இந்நாளிலேயே இரதிதேவி வந்து இறைஞ்சி நிற்க, இறைவன் அவள் பொருட்டு இரக்கம் கொண்டு தாம் முன்னர்த் தமது நெற்றிக் கண்ணினுல் நோக்கி எரித்த காமதேவனை மன்னித்து, அவனை உயிர்த்தெழச் செய்து அருள் புரிந்தார்; 'எளியேனின் பிழையைப் பொறுத்தருள்க' என்று அவன் பணிந்து வேண்டிக்கொள்ள, ''யாம் உனை முனியின்' அன்றே, பின்பு அது தணிவது? உள்ளம் பேதுறல் மைந்த'' என்று கூறிக் காமதேவனுக்குத் தண்ணளிபுரிந்தருளினர்.

இனி, இராமபிரானும் சீதைப் பிராட்டியும் திருமணம் செய்து கொண்ட சிறப்புடையதும் அருச்சுனன் பிறந்த பெருமை பெற்றதும், பங்குனி யுத்திர நாளேயாகும் என்னும் செய்தியும், இங்கு நாம் உணரத்தக்கது.

எனவே, இத்தகைய புனிதப் பங்குனி உத்திரப் பெருவிழாவில், ஆருயிர் அனைத்துக்கும் அம்மையும் அப்பனுமாய் விளங்கும் ஸ்ரீ கற்பகாம்பாள் சமேத ஸ்ரீ கபாலீச்சுரப் பெருமானின் திருவடிகளைப் பத்தியுடன் வழிபட்டு, நாம் அனைவரும் வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து, உய்ய முயலுவோமாக!



திருவிடைமருதூர் ஸ்ரீ மகாலிங்கசுவாமி கோயில்', திருக்குளம் ஆகியவற்றின் தோற்றம்

வழிபாட்டின் அவசியம்

மதுரை ஆதீனகர்த்தர், ஸ்ரீலஸ்ரீ
சோமசுந்தர ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்

''கடவுளை நோக்கிச் செய்கின்ற பிரார்த்தனை அல்லது வேண்டுகோள் பயனுடையதாக இருக்குமா? அப்படி ஒரு கடவுள் இருக்கிறாரா! அப்படி இருப்பாரென்றால், நமக்கும் அவருக்கும் எவ்விதத் தொடர்பும் இருக்கிறதாகத் தெரியவில்லையே? அவ்வித மூட நம்பிக்கை நமது நாட்டை விட்டுப் போனாலன்றி, நம் நாடு முன்னேற முடியாது'' என்று சொல்லுகின்ற பலர் ஆலய வழி பாட்டிலும், வீட்டு வழி பாட்டிலும் தலை சிறந்த நமது தமிழகத்திலேயே உற்பத்தியாகி இருக்கிறார்கள். இவை வெளி நாடுகளிலிருந்து விதைத்த விதைகளால் ஏற்பட்டவை. இப்படிப்பட்ட கேள்விகளையும் இதற்கு மேல் அதிகமான கேள்விகளையும் பல்லாயிர வருஷங்களுக்கு முன்பே கேட்டு, அவர்களுக்கெல்லாம் பல நியாயங்களும் நிருபணங்களும் கொடுத்து, ஒப்புக் கொள்ளுமாறு நம் அருளாளர்களும், ரிஷிகளும் செய்து, அவற்றைப் பின் சந்ததியார்களான யாவரும் உணர்ந்து கொள்ளுமாறு ஏடுகளில் எழுதியும் உதவியிருக்கிறார்கள். அந்த உண்மைகளை நாம் திருவருளால் கண்டுணர்ந்து இன்று வெற்றி முரசு கொட்டிக் கையாண்டு வருகின்றோம். அவ்வாறு கேட்கின்ற ஒருவரிடம் நாம் முதலாவதாக ஒரு கேள்வி கேட்கிறோம்.

''நீ இந்த உலகத்தில் பிறந்து, நன்றாக உண்டு வளர்ந்து, இவ்வாறு பேசுவதற்கு உன்னுடைய தந்தையும் தாயுமே மூல காரணம் என்பதை ஒப்புக்கொள்கிறாயா''? என்பதே அந்தக் கேள்வி. ''ஆம்'' என்று ஒப்புக் கொண்டால் மட்டும் மேற்கொண்டு பேசுவோம்; மனிதனான எவனும் ஒப்புக்கொள்ளாதிருக்க முடியாது. ''உன்னை உன்னுடைய அம்மா தானே பத்து மாதம், சுமந்து பெற்றெடுத்து, பாலூட்டித் தாலாட்டி, உணவு கொடுத்து வளர்த்து வந்தாள்? அப்படியிருக்க, நீ யாருடைய குழந்தை என்று கேட்டால், நீ ஏன் அம்மாவின் பெயரைச் சொல்லாமல், அப்பாவின் பெயரைச் செல்லி, அவருடைய மகன் என்று சொல்லுகிறாய்?'' என்று பின் கேட்போம்.

''உன்னைப் பெற்றெடுத்தது உன் தாய் தான் என்பதே அவள் சொல்லத்தான் தெரியுமே தவிர நீ அறியாதிருக்க, தகப்பனார் பெயரை உன் தாயார் சொல்வதைக் கேட்டுத் தானே ஒப்புக்கொண்டு சொல்லி வருகிறாய்?'' என்போம். ''ஆமாம்'' என்று சொல்லாமல் தீராது. தாய்க்கே தான் பெற்ற பிள்ளையின் தகப்பனார் யார் என்று தெரியாத நிலை இருந்தால், தாயின் விலாசத்தைப் போட வேண்டியதைத் தவிர வேறு வழியில்லை. தாயின் பெயரைச் சொல்லாததும், தகப்பனார் பெயரையே சொல்லி வருவதும் உலகு முழுவதிலும் நடைபெறும் வழக்கம் ஆகும். அதற்கு மூல காரணம் ஒன்று உண்டு. அதாவது, ஒரு விளை நிலம் ஒருவனுக்குச் சொந்தமாக இருக்க, அதில் உழவு செய்து வித்திட்ட அவனுக்குத்தான் அந்த நிலத்தில் விளைந்து வந்த பயிர் சொந்தமாகும். அதுபோல மனைவி கணவனுடைய உடைமை. வித்திட்ட உடைமையான மனைவியிடத்தில் உற்பத்தியான குழந்தைகள் தந்தை

யின் சொந்தக் குழந்தைகளாகின்றன. அத ஞலேயே பெண்களெல்லாம் கற்புடையவர் களாக இருக்கவேண்டுமென்பது உலக நீதி ஆயிற்று.

பின் வரும் கேள்வி. ''உனக்குக் கல்யாண மாகியிருக்கிறதா?'' என்பதாகும். ''ஆம்'' என்பான்.

''பிள்ளைகள் இருக்கின்றனவா''?

''ஆம். இருக்கின்றனர்''.

"நீயும் உன் மனைவியும் விரும்பியவண்ணம் குழந்தைகள் பிறந்தனவா''.

''இல்லவே இல்லை'' என்பான்.

ஆரும் ஜார்ஜ் மன்னருக்கும், நேருஜிக்கும் எவ்வளவோ வசதிகள் இருந்தும் ஆண் குழந்தை கள் இல்லை என்பதும், பல பெரிய பணக்காரர் களுக்கும் பதவியில் உள்ளவர்களுக்கும் சில வைத்திய நிபுணர்களுக்கும், விஞ்ஞானிகளுக்கும் குழந்தையே இல்லை என்பதும் யாவரும் அறிந்த உண்மையாகும். அதற்கும் உண்மையான ஒரு காரணம் உண்டு. அது எந்த மனிதனும் தன் விருப்பம் போல் ஆண் மகவுக்குரிய வித்தையோ, பெண் மகவுக்குரிய வித்தையோ உற்பத்தி செய்து உண்டாக்கிக் கொள்ள முடியாததே ஆகும். அந்த வித்தை எல்லாம் வல்ல கடவுள் கொடுத்துத்தான் எந்தத் தந்தையும் பெற வேண்டியிருக்கிறது. தந்தை பெற்று, பின் தாய் அதனைப் பெற்றதன் காரணத்தினுலேயே தாய், தந்தையரைப் பெற்றவர்கள் அல்லது பெற்ருேர்கள் என்று சொல்லுகிருேம்.

இந்த உண்மையை உணர்ந்த அருளாளர்கள், தந்தையை இரண்டு மாதம் தங்குகின்ற நாற் றங்காலாகவும், தாயாரைப் பத்து மாதம் வளர்க்கின்ற விளை நிலமாகவும், இரண்டையும் உடையவர் கடவுளே என்றும் அவற்றில் வித் திட்டவரும் கடவுளே என்றும் கண்டு, ஆண் டவனே உலகத்தில் பிறந்திருக்கிற எல்லா மனி தர்களுக்கும் எல்லாப் பிறவிகளுக்கும் உண்மை யான அம்மையப்பன் ஆகின்ருன் என்றும் அருளியுள்ளனர். இந்துக்கள் கடவுளை, ''அம் மையே அப்பா'' என்றும், ''எந்தையாய் எம் பிரான் மற்றும் யாவர்க்கும், தந்தை தாய் தம்பிரான்'' என்றும், கிறிஸ்தவர்கள், ''நாமெல்லாம் பரமண்டலத்திலிருக்கின்றபிதா வின் குழந்தைகளே'' என்றும், இஸ்லாமியர்கள், ''கடவுளே மனிதர்களைப்படைத்தார்'' என்றும் கூறி வருகிருர்கள் யாரும் உயிர்களைக் கடவுள் படைத்ததாகச் சொல்லவில்லை.

மூன்ருவது கேள்வி; ''உனக்கு ஒரு பெய ரிடப் பெற்றிருக்கிறதல் வா? அந்தப் பெயர் கண்ணுக்குத் தெரியாத உயிருக்கு இடப் பட்டதா? கண்ணுக்குத் தெரிகின்ற பாரமுள்ள உடலுக்கு இடப்பட்டதா? இரண்டும் சேர்ந்த தற்கு இடப்பட்டதா? அல்லது வேருெரு பார மில்லாத உள் உடலுக்கு இடப்பட்டதா? எப் பொழுது இடப்பட்டது? யாரால் இடப்பட் டது?'' என்று கேட்போம்.

''நான் பிறந்த பின்தான் பெயரிட்டிருக் கிருர்கள். ஆணு பெண்ணு என்று பார்த்து, என் பெற்ருேர்களே பெயரிட்டிருக்கிருர்கள்'' என்றும், இந்தப் பாரமுள்ள உடலுக்குத்தான் பெயரிட்டிருக்கின்ருர்கள் என்றும், (நாம் எழுதியிருக்கிற புத்தகத்தைப் படித்தறியாத) எவரும் சொல்லுவர். ஆனுல், உண்மையில் மனிதராகப் பிறந்திருக்கிற எவ ருக்கும் பெயரிட்டவர் கடவுளே யாவர்.

ஒருவரை ஆணுகவோ, பெண்ணுகவோ பிறக்கச் செய்ய வேண்டிய தகப்பனுருடைய உடலில் அதற்குரிய அணுப்பிரமானமுள்ள அதிசூக்குமமான வித்தைச் செலுத்தும் முன் னரேயே அவரவருடைய வினைகளுக்குத் தகுந்த தலையெழுத்தை ஆணுக்கு வலது உள்ளங்கை யிலும், பெண்ணுக்கு இடது உள்ளங்கையிலும் சுருக்கெழுத்துப் போன்ற இரேகைகளாகப் பொறித்து, இன்ன ஊரில், இன்ன சாதியில், இன்ன பெற்ருேருக்கு, இன்ன பெயரோடு, இன்ன விநாடியில், இன்ன இன்ன கிரக நிலை யில் பிறக்க வேண்டுமென்று கடவுளே தீர் மானித்து, அதன்படி பிறக்கச் செய்து, அவர் இட்ட பெயரையே இடும்படியாகவும், அவரவர் செய்த புண்ணிய பாவத்திற்கேற்ப இன்ன இன்ன இன்பம், இன்ன இன்ன துன்பம், அநு பவித்து வருமாறும் ஆட்சி புரிந்து வருகிருர். அந்தப் பெயரும், சொப்பனத்தில் பாரமுள்ள

உடலின் உதவியின்றி, இன்ப துன்பம் அநுபவிக்கின்ற பாரமில்லாத உள்ளுடலுக்கே இட்டிருக்கிருர்.

இந்த அரிய பெரிய பேருண்மையை முதல் முறையாகக் கேட்கின்ற அனைவரும் ஆச்சரியப்படாமல் இருக்க முடியாது. ஒரு வேளை நமக்கு மூளைக் கோளாருக இருக்கலாமோ என்று கூடச் சில ஆத்திரக்காரர்கள் நினைக்கக்கூடும். நாம் இதனுடைய உண்மையைச் சோதித்து உணருவதற்காக ரூபாய் ஒரு லட்சத்திற்கு மேல்செலவு செய்த பின்தான், இவ்விதம் கூறுகின்ருேம். திருவள்ளுவர்,

''எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும்
—அப்பொருள்
மெய்ப்பொருள் கண்பது அறிவு''

''எப்பொருள் எத்தன்மைத் தாயினும்—
அப்பொருள்
மெய்ப்பொரு ர் காண்பது அறிவு''

என்று கூறியிருப்பதனுல், நாம் கூறும் இந்த உண்மையைச் சோதித்துப் பார்த்த பின் அதைப்பற்றி ஏதாவது சொல்ல வேண்டுமே தவிர, கேட்ட மாத்திரத்தில் யாரும் எதையும் மறுத்தால், அது அறிவுடைமையாகாது.

பெயர்களைக் குறித்து, கிறிஸ்துவ வேத நூலில், பிரசங்கி ஆகமம்—அதிகாரம் 6—வசனம் 10-இல் ''இருக்கிறவன் எவனும் தோன்று முன்னமே பெயரிடப் பெற்றிருக்கிருன். அவன் மனுஷன் என்பது தெரிந்திருக்கிறது'' என்றும், இரேகை சாஸ்திரத்தைக் குறித்து யோபு ஆகமம்—அதிகாரம் 37-வசனம் 7-இல், ''தாம் உண்டாக்கின சகல மனுஷரும், தம்மை அறியும்படிக்கு, அவர் சகல மனுஷருடைய கையையும் முத்திரித்துப் போடுகிருர்'' என்றும் கூறியிருக்கிறது. உதாரணமாக நாகர்கோவில் ஸ்ரீ ஆறுமுக நாவலரது நாடி சாஸ்திர ஏட்டில் அவருடைய பெயரை, ''ஐந்தும் ஒன்றும் வதனமெனப் பெயரும் சூட்டி'' என்று கண்டிருந்தது. ஐந்து ஒன்று-ஆறு; வதனம் என்ருல் முகம். ஆறுமுகம் என்பது ஆண்டவன் இட்டபெயர். ஸ்ரீவைகுண்டத்திலுள்ள ஒரு கத்தோலிக்க கிறிஸ்துவ அன்பருக்கு, ''சாவில் ஆறும் ஒன்பதும் இவன் தன் நாமம்'' என்று கண்டிருந்தது. 'ச' என்ற எழுத்து வரிசையில் ஆருவது எழுத்து 'சூ'; ஒன்பதாவது எழுத்து 'சை'; அவரது தந்தை இட்ட பெயரும், ஆண்டவன் கொடுத்த பெயரும் சூசை என்பதாகும். ஓர் இந்துவைப் போல மாறுவேஷம் போட்டுக்கொண்டு சென்ற மதுரையிலுள்ள இஸ்லாமியருக்கு, ''அப்துல்ரஹ்மான்'' என்ற பெயர் கூறப்பட்டிருக்கிறது. ஓர் ஆங்கிலேயர் பார்த்தபொழுது, ''முழத்தில் பாதி இவன்தன் நாமம்'' என்றிருந்தது. அவரது பெயர் ''ஜான்'' என்பதாகும். கோவையில் கௌமார மடத்தை நிறுவிய தலைவருக்கு, ''இராமக்குட்டி'' என்றும், பின் துறவு பூண்டு இராமானந்தர் ஆவார் என்றும் கண்டிருந்தது.

இவற்றின் உண்மைகளை, சென்னை அரசாங்கத்தார் கை இரேகைகள் சம்பந்தமாகச் சப்த ரிஷி நாடியின் பழைய ஏட்டுப் பிரதிகளிலிருந்து பல புத்தகங்கள் வெளியிட்டு இருக்கிருர்கள். தமிழ் நாட்டில் கந்தர் நாடி, காக்கையர் நாடி, கௌசிகர் நாடி, சிவசிந்தாமணி, அநாகத வேதம் முதலிய பிற இரேகை சாஸ்திரங்களும் இருக்கின்றன. கடவுள் கொடுத்திருக்கும் அவ்விதத் தீர்ப்புகள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமாக இருப்பதற்குக் காரணம் அவரவர் சுய அறிவு கொண்டு முன் பிறவிகளில் செய்த நல்வினை, தீவினைகளில் ஏற்பட்ட வேற்றுமைகளே தவிர, கடவுளது பக்ஷபாதமுள்ள செயலால் அல்ல என்பதற்குரிய நிரூபணங்களும் இரேகை சாஸ்திர ஏடுகளில் காணப்பெறுகின்றன. கடவுள் கொடுக்கிற நியாயத் தீர்ப்பில் தவறு ஏதும் இருக்க முடியாது. ஏனெனில் அவரே நாம் செய்கின்ற செயலைப் பார்த்துப் பதிவு செய்து கொண்டிருக்கிருர். அது எப்படி முடியும் என்று சிலர் கேட்கலாம்.

சிற்றறிவும் சிறு ஆற்றலும் உடைய மனிதர்களே ஒருவர் பேசுகின்ற பேச்சுக்களையும் பாடுகின்ற பாட்டுக்களையும் ரேடியோ (Radio)க் கருவிமூலம் எங்கும் கேட்கவும், அவற்றை ஒலிப்பதிவு செய்து பின்னுல் எப்

பொழுது வேண்டுமென்றாலும் எந்த இடத்திலும், பிறர் கேட்கும்படி 'டேப் ரிக்கார்டர்' கருவி மூலம் செய்யவும் முடிகின்றதென்ற உண்மையை யாவரும் அறிவர். அதேபோல, ஒருவருடைய உடலின் உருவத்தையும் அசைவையும், தொழிற்பாட்டையும் தொலைக் காட்சி (Television)க் கருவி மூலம் தொலைவிலுள்ளவர்கள் கண்டு கொள்ளுமாறு செய்யவும் முடிகிறதென்ற உண்மையையும் யாவரும் அறிவர். ஆனால் முற்றறிவும் முடிவில்லாத ஆற்றலும் உடைய கடவுள் நமக்கு 'டேப் ரிக்கார்டர்' கருவியையும், டெலிவிஷன் கருவியையும் ஒன்று சேர்த்து ஒவ்வொருவரது நெற்றியிலும் அபூர்வமாக அமைத்திருக்கிறார் என்பதைப் பலரும் சிந்தியாதிருக்கிறார்கள். அதனாலேயே ஏதாவது ஒன்றை நினைவிற்குக் கொண்டுவர வேண்டுமானால் புருவங்களை உயர்த்தி நெற்றியை அழுத்துகிறோம். அவ்வித அபூர்வமான கருவியைக் கருணையுள்ள கடவுள் நமக்குத் தந்து உதவியிருப்பதனாலேயே நாம் 5-ஆவது பிராயத்திலிருந்து படித்தவற்றையும் பார்த்தவற்றையும் நினைவுபடுத்திப் பிறருக்குச் சொல்லக்கூடிய பாக்கியம் பெற்றவர்களாக இருக்கிறோம்.

மனிதர்களுக்கு அவ்வித அபூர்வமான கருவிகளைக் கொடுத்திருக்கும் கடவுளுக்கு நாம் எண்ணுவதையும், பிரார்த்திப்பதையும், பேசுவதையும், செய்வதையும் பதிக்கக்கூடிய ஆற்றல் நிச்சயமாக உண்டு என்பதை யாவரும் ஊகித்து உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

நான்காவது கேள்வி: உன்னுடைய தாய் தந்தையர் இறந்து போனதாகச் சொன்னாயே, நீ இவ்வுலகில் செய்கின்ற காரியங்களையும், பேசுவதையும், நினைப்பதையும் அறிய முடியாதென்று தானே நினைத்துக் கொண்டிருக்கிறாய்?' என்பதாகும். ''அவர்களைத்தான் சுட்டு எரித்து விட்டோமே; அவர்கள் எப்படி அறிய முடியும்?'' என்று கேட்கலாம். ''உனக்குப் பெயரிடப் பெற்றிருக்கிறதே, அந்தப் பெயர் பாரமுள்ள உடலுக்குமல்ல, உயிருக்குமல்ல. சொப்பனத்தில் தொழிற்படுகின்ற பாரமில்லாத உள்ளுடலுக்கே'' என்று முன்னரேயே கூறியிருக்கிறோமல்லவா? அந்த உடலையே **''ஆவி உடல்,'' ''நுண்ணுடல்,''** ''புகழுடல்'' என்று தமிழிலும், சூக்கும சரீரம், யாதனா சரீரம், பிராணமய கோசம் என்று வடமொழியிலும், கோஸ்ட் (Ghost), ஸ்பிரிட் (Spirit) ஆஸ்ட்ரல்பாடி (Astral Body), எத்திரியல்பாடி (EtherialBody) என்று ஆங்கிலத்திலும் கூறுவர். அந்த உடல் எந்த அணுக்குண்டாலும், ஐம் பூதங்களாலும், எந்தக் கூரிய கருவியினாலும் அழிக்க முடியாதது. அதற்கு இரவு பகல் கிடையாது. உணவு வேண்டியதில்லை. அந்த ஆவி உடல் நான்குபேர் தூக்கவேண்டிய கட்டைபோன்ற உடலிலிருந்து விடுதலைபெற்று அவரவர் செய்த புண்ணிய பாவங்களுக்கேற்ப அருளுலகிலும், இருள் உலகிலும் தொடர்ந்து வாழ வேண்டியதாகக் கடவுள் அமைத்திருக்கிறார். அதனாலேயே,

''அருளில்லார்க்கு அவ்வுலகமில்லை பொருளில்லார்க்கு
இவ்வுலக மில்லாகி யாங்கு''

''அருள் சேர்ந்த நெஞ்சினார்க்கு இல்லை இருள் சேர்ந்த
இன்னா உலகம் புகல்''

என்று திருவள்ளுவர் அருளியிருக்கிறார். இக் குறள்களில் நம்பிக்கையில்லாதவர்கள் இறந்தவர்களோடு நேரில் தொடர்புகொண்டு அறிந்து கொள்ளலாம். அந்த ஆவி உடல் அங்கு அழிக்கப்பெற்று அதிலுள்ள உயிரின் தன்மைகளுக்கேற்பப் பிறவி எடுக்கவோ, பிறவியற்ற மேல் நிலை எய்தவோ செய்யும் காலம் வரை இறந்த உற்றார், உறவினரோடு பேசி, அவர்களுடைய புத்திமதிகளையும் அங்குள்ள உண்மையான நிலைகளையும் புரிந்து, திருந்தி நடந்து கொள்ளலாம். நாம் வெளியிட்டுள்ள ''இறந்தவர்கள் வாழும் நிலைமையும் பேசும் முறையும்'' என்ற நூலில் இதற்கு ஆதாரமாக நம் சொந்த 21 அனுபவங்களையும் மேல்நாட்டு மேற்கோள்களையும், மகாபாரதம், இராமாயணம், பெரியபுராணம், திருவிளையாடற் புராணம், சிலப்பதிகாரம், திருக்குறள், திருமந்திரம், சித்தாந்த சாஸ்திரம், பைபில், திருக்குரான் முதலியவற்றிலுள்ள சான்றுகளையும் யாரும் மறுக்க முடியாத முறையில் கொடுத்திருக்கின்றோம்.

நம்முடன் இப்பூவுலகத்தில் வாழ்ந்து வந்து இறந்துபோன மனிதர்களுக்கே நாம் பேசுவதையும், நினைப்பதையும், செய்வதையும் அறியக் கூடுமானல், அவர்களுக்கு அந்த ஆற்றலைக் கொடுத்த ஆண்டவனுக்கு நாம் மனத்தினுலும் வாக்காலும் செய்கின்ற பிரார்த்தனைகளைக் கேட்கவும் அதற்கு வேண்டிய உபகாரங்களைச் செய்யவும் முடியும் என்பதில் பகுத்தறிவு படைத்த எந்த மனிதர்க்கும் எள்ளளவும் சந்தேகம் இருக்கமுடியாது. தமிழகத்தில் பிறந்திருக்கிற பெரும்பான்மையோருக்கு நம்மை ஆண்டு வருகிற அதி தெய்வங்களின் பெயர்களையே கடவுள் இட்டிருக்கிருர். மேலை நாடுகளில் ஒயிட் (White), பிரவுன் (Brown), பிளாக் (Block), ஸ்டோன் (Stone) என்ற பெயர்கள்கூட இருக்கின்றன. முருகனை வழிபட்டால் முருகன் பெயர் தாங்கினவர்களைக் கொண்டும், விநாயகரை வழிபட்டால் அவரது பெயர் தாங்கியவர்களைக் கொண்டும், அந்த அந்தத் தெய்வம் உதவிசெய்து வருகிறது என்பதே யாவரும் அநுபவத்தில் உணர்ந்து ஆனந்திக்க வேண்டிய அரிய பெரிய மறுக்க முடியாத உண்மையாகும். தனி மனிதன் கொடுக்கிற மனுவைவிட, பொது மக்கள் கொடுக்கிற மகஜருக்கு விசேஷ மதிப்பை அரசாங்கம் கொடுத்து வருவதுபோல, தனி வழிபாட்டைவிடக் கூட்டு வழிபாட்டிற்கு ஆண்டவன் விசேஷமாகவும் விரைவாகவும் அருள் புரிகிறவராக இருக்கிருர். ஆனதால் பகுத்தறிவுடைய மக்கள் யாவரும் வீடுகளிலும் ஆலயங்களிலும் தனி வழிபாடும், கூட்டு வழிபாடும் செய்து நல்வாழ்வு வாழ்வதற்குப் பாத்திரர்களாவார்களாக.

செய்திச் சுருக்கம்

சேலம் மாவட்டம் திருச்செங்கோடு ஸ்ரீ அர்த்தநாரீசுவரர் சுவாமி கோயிலுக்கு, நமது அறநிலைய ஆணையர் கே. எஸ். நரசிம்மன் B. A. B. L., I. A. S. அவர்கள் வருகை தந்தார்கள். திருமலையின்மேல் உள்ள ஸ்ரீ செங்கோட்டு வேலவர்க்குத் திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்தின் அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள் நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் ''சந்தனுதித் தைல அபிஷேகம்'' தினசரி செய்துவர ஏற்பாடு செய்து உதவியுள்ளார்கள். இத் தேவஸ்தானத்தில் செய்யப்பட இருக்கும் திருப்பணிக்காக நிதி திரட்டுதற் பொருட்டுத் திருமுருக. கிருபானந்த வாரியார் அவர்கள், 17-3-71 முதல் 21-3-71 வரையில், ஸ்ரீ அருணகிரிநாதர் என்னும் பொருள்பற்றி விரிவுரை நிகழ்த்தியருளினுர்கள்.

—ஆசிரியர்

மகாபாரதம்

(முற்றொடர்ச்சி)

அருண்மொழியரசு திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள்

சபாபர்வம் :

நன்றியறிவுள்ளவனும், விசித்திர வேலைப் பாடுகளில் வல்லவனும், மாயைகள் செய்யுந் திறமையுள்ளவனுமான மயன் அர்ச்சுனனை வணங்கி, ''அன்புள்ளவனே ! உன்னால் யான் பிழைத்தேன். உயிர்தந்த உனக்கு யான் ஒன்றும் தர இயலாது எனினும் நன்றி பாராட்டுங் கடமைக்காக, வியக்கத்தக்க ஒன்றை உனக்கு நான் செய்ய விரும்புகின்றேன்'' என்றான்.

அர்ச்சுனன், ''மயனே ! பயன் விரும்பாமல் நான் உதவினேன். மறு உதவியை நான் விரும்பமாட்டேன். உனக்கு விருப்பமிருந்தால் கண்ணபிரானுக்குச் செய்'' என்றான். கண்ணபிரான், ''மயனே ! விண்ணிலும் மண்ணிலும் இல்லாத ஒரு விசித்திரமான சபா மண்டபத்தைப் பாண்டவர்க்குச் செய்'' என்றார். மயன் தருமரை வணங்கி அவருடைய அருளையும் பெற்றான்.

கண்ணபிரான் எல்லோரிடத்திலும் பிரியாவிடை பெற்றுக் கொண்டு துவாரகைக்குப் புறப்பட்டார். சுபத்திரையும் திரௌபதியும் பெருமானுடைய திருவடியில் விழுந்து கண்ணீரால் நனைத்தார்கள். அன்பின் மிகுதியால் எல்லை தாண்டுகின்ற வரை யுதிஷ்டிரரே பகவானுக்குத் தேர் ஓட்டினார். அர்ச்சுனன பொன் காம்புடன் கூடிய வெண்சாமரை வீசினான். பீமசேனன் வைடூரியக் காம்புடைய குடைபிடித்தான். நகரத்தின் எல்லை தாண்டியதும், எல்லோருக்கும் விடைகொடுத்து, பெருமான் துவாரகாபுரி சேர்ந்தார்.

சபா மண்டபம் :

விருஷபார்வா என்ற அசுர மன்னன் தனக்கிருந்த எண்ணில்லாத நவநிதிகளையும் நவரத்தினங்களையும், கயிலைமலையின் வடபுறத்தில் மைநாக மலையின் அருகில் இரண்ய சிருங்கம் என்ற மலையில் உள்ள பிந்துரஸ் என்ற மடுவில் இட்டிருந்தான். அவைகளையெல்லாம் எடுக்கவேண்டும் என்று மயன் கருதி அங்குச் சென்றான் அங்குள்ள கிங்கரர்களைக் கொண்டு எண்ணற்ற பொற்குவியல்களையும் இரத்தின மணிகளையும் எடுப்பித்துக் கொணர்ந்து பீமனுக்குத் தந்தான். வருணனுடைய தேவதத்தம் என்ற வெண்சங்கத்தையும் அதிலிருந்து கொணர்ந்து தனஞ்சயனுக்குத் தந்தான்.

ஆயிரக்கணக்கான அந்தணர்கட்கும் வறியவர்கட்கும் பாயாசத்துடன் அன்னம் வழங்கி, நல்ல நாளில் பதினாயிரம் முழம் பரப்புள்ளதாக மகாமண்டபத்தைப் புதுக்கத் தொடங்கினான். பொன்னும் மணியும் இழைத்து எங்கும் இல்லாத விசித்திர வேலைப் பாட்டுடன் பதினான்கு மாதங்களில், ஆயிரக் கணக்கான ஏவலர்களைக்கொண்டு அந்த மகா சபையைப் புதுக்கினான். மேலே நவரத்னங்களால் தாமரைக் குளத்தைச் செதுக்கினான். கீழே பளிங்குக் கல்லாம் தளவரிசை செய்தான். அதனால் குளம் இல்லாத இடத்தில் குளம் என்று, பலர் ஏமாந்துபோனார்கள். பவளமும் முத்தும் கரையில் பதித்து பொன்மயமான தாமரைத் தடாகத்தையும் அமைத்தான். தருமர் மயனை மிகவும் பாராட்டினார். அதில் தருமர் நல்ல நாளில் நுழைந்து அரியணைமேல் இருந்து வெகு கருணையுடன் அரசு புரிந்தார்.

நாரதர் வருகை :

ஒரு சமயம் தேவ இருடியாகிய நாரத முனிவர் அங்கு வந்தார். அவரைமிக்க அன்புடன் எல்லோரும் வணங்கினார்கள். வேத புராண சாஸ்திரங்களின் கரை கண்டவரும் அளவு இல்லாத மகிமையுடையருமாகிய நாரதமாமுனிவர், தருமா ! உன் அறிவு அற நெறியில் செல்கின்றதா ? உன் பரிசனங்கள் குடிகளுக்கு நலம்புரிகிறார்களா ? உன் செல்வத்துக்கு நோய் வராமல் இருக்கின்றதா ? என்றார்.

தருமர், ''சுவாமி! செல்வத்துக்கு நோய் வருமா? ''ஆம். செல்வத்துக்கு இரண்டு நோய்கள், தானும் உண்ணாமை, பிறரையும் உண்ணவிடாமை, என்று இரு நோய்கள் பிடித்துக் கொள்ளும். தருமா! உன்னுடைய ஆட்சியில் மக்கள் பொய், சூது, வஞ்சனை. கலப்படம், நாஸ்திகம் முதலிய தீக்குணங்கள் இன்றி, அன்பு அடக்கம் உதவிபுரிதல் முதலிய நன்னடையில் நிற்கின்றார்களா?'' என்பன வாதி பல வினாக்களை வினவினார்.

தருமர், ''அறிவு வடிவே! எல்லாம் தங்கள் ஆசீர்வாதத்தால் செம்மையாக இருக்கின்றன. தேவரீர் எல்லா உலகங்களிலும் சென்று வருபவர். இதுபோன்ற சபை எங்காவது இருக்கின்றதா?'' என்றார்.

பிரம்மபுத்திரர், *''அஜாத சத்துருவே! மனித உலகிலே இதுபோன்ற சபை எங்கும் இல்லை'' என்று கூறி, பிரம்மசபை இந்திர சபை வருணசபை குபேரசபை யமசபை இவைகளின் பெருமைகளையும், அந்தந்த சபையில் உள்ள அரசர்கள் முனிவர்கள் ஆகியோர் பெருமைகளைப் பற்றியும் மிக விரிவாக விளம்பினார்.

''யுதிஷ்டிரனே! அறக்கடவுளின் அரிய பெரிய சபையில் அநேக மன்னர்களுடன் உனது பிதாவாகிய பாண்டு மன்னர் அமர்ந்திருந்தார். பாண்டு என்னைப் பார்த்து, பூவுலகில் வேள்வி செய்ததனால் அரிச்சந்திரன் இந்திர வுலகம் பெற்று இணையில்லாத இன்பத்தையடைந்துள்ளான். அந்த மகத்தான இராசசூய மகா வேள்வியைப் புரியுமாறு, நான் சொன்னதாக என் மகன் தருமனிடம் சொல்லும்'' என்றார். தந்தைக்கு இன்னும் மேற்கதி கிடைக்கும். தீர்க்கமாக ஆராய்ந்து யாகத்தைச் செய்க. தருமனே! பின் ஒரு காலம் உன் பொருட்டு அரசவம்சம் அழியும்'' என்று கூறிவிட்டுச் சென்றார்.

இராசசூயஞ் செய்ய வேண்டும் என்று தருமர் விரும்பினார். தம்பியரும் அமைச்சரும் அவசியம் அந்த மாமகத்தைச் செய்து சம்ராட் என்ற பட்டத்தைப் பெறவேண்டும் என்று ஒருமுகமாக உரைத்தார்கள். தௌமியர், வியாசர், விராடன், துருபதன் முதலியவர்களுடன் ஆலோசித்தார். தக்க ஒரு தூதனையனுப்பிக் கண்ணபிரானை அழைத்து அவரிடம் கேட்டார்.

மாதவர் சொல்லுகின்றார்: ''பரதகுல மாணிக்கமே! நீர் எல்லா வகையாலும் இராசசூயம் என்ற பெரும் வேள்வியைச் செய்யத் தகுதியுடையவர். உலகிலேயுள்ள எல்லா மன்னர்களும் உமக்கு அடங்கிக் கப்பங் கட்ட வேண்டும். ஆனால், அதற்கு ஒரு பெருந்தடையிருக்கின்றது. மகத நாட்டை கிரி விரஜம் என்ற இடத்தில் இருந்து அரசு புரிகின்ற ஜராசந்தன் என்பவனை வெல்வது அரிது. அவன் பேராற்றல் படைத்தவன். அவனைக் கண்டு உலகிலேயுள்ள அரசர்கள் சிங்கத்தைக் கண்ட மான் கூட்டம்போல் அஞ்சுகின்றார்கள். ஜராசந்தனுடைய புதல்வியர் அஸ்தி, பிராஸ்கி என்ற இருவர்களைக் கம்சன் கல்யாணஞ் செய்துகொண்டான். கொடியவனாகிய கம்சனை நான் கொன்றதனாலும், எங்கள் குலத்தினர் மீதுள்ள பொறாமையாலும் ஜராசந்தன் எங்களை மிகவும் பகைத்தான். அவனுடன் எங்கள் பதினெட்டுக் குலத்தாரும் நானும் பதினெட்டு முறை போர் புரிந்து தோற்றோம். அவ்வாறு போர் நடந்த மூன்று ஆண்டுகள், எங்களுக்கு முந்நூறு ஆண்டுகள்போல் இருந்தன. அந்த ஜராசந்தனுடைய தொல்லைக்கு அஞ்சி, நாங்கள் மதுரையை விடுத்து மேல் கடல் ஓரம் ரைவதகமலைக்கு அருகில் ஒரு நகரை உண்டாக்கித் துவாரகாபுரியில் சேர்ந்து கவலையின்றி வாழ்கின்றோம்.

அந்த மூடனும் ஆற்றல் படைத்தவனுமான ஜராசந்தன், நரமேதம் என்ற யாகத்தைச் செய்யக் கருதி இதுவரை 84 அரசர்களைப் பிடித்துக் கிரிவிரஜம் என்ற இடத்தில் மலைக்குகையில் அடைத்து வைத்திருக்கின்றான். இன்னும் 16 பேர் கிடைத்தவுடன், அவர்கள் தலையை வெட்டி ஓமத்தீயில் இட்டு யாகஞ் செய்யத் திட்டம் போட்டிருக்கின்றான். அவனைக் கண்டுக் அரசகுலமே அஞ்சுகின்றது. சிசுபாலன் முதலிய அரசர்களும் அவனுக்குத் துணை புரிகின்றார்கள். அவனுடைய ஆற்றல் கடத்தற்கரிது'' என்றார்.

தருமர், ''கண்ணா! ஜராசந்தன் வரலாறு யாது? அவனுக்கு அத்தனை ஆற்றல் எப்படியமைந்தது''? என்று வினவினார்.

ஜராசந்தன்:

மாதவர் கூறுகின்றார். மகததேசத்தின் அதிபதி பிருகத்ரதன் என்பவன். மூன்று அக்ரோணி சேனைகளுக்குத் தலைவன், அவன் இரண்டாவது இந்திரனைப்போல விளங்கினான். அவன் ஆற்றலில் இயமனுக்கும், பொருளில் குபேரனுக்கும். ஒளியில் சூரியனுக்கும் சமமானவன். காசிராஜ குமாரிகள் இரட்டையாகப் பிறந்தவர்கள். அவர்களை மணம் புரிந்து கொண்டான். அவ்விருவரிடமும் பட்சபாதம் இன்றிச் சமமாக நடந்து கொண்டான், நீண்ட காலம் வாழ்ந்தும் அவனுக்கு மகப்பேறு உண்டாகவில்லை மனைவியருடன் தவவனம் புகுந்தான்

*தருமருக்கு வேறு பகையே பிறக்காமையால் அஜாத சத்ரு என்ற பேர் அமைந்தது.

அங்கே கௌதம மரபினரும் கட்சீவாதனுடைய புதல்வரும் ஆகிய சண்ட கௌசிகரை ஒரு மரத்தடியில்கண்டு அவருக்குப்பணிவிடைபுரிந்தான். அவரிடம் ''தனக்குப் புதல்வன் வேண்டும்'' என்று கூறி முறையிட்டான். அப்போது அம் முனிவருடைய மடியில் ஒரு மாங்கனி விழுந்தது. அவர் அக்கனியை எடுத்து மந்திரித்துக் கொடுத்தார். இதன் மூலம் உனக்குச் சிறந்த மகன் பிறப்பான்.

(1) அந்தணர்களிடத்தில் அன்புடனிருத்தல். (2) போரில் பிறரால் வெல்லக் கூடாமை, (3) அறிவு, (4) அதிதிகளிடம் அன்புடைமை. (5) வறியவர்களை ஆதரிப்பது, (6) மிக்க அதிகமான உடல் வலிமை, (7) என்றுமுள்ள புகழ், (8) குடிகளின் அன்பு ஆகிய இந்த எட்டு வரங்களை உன் மகன் அடைவான், போய் வா;'' என்றார்.

48689

மன்னவன் தன் இரு மனைவியர்க்கும் அம் மாங்கனியைப் பிளந்து கொடுத்தான். அவர்கள் அதையுண்டு கருவுற்றிருந்தார்கள். உரிய காலத்தில் பாதிப் பாதியான உருவங்களை இருவரும் பெற்றனர். அதில் உயிர்த் துடிப்பும் இருந்தது. அப்பெண்கள் நாணத்துடன் அந்தப் பாதி பாதி உடம்புகளை முடிக் கோட்டை வாயிலுக்கு வெளியே எறிந்து விட்டார்கள். ஜரை என்ற ஒரு துஷ்ட தேவதை அதைத் தின்ன வந்தது. அதை எடுத்து ஒன்று சேர்த்தது. உடனே அதற்கு உயிர் வந்து விட்டது. ஜரை என்ற பெண் அக்குழந்தையை பிருகத்ரதனிடம் கொடுத்து, நீ என்னை முன்னொரு முறை ஆராதித்தாய், அதனால் இவனை உயிர்ப்பித்துத் தருகின்றேன் என்று கூறி மறைந்தது. ஜரை என்ற தேவதையால் — சந்தம் — பொருந்தியபடியால் ஜராசந்தன் என்று பேர் பெற்றான்.

ஜராசந்தன் வளர்ந்து எல்லாச் சிறப்பும் உடையவனாக ஆனான். சண்டகௌசிக முனிவர் மகத நாட்டிற்கு வந்தார், பிருகத்ரதன் மிகுந்த அன்புடன் தொழுதான். குமாரனையும் அரசையும் அவரிடம் ஒப்புவித்தான். சண்ட கௌசிகர், ''மன்னவனே? கருடனுடைய வேகத்தை மற்றப் பறவைகள் தொடர முடியாததுபோல் உன் மகனுடைய செயலை மற்றப் அரசர்கள் அனுசரிக்கமாட்டார்கள். ஆற்றின் வெள்ளம் மலைக்குத் தீங்கு செய்ய மாட்டாது. அதுபோல் தேவர்கள் விடுகின்ற கணைகளும் இவனுக்குத் தீங்கு செய்ய மாட்டா. இவன் மேருமலை போல சிறந்து விளங்கி உலகைப் பரிபாலனஞ் செய்வான்'' என்று ஆசி கூறி விட்டுச் சென்றார்.

ஜராசந்தன் முடி சூடிக்கொண்டு அரசு புரியும்போது அவனுடைய புதல்வியர் (கம்சனுடைய மனைவியர்) அவன் காலில் விழுந்து அழுதார்கள். அப்போது அந்த ஜராசந்தன் என் மீது கோபித்துக் கதாயுதத்தை 99 சுற்றுக்கள் சுற்றி கிரிவிரஜத்திலிருந்து எறிந்தான். நான் அப்போது மதுரையிலிருந்தேன். அந்தக் கதாயுதம் 99 யோசனை தூரத்தில் சென்று மதுரைக்கு அருகில் விழுந்தது. அந்த இடத்திற்கு கதாவசானம் என்று பேர் வழங்குகின்றது. ஆகவே ஜராசந்தனை வதைத்தாலன்றி இராசசூயம் செய்வது அரிது'' என்றார்.

தருமர் இதைக்கேட்டு, ''பெருமானே! யாகம் புரியும் முயற்சியை விட்டு விடுவது தான் நன்மை. 'தேவரீரை வென்ற அவனை நாங்கள் எவ்வாறு வெல்ல முடியும்?'' என்றார். பீமனும் அர்ச்சுனனும் எப்படியும் முயன்று ஜராசந்தனை வதை செய்வோம்'' என்றார்கள்.

வாசுதேவர், ''தருமரே! ஜராசந்தனை நேரில் போரில் வெல்ல முடியாது. பீமனும் அர்ச்சுனனும் நானும் மூன்று அக்கினிகள் போல் மறைமுகமாகச் சென்று தனிமையில் சந்தித்து மற்போரினால் மாய்த்து விடுவோம்'' என்று கூறி அவரிடம் விடைபெற்று பீமார்ச்சுனர்களுடன் மகததேயத்தை நோக்கிப் புறப்பட்டார். மகத நாட்டில் அருகில் உள்ளதும், எப்போதும் இவர்களால் பூசிக்கப்பட்டதுமாகிய சைத்ய மலைச் சிகரத்தைக் கைகளால் உடைத்தெறிந்தார்கள். அப்போது ஜராசந்தனுக்குத் தீய சகுனங்கள் உண்டாயின.

கண்ணனும் பீமனும் விசயனும் ஸ்நாதகப் பிராம்மணர் வடிவத்தைக் கொண்டு கோட்டை வாயில் வழியே செல்லாமல் வேறு குறுக்கு வழியே சென்று ஜராசந்தனுடைய அரண்மனைக்குள் சேர்ந்தார்கள். ஜராசந்தன் அவர்களை அந்தணர்கள் என்று எண்ணி, எதிர்கொண்டு அழைத்து வணக்கம் செய்து உபசரித்தான். ''உங்களுக்கு நான் என்ன செய்ய வேண்டும்? வேண்டியதைத் தருகின்றேன்: கேளுங்கள்'' என்றான்.

கிருஷ்ணர், ''வேந்தனே! அரசர்களைப் பிடித்துக் கொன்று யாகஞ் செய்வது என்பது மனித தருமம் ஆகாது; அது அரசகுலத்துக்கே இழிவு. பாவமான இந்தச் செய்கையைக் கண்டு உன்னைக் கண்டனம் புரிய வந்திருக்கின்றோம். எங்களுக்கு இப்போது யுத்த தானந் தருவாய்'' என்றார். இதைக்கேட்ட ஜராசந்தனுடைய புருவம் நடுநெற்றிக்குச் சென்றது. கண்கள் சிவந்தன. ''நீங்கள் யார்? உண்மையை உரையுங்கள்'' என்றான்.

கண்ணபிரான், ''ஜராசந்தனே: நான் யதுகுலத்து மன்னன் கிருஷ்ணன்; இவர்கள் மதிகுலத்து மன்னர் தருமருடைய தம்பியர்கள்: இவன் பீமன், இவன் அர்ச்சுனன். எங்கள் மூவரில் ஒருவனுடன் நீ மற்போர் புரியக் கடவாய்'' என்றார். ஜராசந்தன் பீமனுடன் போர் புரிய இசைந்தான். தன் மகனாகிய சகதேவனுக்குப் பட்டாபிஷேகம் செய்துவைத்தான்.



பழனி ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமி கோயிலின் சார்பில் நடைபெற்ற பாவைவிழாவிற் கலந்து கொண்டு சிறப்பித்த பெருமக்கள் (10—1—71)

திருஇந்தளூர் ஸ்ரீ பரிமளரங்கநாதர் கோயிலிலும், ஸ்ரீ தான்தோன்றீசுவரர் கோயிலிலும் நடைபெற்ற பாவை விழாவிற் கலந்து கொண்டு சிறப்பித்த பெருமக்கள் (16—1—71)



கோவை மாவட்டம் ஸ்ரீ அவிநாசிலிங்கேசுவரர் தேவஸ்தானத்தில் ஸ்ரீ கருணாம்பிகை அம்மனுக்கு நிகழ்ந்த கோடி அர்ச்சனையில், தவத்திரு. சுந்தர சுவாமிகள், ஸ்ரீ திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள், ஸ்ரீலஸ்ரீ மதுரை ஆதீனத் தலைவர், தவத்திரு. சாந்தலிங்க இராமசாமியடிகள், காஞ்சி ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச சுவாமிகள், முன்னாள் கோவைத் துணையாணையர் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தல்.

Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Admn.) Dept., Madras-34
Printed at GeneralPrinters, 14-Poonamallee High Road, Madras-3. Editor: N.R.MURUGAVELL, M. A ,M.O.L.